www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

1 - 30 செப்டம்பர் '89

4-20-21

விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




# ஓட்டுக்கட்சி அரசியலில் கிரிமினல்களின் ஆதிக்கம்!

padippakam

www.padippakam.com

# வாசகர் கடிதம்




அன்புள்ள ஆசிரியருக்கு,

✱ இதழ் எண் 18ல் வெளியான 'சுதந்திரத்'துக்கு முன்னும் - பின்னும் என்ற படக்கட்டுரை, தக்க தருணத்தில் வெளிவந்துள்ள அரிய படைப்பு. ''தீர்மானிக்கும் சக்தியாக ஜே.வி.பி'' என தலைப்பிட்ட ஈழப் பிரச்சினை பற்றிய கட்டுரை, புரட்சியாளர்களின் கூர்மையான பார்வையை - கடமை, நோக்கங்களை எடுப்பாக சுட்டிக்காட்டியுள்ளது. ''இன்றைய இந்தியா'' புகைப்படங்கள் தெளிவாக இல்லாவிட்டாலும் அதன் கரு இன்றைய மாணவ சமுதாயத்துக்கு விழிப்புணர்வூட்டுவதாக சிறப்பாக அமைந்துள்ளது.

த.இன்பசுரபன் — கடலூர்

✱ தாங்கள் சார்ந்துள்ள புரட்சிகர அமைப்புகள் ஈழத்தின் மீதான இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக மேற்கொண்ட பிரச்சார இயக்கம் சம்பந்தமான விடயங்களை ஏனைய தோழர்களுக்கும், மற்றும் பொதுமக்களுக்கும் இங்கு எம்மால் இயன்றளவு எடுத்துக் கூறிவருகிறோம். புறச் சூழலில் பல எதிர்ப்புகட்கு மத்தியில் தாங்கள் நடத்திய எதிர்ப்பியக்கப் பிரச்சாரத்தை நாங்கள் தோழமையுடன் ஆதரிக்கிறோம்.

வாசகர் வட்டம் — சுவிட்சர்லாந்து

✱ புதிய ஜனநாயகத்தின் ஒவ்வொரு எழுத்துக்களும் என் போன்ற இளைஞர்களைத் தட்டி எழுப்பி புரட்சிப் படையில் அணி சேர்ப்பதாக உள்ளன. புரட்சிகர ஏடான புதிய ஜனநாயகத்தைப் பற்றி என்னால் இயன்ற அளவு இளைஞர்களிடையே பிரச்சாரம் செய்து வருகிறேன். ஆட்சியாளர்களின் அக்கிரமங்களை எடுப்பாக விளக்கி வரும் தங்கள் இதழுக்கு எனது புரட்சிகர வாழ்த்துக்கள்!

அண்ணாதுரை — ஆலத்தூர்

✱ கம்யூனிசம் செத்து விட்டது; முதலாளித்துவமே ஜனநாயகப் பண்பு நிறைந்த கொள்கை என்று சோ முதல் மணியன் வரை பல பழம்பெருச்சாளிகள் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆனால் அவர்களால் புகழப்படும் முதலாளித்துவத்தின் சூத்திரதாரிகளான லஞ்சப் பேர்வழி லின்சாடா, கொலைகார அம்பானி முதலானோரைப் பற்றி வாயே திறப்பதில்லை. மறுபுறம் புரட்சியாளர்களை கொலைகாரர்களாக சித்தரிக்கிறார்கள். இந்த கபட வேடதாரிகளை தோலுரித்துக் காட்டுங்கள்.

வாணன் — சென்னை-4

✱ தற்செயலாக நான் புதிய ஜனநாயகம் இதழைப் படித்தேன்; மகிழ்ந்தேன். நாட்டு நடப்புகளை இவ்வளவு துல்லியமாக எழுத உங்களால் எப்படி முடிகிறது என்று வியந்தேன். தங்கள் புரட்சிப்பணி தொடரட்டும்.

சௌகத் அலி — பொன்மலை

*அன்பார்ந்த*

*வாசகத் தோழர்களே,*

*நிதி நெருக்கடியாலும், பத்திரிக்கை காகித விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு காரணமாகவும் செப் 1-15 தேதியிட்ட புதிய ஜனநாயகம் இதழ் எண் 20யை எம்மால் வெளியிட இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெளிவித்துக் கொள்கிறோம். எனவே இதழ் எண் 20-21 யைச் சேர்த்து ஒரே இதழாகத் தற்போது வெளியிடுகிறோம்.*

*— ஆசிரியர் குழு*

## அதிகார வெறிபிடித்த கல்வி வியாபாரிகள்! அவதிப்படும் ஆசிரியர்கள்!

வேதாரண்யம் தனியார் பள்ளிகள் அதிகம் உள்ள சரகம் ஆகும். இங்குள்ள அனைத்து தனியார் பள்ளி நிர்வாகிகளின் சர்வாதிகாரத்தினால் அனைத்து ஆசிரியர்களும் அவதிக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

வேதாரணியம், ஆயக்காரன்புலம் 4ம் சேத்தியிலுள்ள கோவில்குளம் என்னுமிடத்தில் அவ்வூரைச் சேர்ந்த காசிநாதன் என்னும் மேலாளரைக் கொண்டு ஒரு பள்ளி இயங்கி வருகிறது.

அப்பள்ளியில் தலைமை ஆசிரியராக மணவழகனும், உதவி ஆசிரியர்களாக விஜயகுமார், சாமிநாதன் என்பவர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

இதில் விஜயகுமார் என்பவர் மேலாளர் காசிநாதனின் மருமகனாவார். இவர் அப்பள்ளியின் இளநிலை ஆசிரியராவார். காசிநாதன் தன் மருமகனை தலைமையாசிரியராக நியமனம் செய்ய வேண்டும் என்ற ஆசையின் காரணமாக, ஏற்கனவே தலைமையாசிரியராக பதவி வகித்து வந்த திரு.மணவழகன் அவர்களை, விதிகளை மீறி பதவியிறக்கம் செய்து விஜயகுமாரை தலைமையாசிரியராக நியமித்தார்.

தன்னை பதவியிறக்கம் செய்ததை எதிர்த்து மணவழகன் வழக்கு மன்றம் சென்றார். வழக்கு மன்றமும் இரண் ஆண்டுகள் நத்தை வேகத்தில் நகர்ந்து, கல்வி விதிகளின்படி மணவழகன் தான் தலைமையாசிரியராக இருக்க வேண்டும் என்றும், மேலாளரின் செயல் கண்டிக்கத்தக்கது என்றும் தீர்ப்பு வழங்கியது.

வழக்கு மன்றத் தீர்ப்புக்குப் பின் மணவழகன் மீண்டும் தலைமையாசிரியர் பொறுப்பு ஏற்கிறார். இதனால் ஆத்திரமடைந்த மேலாளர் பள்ளியை இழுத்து மூடியதுடன், தளவாடச் சாமான்களையும் எடுத்துச் சென்றுவிட்டார். பள்ளி மூடப்பட்டதன் காரணமாக பள்ளி இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இது, கல்வித்துறையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பிறகு, கல்வித்துறையின் தலையீட்டின் காரணமாக தனியொரு இடத்தில் பள்ளி ஆசிரியர்களின் பொறுப்பில் தனியானதொரு இடத்தில் கொட்டகை போடப்பட்டு தற்போது பள்ளி இயங்கி வருகிறது.

மேலாளரின் மருமகனுக்கு தலைமையாசிரியர் பதவி கொடுக்க முயற்சித்த தினத்திலிருந்து பிரச்னைகளை உருவாகன காரணத்தால் மற்ற இரு ஆசிரியர்களுக்கும் ஊதிய உயர்வு, மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு போன்றவற்றை இழந்து விட்டார்கள்.

இன்று 5வது ஊதியக் குழுவின் பரிந்துரை வந்துள்ள நிலையில், அந்த ஆசிரியர்களோ இன்றும் மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைத்த ஊதிய நிர்ணயத்தின் அடிப்படையில்தான் ஊதியம் பெற்று வருகிறார்கள்.

பள்ளியின் நலனில் அக்கறை கொண்ட அவ்லூர் பொதுமக்களும், அப்பள்ளி ஆசிரியர்களும், வேதாரண்யம் பள்ளித்துணை ஆய்வாளர் அலுவலகம் முன் இப்பள்ளியினை அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர். ஆனாலும் அவர்களின் கோரிக்கையும் நிறைவேறவில்லை. அப்பள்ளி ஆசிரியர்களின் அவல நிலையும் மாறவில்லை.

தனியார் கல்வி நிலையங்களின் முறைகேடுகளைப் பற்றி முதல்வர் கருணாநிதி ஒப்பாரி வைக்கிறார். ஆனால் அவரது அரசோ பீர் உற்பத்தி செய்வதில் அக்கறையைக் காட்டுகிறது. இலாப வெறியும், அதிகார வெறியும் கொண்ட கல்வி வியாபாரிகளுக்கு எதிராக மட்டுமின்றி, கேடுகெட்ட அரசுக்கு எதிராகவும் உழைக்கும் மக்களும் ஆசிரியர்களும் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

தகவல்:
புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

**20-21**

1 - 30 செப்டம்பர் '89

உள்நாடு:
தனி இதழ்: ரூ.1-50
ஆண்டு சந்தா: ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# காஷ்மீர்: எரிமலையாகும் பனிமலை

பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சியில் பஞ்சாப் பிரச்சினை தீராத நோயாகத் தொடரும் அதே சமயம், காஷ்மீரத்தில் சுயநிர்ணய உரிமைப்போரும், லடாக்கியர்களின் சுயாட்சி உரிமைப்போரும் தீவிரமாகி இன்னுமொரு பஞ்சாபாக மாறியுள்ளது. தொடர்ச்சியாக கடையடைப்பு போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வெடிகுண்டு வீச்சுக்கள், போராளிகளின் பயங்கரவாதத் தாக்குதல்கள் என்று மாநிலமே உள்நாட்டுப் போர் நிலைமையில் உள்ளது.

ஆகஸ்ட் 15 அன்று போலிச் சுதந்திரத்தைப் புறக்கணிக்கக் கோரி போராளிகள் விடுத்த கடையடைப்பு போராட்டம் முழுவெற்றி பெற்றது. அரசு வாகனங்களும் அலுவலகங்களும் கூட இயங்க முடியவில்லை. இந்திய தேசியக் கொடி பல இடங்களில் தீவைத்துக் கொளுத்தப் பட்டது. அதேநாளில் முதல்வர் பரூக் நடத்திய 'சுதந்திர'தின - கொடியேற்றுவிழா நிகழ்ச்சியில் சீருடையணியாத போலீசுக்காரர்களைத் தவிர பொதுமக்கள் யாருமில்லை.

காஷ்மீரத்தை பாகிஸ்தானுடன் இணைக்கக்கோரும் முஸ்லீம் அடிப்படைவாதிகள், ஆகஸ்ட் 14 அன்று பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை வெளிப்படையாக கொண்டாடியதோடு, ஆகஸ்ட் 16 அன்று பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் ஜியாவின் நினைவு நாளையொட்டி கடையடைப்பையும் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

காஷ்மிரின் 'கலவரநிலை' கண்டு விழிபிதுங்கி நிற்கும் ராஜீவ் கும்பலும் அதன் பங்காளி பரூக் கும்பலும் போராட்டத்தை ஒடுக்க போலீசையும் ராணுவத்தையும் குவித்து அரச பயங்கர வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அறிவிக்கப்படாத அவசரநிலை ஆட்சியை நிறுவியுள் ளது. மறுபுறம், பாக். ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் - பிரிவினைவாதிகளால் நாட்டின் ஐக்கியம் - ஆதிபத்திய உரிமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இவர்களைப் பற்றிய செய்திகளைப் பத்திரிக்கைகள் தொடர்ந்து வெளியிடுவதால் நிலைமை மோசமாகிவிட்டதாகவும் கூறி, கொடு ரமான பத்திரிக்கை தணிக்கைச் சட்டத்தை ஏவிவிட்டுள்ளது. மீறினால் ரூ.10,000 அபராதமும், ஓராண்டு கடுங்காவல் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று கொக்கரிக்கிறது பரூக் கும்பல். இக்கருப்புச் சட்டத்தை எதிர்த்து காஷ்மீர பத்திரிக்கையாளர்கள் சட்ட நகல் எரிப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு, அரசு நிகழ்ச்சிகளையும் புறக்கணிக்க முடிவு செய்துள்ள னர். 'அரசு பயங்கரவாதத்தின் மூலம் போராட்டத்தை ஒடுக்கிவிட 'பயங்கரவாதிகளுடன் மோதல், எல்லை கடந்து வந்த பாகிஸ்தான் உளவாளிகளுடன் மோதல்' என்கிற பெயரில் பல படுகொலைகளை நடத்துகிறது. பல நாட்கள் பல நகரங்களிலும் ஊரடங்கு உத்திரவு போடுகி றது. சித்திரவதை முகாம்களை நடத்துகிறது. பரூக் அரசுக்கு அதன் பாணியிலேயே போராளி கள் பதிலடி கொடுத்து வருகின்றனர். அரசின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு எதிராக ஆளும் தேசிய மாநாட்டுக்கட்சியின் முக்கிய பிரமுகரை போராளிகள் சுட்டுக் கொன்றனர். அரண்டுபோன கட்சித் தலைவர்கள் பலர் தாம் தேசிய மாநாட்டுக் கட்சியிலிருந்தே விலகிவிட் டதாக தொடர்ந்து பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து வருகின்றனர்.

இந்தியா போலிச் சுதந்திரத்தை அடைந்த நாளிலிருந்தே, மக்களது விருப்பத்தை மீறி காஷ்மீர சமஸ்தானத்தை இந்தியாவுடன் வலுக்கட்டாயமாக இணைத்த காலத்திலிருந்தே காஷ் மீர மக்கள் தங்களது சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வருகிறார்கள். சுயநிர்ணய உரிமை கோரி போராடுபவர்களில் ஒரு பிரிவினர் இந்தியாவின் காஷ்மீரையும், பாகிஸ்தான் வசமுள்ள ஆசாத் காஷ்மீரையும் விடுவித்து தனிநாடாக்கக் கோரி போராடுகின்றனர். மற்றொரு பிரிவின ரான முஸ்லீம் அடிப்படைவாதிகள் பாகிஸ்தானுடன் இணைக்கக் கோருகின்றனர். இரு தரப்பி னரையும் தேசவிரோத - பிரிவினைவாத - பயங்கரவாத சக்திகளாகச் சாடும் இந்திய அரசு, இவர்களுக்கு பாகிஸ்தான் ஆதரவும் ஆயுத உதவியும் அளிப்பதாக குற்றம் சாட்டுகிறது. இந்தியாவைப் போலவே பாகிஸ்தானும் தனது தேசியவெறி நோக்கங்களுக்காக காஷ்மீர பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்வது உண்மைதான்; ஆனாலும் அது முஸ்லீம் அடிப்ப டைவாதிகளைத்தான் ஆதரிக்கிறதே தவிர, ஆசாத் காஷ்மீரையும் இணைத்து தனிநாடாக்கப் போராடுபவர்களை அல்ல. தன் வசமுள்ள ஆசாத் காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைப் போராளி களை சிறையிலிட்டு வதைக்கவும் செய்கிறது.

பாசிச ராஜீவ் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து அரசியல் விபச்சாரத்தின் மூலம் அரியணை ஏறிய பரூக் கும்பலோ, உல்லாச சுகபோக களி வெறியாட்டக் கும்பலாக மாறி அரசு நிதியைச் சூறையாடுகிறது. அதே சமயம் காஷ்மீர் - லடாக்கிய மக்கள் வறுமை, வேலையின்மை, விலையேற்றத்தால் அடிப்படைத் தேவைகளைக்கூட அடைய முடியாமல் அல்லற்படுகின்றனர்.

எதிர்கட்சிகள், காஷ்மீரில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தையும், பத்தி ரிக்கை தடைச்சட்டத்தையும், பரூக் கும்பலின் ஊழல் - கொள்ளையையும் சாடுகின்றனரே தவிர, காஷ்மீர மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரிக்கவில்லை. பஞ்சாபைப் போலவே காஷ்மீர பிரச்சினையையும் தீர்க்க வக்கற்று விட்டதாகக் கூறி, ராஜீ வைத் தனிமைப்படுத்தி தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதிலேயே குறியாக உள்ளனர். போலிக் கம்யூனிஸ்டுகளோ இப்போராட்டங்கள் அனைத்தும் ஏகாதிபத்திய சீர்குலைவு - பிளவுவாத நடவடிக்கைகள் என்று எதிர்க்கின்றனர்.


*சில சீர்திருத்த* சலுகைகளாலோ அல்லது பயங்கரவாத ஒடுக்கு முறையினாலோ தேசிய இன, பழங்குடி மக்களின் போராட்டங்களை ஒருக்காலும் கட்டுப்படுத்திவிட முடியாது. தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையும், சிறுபான்மை பழங்குடி மக்களுக்கு சுயாட்சி அதிகார மும் அளிக்கப்படாத வரை இம்மக்களின் போராட்டங்கள் ஒருக்காலும் ஓயாது. புரட்சியில் மலரும் புதிய ஜனநாயகக் கூட்டமைப்பில் மட்டுமே இம்மக்களின் கோரிக்கைகள் முழுமை யாக நிறைவேறும். ◆

படிப்பகம்

www.padippakam.com



## சுந்தர்ஜியின் வாக்குமூலம்



# வேறொரு கோணத்திலிருந்து...!

சுவீடனின் போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் விவகாரத்தில் தனது பங்கு - பாத்திரம் குறித்து முன்னாள் இந்திய இராணுவத் தலைமைத் தளபதி கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி வாக்குமூலம் அளித்துள்ளார். அமிர்தசரசு பொற்கோவிலின் மீது இராணுவ அதிரடித் தாக்குதல், ஈழ ஆக்கிரமிப்புப்போர் உட்பட பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலின் ஆதிக்க விரிவாக்க சதிகளிலும், இராணுவ ஆயுதக் குவிப்பு - பயிற்சியிலும் நம்பகமான விசுவாசியாக இருந்தவர் சுந்தர்ஜி. இவரிடமிருந்து தன்னை அம்பலப்படுத்தும் ஒரு வாக்குமூலத்தை எதிர்பாராத பாசிச ராஜீவ் கும்பல் திகைத்துப்போய் உள்ளது.

''இதோ இன்னுமொரு ஆதாரம்! ராஜீவ் அரசின் ஊழல் நிரூபணமாகிவிட்டது! உடனே பதவி விலகு!'' என்று குதிக்கின்றன, எதிர்க்கட்சிகள். ''போஃபர்ஸ் பீரங்கி வாங்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்தோ, ரத்து செய்வதாக மிரட்டியோ அந்தப் பேரத்தினால் 64 கோடிரூபாய் லஞ்சம் பெற்றவர்கள் பற்றிய விவரங்களைப் பெறும்படி சுந்தர்ஜி சிபாரிசு செய்தார். முன்னாள் இராணுவத் துணை மந்திரி அருண்சிங்கும் சில அதிகாரிகளும் மேற்கொண்ட இந்த முயற்சியை ராஜீவ் தலையிட்டுத் தடுத்து விட்டார். லஞ்ச ஊழல் குற்றங்களை மூடி மறைக்கிறார். இராணுவ இரகசியம், தேசியப் பாதுகாப்பு என்று புளுகுகிறார்'' என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

சுவீடன் பீரங்கி பேர ஊழலில் கிரிமினல் குற்றவாளியே பாசிச ராஜீவ்தான் என்பதில் சந்தேகமே இல்லை. அதை நிரூபிக்கும் இன்னுமொரு சாட்சியம் அளித்துள்ளார் - அப்ருவர் சுந்தர்ஜி ஆனால் அதைவிடவும் முக்கியமான சில உண்மைகள் சுந்தர்ஜியின் வாக்குமூலத்தில் புதைந்து கிடக்கின்றன. அந்த உண்மைகளை மக்கள் புரிந்து விடக்கூடாது என்பதற்காக இரண்டு தரப்புமே பெருங்கூச்சல்கள் போடுகின்றன; பெரும் புழுதியைக் கிளப்புகின்றன.

சுந்தர்ஜியின் வாக்குமூலத்தைத் தாங்கிவந்த 'இந்தியா டுடே' ஏட்டின் பேட்டியில் உள்ள அந்த விவரங்களைப் பின்வருமாறு தொகுக்க முடியும்.

☆ இராணுவத்துறையிலோ, வேறுபிற துறைகளிலோ நடக்கும் பல பெரும்பேரங்களில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத் தொகையைப் பல அரசாங்கங்களும் லஞ்சமாகப் பெறுகின்றன; ஒருவேளை இது கட்சி நிதிக்காக இருக்கலாம் என்று பழைய சம்பவங்களின் அடிப்படையில் கூற முடியும். இது ஒரு புதிய விஷயமன்று. பல காலமாக நடப்பதுதான். எந்த ஆயுத - தளவாடத்தை வாங்குகிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல; எதுவானாலும் கட்சி நிதிக்கோ அல்லது வேறு எதற்கோ ஒரு குறிப்பிட்ட அளவு லஞ்சமாக சுருட்டிக் கொள்வது என்று நினைத்தால் சுருட்டிக் கொள்ள முடியும்.

☆ எந்த ஆயுத உற்பத்தியாளரானாலும் லஞ்சம் கொடுக்க நிச்சயமாக தயாராயிருப்பார்கள். இது நன்கு தெரிந்ததுதான். பிரெஞ்சு பீரங்கியை வாங்குவதாக இறுதிமுடிவு செய்திருந்தாலும் லஞ்சம் கிடைத்திருக்கும். பெரும்பாலான அரசியல்வாதிகளும் இதைப் பெறுகிறார்கள்; ஆனாலும் முழுக்க முழுக்க நேர்மையானவர்களைப் போல நடிக்கிறார்கள்.

☆ இராணுவத்தைப் பொறுத்தவரை எந்த ஆயுத-தளவாடம் வாங்கப்படுகிறது என்பது ஒரு பொருட்டல்ல. இறுதிப்பட்டியலில் எது இடம் பெறுகிறதோ அதுவே போதும் என்று இருந்துவிடுகிறோம். அதிக லஞ்சம் என்றால் அந்த அடிப்படையிலான தரக்குறைவான ஆயுதம் வாங்கப்படலாம். இந்த விதத்தில், இது மற்ற அரசாங்கங்களைவிட வித்தியாசமானதாகத் தோன்றவில்லை. இந்தப்பேரம் பற்றியோ, முந்தைய பேரங்கள் பற்றியோ நிச்சயமான தகவல்கள் இல்லை; ஆனால் லஞ்சம் பெறுகிறார்கள் என்று பொதுவான நம்பிக்கை அடிப்படையில் கூற முடியும்.

☆ இராணுவத்துக்குத் தேவையான பீரங்கியின் தரத்தை எடைபோட்டு சிபாரிசு செய்வதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியே மோசடியானது. பிரெஞ்சு பீரங்கி மட்டுமே தகுதியானது என்று முன்தள்ளுமாறு ஒரு கும்பலே இராணுவத்துக்குள் செயல்பட்டது. ஆயுதத்தளவாடக் கமிட்டி முழுவதுமே ஆஸ்திரிய பீரங்கியை சிபாரிசு செய்யும் வகையில் உள்நோக்கத்தோடு அமைக்கப்பட்டது. இதெல்லாம் அப்பட்டமாகவே நடந்தன. இராணுவத் தளபதிகளுக்கும் அமைச்சகத்துக்கும் தெரியவே நடந்தன.

— இப்படி வாக்குமூலம் அளிக்கும் சுந்தர்ஜி, 'லஞ்சம் தருவதற்காக தளபதிகளை யாராவது அணுகினார்களா என்று தெரியாது' என்று மழுப்புகிறார். ஆனால் அப்படி நடந்தது என்று பீரங்கிபேரக் கமிட்டி உறுப்பினராக இருந்த துணைத்தளபதி இருதயகௌல் இதே 'இந்தியா டுடே' ஏட்டுக்குப் பேட்டியளித்துள்ளார்.

★ ஒரு பீரங்கி உற்பத்திக் கம்பெனி சார்பாக வெளிநாட்டுக்காரர் ஒருவர் கௌலை ஐந்து நட்சத்திர விடுதி விருந்துக்கு அழைத்தார். கௌல் மறுத்துவிட்ட பிறகு நேரடியாகவே சந்தித்து தமது கம்பெனி பீரங்கியை சிபாரிசுப் பட்டியலில் அடுத்த மேலிடத்துக்கு தள்ளுவதற்கே 2 1/2 கோடி ரூபாய் அளவு எந்த நாட்டு நாணயத்திலும் எந்த நாட்டில் வேண்டுமானாலும் தருவதாகச் சொன்னார். 5 கோடி ரூபாய் வரைக் கூடத் தரத்தயாராய் இருந்தார்.

★ கம்பெனி மற்றும் ஆள்பற்றிய விவரத்தைப் பேட்டியில் கூற கௌல் மறுத்துவிட்டார். ஆனால் இராணுவ செயலாளர் பாட்நகர் மற்றும் அந்நாள் தலைமைத் தளபதி வைத்தியாவிடம் புகார் கூறியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

★ ஆயுத சிபாரிசுக் கமிட்டியின் சிபாரிசுகள் அடங்கிய அதி உயர்ந்த இராணுவ இரகசியங்கள் லஞ்சம் தரவந்த அந்த வெளிநாட்டுக்காரரிடம் இருந்தன. இராணுவ இரகசியங்கள் உடனுக்குடன் ஆயுத உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கின்றன. ஆயுத பேரக்கமிட்டியிலேயே அவர்களுக்கு வேண்டிய - லஞ்சம் வாங்கும் ஆட்கள் இருந்தனர்.

— தேசத்தைப் பாதுகாக்கும் மிகப் புனிதமானது, கேள்விக்கே சந்தேகத்துக்கே இடமற்றது என்று கூறிக்கொள்ளும் இரா

தலைமைத்தளபதி சுந்தர்ஜி.





படிப்பகம்

னுவத்தின் யோக்கியதையை மேற்கண்ட வாக்குமூலங்கள் தெளி வாக்குகின்றன.

இன்னும் சில உண்மைகளைப் பாருங்கள்: போஃபார்ஸ் பீரங்கியை சிபாரிசு செய்ததற்காகத்தான் சுந்தர்ஜிக்கே இராணு வத் தலைமைத் தளபதி பதவி அளிக்கப்பட்டது. அடுத்தடுத்து நடந்த பின்வரும் சம்பவங்களே - சூழ்நிலையே இந்தக் குற்றச் சாட்டுக்கு ஆதாரமாக உள்ளது.

1982 முதல் 1986 வரை நான்காண்டுகளாக பிரெஞ்சு சோஃப்மா பீரங்கிதான் முதல் தரம் வாய்ந்ததாக இராணுவம் கருதியது. 1985 அக்டோபரில் சுவீடன் பிரதமர் ஓலேஃப் பால் மேயை நியூயார்க்கில் வைத்து போஃபார்ஸ் பீரங்கியை வாங்கு வது பற்றி விவாதித்தார். போஃபார்ஸ் அதிகாரிகளும் இந்திய இராணுவத்துறை செயலாளர் பாட்நகரும் இதை உறுதி செய்துள் ளனர். அதன் பிறகுதான் இராணுவத் துணை மந்திரி அருண்சிங், அப்போது துணைத்தளபதியாக இருந்த சுந்தர்ஜியிடம் பீரங்கிகள் பற்றி புதிய தரமதிப்பீடு செய்துதரும்படி உத்திரவு போட்டார். சுந்தர்ஜியின் சிபாரிசு அடிப்படையில்தான் 1986 ஜனவரியில் பிரெஞ்சு பீரங்கியோடு மூன்றாவது இடத்திலிருந்த போஃபார்ஸ் சமமாக மதிப்பீடு செய்யும் குறிப்பு பிரதமர் அலுவலகத்துக்குப் போனது. அந்த மாதம் புதுடில்லி வந்த ஓலோஃப் பால்மேயுடன் ராஜீவ் தனது பேரத்தைத் தொடர்ந்து நடத்தினார். 1986 பிப்ரவரி முதல் தேதியன்று சுந்தர்ஜி தலைமைத் தளபதியானார். அடுத்த மாதமே அதாவது 1986 மார்ச்சு 24ந் தேதியே 1427 கோடி ரூபாய்க்கு போஃபார்ஸ் பீரங்கி வாங்கும் ஒப்பந்தம் கையெழுத் தானது.



போஃபார்ஸ் ஒப்பந்தத்தை ரத்து செய்ய மறுத்ததினால் ராஜினாமா செய்த மந்திரி அருண்சிங்குடன் சுந்தர்ஜி

இப்படி போஃபார்ஸ் பீரங்கியை சிபாரிசு செய்ததற்காகத் தான் சுந்தர்ஜிக்குத் தலைமைத் தளபதி பதவி கிடைத்தது என் பதை அவர் மறுக்கிறார்.

ஆனால் சுந்தர்ஜியின் வாக்குமூலத்தைக் கண்டு அதிர்ச்சிய டைந்து போன காங்கிரசுத் தலைவர்களின் எதிர்க்குற்றச்சாட்டுக்க ளும், அவற்றுக்கு சுந்தர்ஜியின் பதிலும் அதை நிரூபிக்கின்றன.

''ஓய்வுபெற்ற பிறகு அரசாங்கப்பதவி எதுவும் தரப்பட வில்லை என்பதனால்தான் 1 1/2 ஆண்டுகளுக்குப் பிறகு சுந் தர்ஜி இப்படிக் குற்றஞ்சாட்டுகிறார். முன்னாள் தலைமைத்தளபதி கிருஷ்ணாராவ் காஷ்மீர் கவர்னராக உள்ளார். இராணுவச் செய லாளர் பாட்நகர் சிக்கிம் கவர்னராகி விட்டார். சுந்தர்ஜியின் இளைய தளபதி தயாள் சிங் பாண்டிச்சேரி துணை கவர்னராக உள்ளார். அப்படிப் பதவி தரவில்லை என்ற ஆத்திரத்தில் பேசுகி றார்'' என்று மத்திய தொழில் மந்திரி வெங்களராவ் கூறுகிறார்.

''அது பொய்; ஓய்வு பெறுவதற்கு முன்பு கவர்னராகவோ, வேறு எந்த நாட்டின் தூதராகவோ விரும்புகிறீர்களா என்று இராணுவ மந்திரி கேட்டார். நான் மறுத்து விட்டேன். வழியனுப் பும் விருந்தின் போது அதையே பிரதமர் கேட்டபோதும் மறுத்து விட்டேன். விரும்பியிருந்தால், அந்தப் பதவிக்குப் போயிருக்க முடியும்'' என்று இன்னுமொரு இரகசியத்தைக் கூறுகிறார் சுந் தர்ஜி!

www.padippakam.com

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் தெரிவிக்கும் உண்மை கள் என்ன? பாசிச ராஜீவ் கும்பல் லஞ்ச ஊழல் கிரிமினல் குற்றங்கள் செய்துள்ளது; தண்டனைக்குரியது என்பது மட்டும் தானா?

● எந்த அரசாங்கமானாலும், எந்த ஓட்டுக்கட்சி அரசியல்வாதி யானாலும், ஆயுதங்கள் உட்பட எந்தத்துறை பேரங்களானாலும், எந்த நாட்டுக் கம்பெனிகளுடன் நடத்தினாலும் லஞ்ச ஊழல் நடக்கும்.

● இராணுவம் உட்பட எல்லாத் துறைகளையும் லஞ்ச ஊழல் ஊடுருவியுள்ளது. இராணுவ இரகசியங்கள் என்று எதுவும் கிடையாது. இம்மாதிரியான லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுக ளுக்கு உடந்தையாய் இருப்பதற்காகவே சன்மானங்களாக கவர் னர், தூதர் போன்ற கௌரவமும் பொறுப்பும் மிக்க பதவிகள் தாரை வார்க்கப்படுகின்றன.

வெளிநாடுகளின் ஆயுத உற்பத்தியாளர்கள் கூட இந்த உண்மைகளை ஒப்புக் கொள்ளுகின்றனர். ''விவகாரத்தை இறுதி யாகத் தீர்மானிக்கும் நபரை நிர்பந்திக்கவும், அவரோடு நெருக்க மானவருக்கும் லஞ்சம் கொடுக்காமல் இந்தியாவில் யார் தான், எதைத்தான் சாதிக்க முடியும்?'' என்று கேட்கிறார் போஃபார்ஸ் கம்பெனியின் தலைமை நிறுவனமான நோபல் தொழிற்சாலை உயர் அதிகாரியான டார்ஸ் ஆங்ஸ்ட்ரோம்.

ஆக, லஞ்ச ஊழல் கிரிமினல் குற்றவாளியான பாசிச ராஜீவ் கும்பலைத் தண்டிப்பது விவகாரத்தின் ஒரு பகுதிதான். அதை விட முக்கியமானது நாட்டின் ஓட்டு மொத்த அரசியல் கட்டுமா னமே லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகளால் அழுகி நாறுகி றது.

''அரசியலின் தரம் குறைந்து கொண்டே போகிறது; அரசு-ஜனநாயக நிறுவனங்கள் அனைத்தும் மதிப்பிழந்து விபச்சாரத் தன்மையுடையதாகி ஒரு கும்பல் நலனுக்குரியதாகி விட்டன'' என்று எங்கும் புலம்பல் குரல்கள் கேட்கின்றன. அதற்கான ஆதா ரங்களை நிரப்பிக்கொண்டு வருகின்றன பத்திரிக்கைகள்.

● கொள்கைகள் - லட்சியங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு நடிகர் - நடிகைகளின் கவர்ச்சி அல்லது கிரிமினல் - மஃபியா கும்பல்களின் ஆயுத பலத்தை நம்பி பொறுக்கி மற்றும் கிரிமினல் அரசியலில் ஓட்டுக்கட்சிகள் தஞ்சம் புகுந்து விட்டன. 'தேச துரோகிகள்', 'கொலைகாரர்கள்', 'பாம்புகள்', 'சி.ஐ.ஏ ஏஜெண்டுகள்', 'பைத்தியங்கள்', 'எருதுகள்' என்று ஆளுங்கட்சி யினர் ஏசுகிறார்கள். 'தறுதலைகள்', 'உடன்கட்டை ஆசாமிகள்', 'திருடன்கள்' என்று எதிர்க்கட்சிகள் ஏசுகின்றனர்.

● நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் ஆபாச அராஜகக் களங்க ளாகி விட்டன. மிருக பலமிருந்தால் அவை செல்லாக்காசுகளாகி விடுகின்றன; இல்லையென்றால் ''குதிரை வியாபாரம்'' ''கழுதை வியாபாரம்'' நடக்கின்றது.

● நீதித்துறை, தேர்தல் கமிஷன், விசாரணைக் கமிஷன்கள் ஆகிய 'நடுநிலை' அரசு நிறுவனங்களே ஆளுங்கட்சிகளின் எடுபிடி அமைப்புகளாகி விட்டன. போலீசும் உளவுத்துறை நிறு வனங்களும் எதிரணியினரை வேட்டையாடுவதற்காக ஏவி விடப்படுகின்றன.

● ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் ஒருவருக்கு எதிராக மற்றவர் வீசி எறியும் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் உள்ளூர் கிரிமினல்-மஃபியா கும்பல்க ளுடன் மட்டுமல்ல சர்வதேசப் போதைமருந்து மஃபியா, ஆயுத பேர கும்பல், இரகசிய வங்கி - நிதி முதலைகளுடன் அவர்களுக் குள்ள தொடர்புகளைக் காட்டுகின்றன.

இனி ''ஒரு பிரிவு அரசியல்வாதிகள் தான் அயோக்கியர் கள், இன்னொரு பிரிவினர் அந்த அளவு இல்லை; ஒப்பீட்டு ரீதியில் ஒழுக்கமானவர்கள்'' என்பது கிடையாது.

அடிப்படையான அரசியல் அமைப்பு முறையே விபச்சார - கிரிமினல் தன்மையுடையது. இப்படிப்பட்ட மக்கள் விரோதிக ளின் நலன்களுக்காகவே உருவாக்கப்பட்டது. நேர்மையான உழைக்கும் மக்களுக்கு எதிரானது. இதைத்தான் இன்றைய நடப்பு அரசியல் உண்மைகள் சொல்லுகின்றன. இதை உழைக் கும் மக்கள் புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகத் தான் ஓட் டுப் பொறுக்கிகள் அத்தனை பேரும் பெருங்கூச்சல்கள் போடுகி றார்கள்; பெரும் புழுதியைக் கிளப்புகிறார்கள். ●

படிப்பகம்

www.padippakam.com



# சுயநிதிக் கல்லூரிகள்: ஓட்டுப்பொறுக்கிகள் - சமூகவிரோதிகளின் தங்கச் சுரங்கம்

கல்வி என்பது இப்போதெல்லாம் கொழுத்த லாபம் தரக்கூடிய தொழிலாகி விட்டது. வியாபாரம் என்று வந்துவிட்டால் அதில் நியாய அநியாயத்தைப் பார்க்க முடியாது. லாபம் மட்டும்தான் குறிக்கோளாக இருக்கும். அதிலும் குறிப்பாக பாசிச எம்.ஜி.ஆர். அரசு சாராய வியாபாரத்தை தானே ஏற்று நடத்தி, கல்லூரிகளை சாராய வியாபாரிகளுக்கு தாரை வார்த்த பிறகு சுயநிதிக் கல்லூரிகள் சிறு நகரங்களில் கூட பெருத்து விட்டன. மின்னணுவியல், கணிப்பொறி விஞ்ஞானம் போன்ற பட்டப்படிப்புகளுக்கு இன்று நல்ல கிராக்கி என்பதால், எங்கு பார்த்தாலும் இத்தகைய பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கி விட்டார்கள், கல்வி வியாபாரிகள்.

ஒரு கீற்றுக் கொட்டகையும் பெயர் பலகையும் இருந்தால் போதும்; கல்லூரி தொடங்கி மாணவர்களிடம் ஆயிரக்கணக்கில் நன்கொடை, கல்விக் கட்டணம் வாங்கிக் கொள்ளையடிக்கலாம்; அரசு நிலங்களையும் புறம்போக்கு நிலங்களையும் கல்விச் சேவை என்ற பெயரில் ஆக்கிரமிக்கலாம் என்பது இத் தொழிலின் சிறப்பு. எனவே கொட்டை போட்ட பழம் பெருச்சாளிகளான சாதி-மத டிரஸ்ட்டுகள், மடாலயங்கள், தரகு முதலாளிகளுடன் இப்போது ஓட்டுப் பொறுக்கிகளும், அவர்களின் பங்காளிகளான கள்ளச்சாராய மன்னர்களும், கிரிமினல்களும் தாம் கொள்ளையடித்த கருப்புப் பணத்தை இத்தொழிலில் குவிக்கிறார்கள். சாராய உடையாரும், கள்ள நோட்டு பங்காரு பண்டாரமும் கூட 'கல்விச் சேவை' ஆற்ற கிளம்பியுள்ளார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

மோசடியே மூலதனமாகக் கொண்ட இத்தகைய சுயநிதிக் கல்லூரிகள் கிட்டத்தட்ட 4 ஆண்டுகளாக இயங்குகின்றன. இவற்றின் முறைகேடுகள் - ஊழல்கள் பற்றி தொடர்ச்சியாக புகார்கள் வந்த பிறகு அண்மையில் டாக்டர் குழந்தைசாமி தலைமையிலான உயர்மட்டக்குழு நிறுவப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இக்குழு அனைத்து சுயநிதிக் கல்லூரிகளுக்கும் சென்று நிலைமையை ஆராய்ந்து அறிக்கையையும், பரிந்துரைகளையும் சமர்ப்பித்தது. முக்கியமாக பிழைப்புவாத அ.தி.மு.க. பிரமுகர்களான, நாடாளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை, சாராய ஜேப்பியார், எம்.பி.சண்முகம் ஆகியோர் நடத்தும் மூன்று கல்லூரிகள், திராவிட 'தளபதி' வீரமணி கும்பலின் கல்லூரி மற்றும் கோவை ஜானகி அம்மாள் கல்லூரி ஆகிய ஐந்து கல்லூரிகளும் மிக மோசமான நிலையில் உள்ளன என்பதால் நடப்பு கல்வியாண்டில் புதிதாக மாணவர்களைச் சேர்க்க பல்கலைக்கழகம் தடைவிதித்துள்ளது.

தம்பிதுரையின் அதியமான் பொறியியற் கல்லூரி ஓசூரில் ஒரு கொட்டகையில் நடைபெறுகிறது. மங்களூர் ஓடு வேயப்பட்ட அந்தக் கொட்டகை கூட இற்று விழும் நிலையில் உள்ளது. கல்லூரியின் வகுப்பறை, வரைவாளர் கூடம், பரிசோதனைக் கூடம் எல்லாமே இதில் அடங்கும். எவ்வித அடிப்படை வசதிகள் இல்லாமலும், அரசு உத்திரவுப் படி 6000 சதுர அடி கொண்ட நிலையான கட்டிடங்களைக் கொண்டதாக இல்லாமலும் கடந்த 4 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் ஒரு பேராசிரியரோ, உதவிப் பேராசிரியரோ மருந்துக்குக்கூட கிடையாது. ஆசிரியரல்லாத 6 தொழில்நுட்ப ஊழியர்கள் தான் பாடம் நடத்துகின்றனர்.

எம்.பி.சண்முகம் நடத்தும் டாக்டர் எம்.ஜி.ஆர் பொறியியற் கல்லூரி தற்காலிகமாக ஒரு கட்டிடத்தில் சென்னை அண்ணா நகரில் இயங்கி வருகிறது. ஈராண்டுக்கு மேலாகியும் கல்லூரிக்கு நிலையான கட்டிடமோ, பரிசோதனைக் கூடமோ, உபகரணங்களோ கிடையாது. வேடிக்கை என்னவென்றால் கல்லூரி நிர்வாகம் இன்றுவரை பரிசோதனைக்கூட உபகரணங்கள் வாங்க விண்ணப்பிக்கக் கூட இல்லை.

பங்காரு பண்டாரத்துடன் சாராய ஜேப்பியார் — கல்விக்கடை விரித்திருக்கும் கிரிமினல்கள்.



சென்னை வட அகரத்திலுள்ள ஜேப்பியாரின் சத்தியபாமா கல்லூரியில் பொறியியல் மாணவர்களுக்கான கொல்லுப்பட்டறை பயிற்சியும், வகுப்பறையும் வராண்டாவிலேயே நடத்தப்படுகிறது. இரண்டாமாண்டு பொறியியல் மாணவர்களுக்கு அவசியமான. சோதனைக்கூட உபகரண வசதிகள் இல்லை. இக்கல்லூரியில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கையே 10 தான். அதிலும் 8 பேர் பொறியியற் துறை சாராதவர்கள். விதிப்படி இடவசதி கொண்டதாக, போதுமான எண்ணிக்கையில் நூல்களைக் கொண்டதாக நூலகம் இல்லை. கல்லூரிக்கு கும்மிடிப்பூண்டியில் நிலையான கட்டிடம் கட்டப்போவதாக கூறிக் கொண்டு கடந்த இரண்டாண்டுகளாக வட அகரத்தில் தற்காலிகமாக கல்லூரி இயங்குகிறது.

திராவிடத் 'தளபதி' வீரமணி கும்பல் தஞ்சை - வல்லத்தில் நடத்தி வரும் பெரியார் மணியம்மை பொறியியற் கல்லூரியில் முதல்வரும் ஏழு துணை பேராசிரியர்கள் மட்டுமே உள்ளனர். முதுநிலை பேராசிரியர் ஒருவர் கூட கிடையாது. அரசு பரிந்துரைத்தபடி அல்லாமல் மிகச்சிறிய அறையில் குறைந்த எண்ணிக்கை கொண்ட நூல்களுடன் நூலகம் உள்ளது. கல்லூரிக்கு தனியே பரிசோதனைக் கூடம் எதுவுமில்லை. கல்லூரியை ஒட்டியுள்ள பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக்கின் (இதுவும் வீரமணி கும்பல் நடத்துவதுதன்) பரிசோதனைக் கூடத்தையே இதுநாள்வரை பயன்படுத்துகின்றனர். வகுப்பறை, வரைவாளர் கூடம், உபகரணங்கள் முதலான எதுவும் முறையாக இல்லாமல், முதலாண்டு பொறியியல் பாடத்தை நடத்தக் கூட தகுதியற்றதாக இக்கல்லூரி உள்ளது.

கோவையிலுள்ள வி.எல்.பி. ஜானகி அம்மாள் கல்லூரி, இதுவரை மனையே வாங்கவில்லை. ஒரு தனியார் கம்பெனியின் வளாகத்தினுள் கல்லூரி இயங்குகிறது. கம்ப்யூட்டர் நுண் அலை சோதனைக் கூடம் குளிர்பதன வசதியற்ற சாதாரண அறையில் அமைந்துள்ளது. மின்னியல் மற்றும் மின்னணுவியல் சோதனைக் கூடங்கள் எல்லாமே ஒரு சிறிய அறையில் உள்ளதால் அங்கே மாணவர்கள் பயிற்சி பெற வாய்ப்பே இல்லை.

ஆரம்ப - அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றாமல் மிக மோசமான நிலையில் இயங்கி வருவதாக குற்றம் சாட்டப்பட்ட இந்த ஐந்து கல்லூரிகளிலும் 1989-90ம் கல்வியாண்டில் புதிய மாணவர்கள் சேர்ப்புக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தவிர 30க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் குறிப்பிட்ட சில பட்டப்படிப்புக்கு புதிதாக மாணவர்களைச் சேர்க்க தடை விதிக்கப்பட்டுள்ளது. உரிய காலத்திற்குள் இக்கல்லூரிகள் அரசு பரிந்துரையின்படி அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத பட்சத்தில் பல்கலைக் கழகத்தில் இக்கல்லூரிகள் இணைக்கப்படமாட்டாது என்று எச்சரித்துள்ளது.

குழந்தைசாமி தலைமையிலான உயர் மட்டக் குழு தனது ஆய்வறிக்கையில்,

* ஆகப் பெரும்பான்மையான கல்லூரி



படிப்பகம்

களுக்கு முறையான, நிரந்தர கட்டிடங்கள் இல்லை.

* ஒவ்வொரு துறைக்கும் முதுமை பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் போதுமான அளவுக்கு இல்லை. ஓரிரு பேராசிரியர்களைக் கொண்டு 60% மாணவர்களுக்கு பாடம் நடத்தப்படுவதாக உள்ளது.

* பல கல்லூரிகளில் நூலக வசதி இல்லை நூலகம் இருந்தாலும் அதில் விஞ்ஞானம், பொறியியல், தொழில் நுட்பத் துறை சார்ந்த நூல்களோ, பத்திரிகைகளோ இல்லை.

* பெரும்பாலான கல்லூரிகளில் பரிசோதனைக்கூட வசதியில்லை. விளையாட்டுத் திடல், விடுதி வசதியில்லை. மகளிர் கல்லூரிகளில் கூட விடுதி வசதி இல்லாத நிலை உள்ளது. விடுதிகள் இருந்தாலும் அவை மிக மோசமான நிலையில் உள்ளன.

* பொறியியல் மாணவர்கள் பயிற்சி பெற மிக அவசியமான வார்ப்படக் கூடம், கொல்லுப்பட்டறை, பற்றவைப்பு கூடம், முதலானவை இல்லை.

— என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை பல சுயநிதிக் கல்லூரிகள் மீது சுமத்தியுள்ளது. இப்படியும் கூட கல்லூரிகள் இருக்குமா என்று ஆச்சரியப்படுமளவுக்கு பல கல்லூரிகள் மோசடியில் முதன்மை வகிக்கின்றன.

இத்தனைக்கும் பிறகும் சுயநிதி மோசடிக் கல்லூரி வியாபாரிகள் மிரண்டு விடவில்லை. உயர்மட்டக் குழுவின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். குறிப்பாக, பிழைப்புவாத அ.தி.மு.க. பிரமுகர்களது மூன்று கல்லூரிகளும், கோவை ஜானகி அம்மாள் கல்லூரியும் எதிர் வழக்குத் தொடுத்தன. அதன்படி வழக்கை விசாரித்த நீதிபதி பக்தவச்சலம், புதிதாக மூவர் கமிட்டியை அமைப்பதாகவும், அக்கமிட்டி இக்கல்லூரிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு 10 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்வதாகவும் அதன் பேரில் 'உண்மையை' ஆய்ந்து தீர்ப்பு வழங்குவதாகவும் அறிவித்துள்ளார்.

www.padippakam.com

என்னதான் உயர்மட்டக்குழு உண்மைகளை வெளிக் கொண்டு வந்தாலும், இறுதியாக, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது அதிகார வர்க்கம், போலீசு, நீதிமன்றம் அடங்கிய அரசு எந்திரம் தான். இதை நன்கறிந்துதான் கல்வி வியாபாரிகள் எதிர்வழக்கு தொடுத்து நீதிமன்ற இழுத்தடிப்புகளுக்குப் பின்னே, தம்மை காத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் அம்பிளிகை என்ற சிறு நகரத்தில் ஒரு மருத்துவமனையை நடத்தி வருகிறது, கிறிஸ்துவ சமூக மையம் என்ற அமைப்பு. 1987 முதலாக அம்மருத்துவமனையை ஒட்டி, தாதியர் பட்டப்படிப்பு கல்லூரியை இயக்கி வருகிறது. இச்சுயநிதி கல்லூரியிலும் கல்வித் தேவைக்கேற்ப ஆரம்ப - அடிப்படை வசதிகள் இல்லையென்று குற்றம் சாட்டி, இப்பட்டப்படிப்புக்கு நடப்பு கல்வியாண்டில் புதிதாக மாணவிகளை சேர்க்க தடை விதித்தது சென்னை பல்கலைக்கழகம். இதை எதிர்த்து வழக்கு தொடுத்த அக் கல்லூரி நிர்வாகம் அடிப்படை வசதிகள் போதுமான அளவுக்கு உள்ளன என்றும், கிறிஸ்துவர்கள் சிறுபான்மை சமூகத்தினர் என்பதால் சலுகை தருமாறும் கோரியது. அதன்படி நீதிபதி பக்தவச்சலம் மருத்துவத்துறை இயக்குநரை 10 நாட்களுக்குள் பதில் தருமாறு, இக்கல்லூரியை இயங்க அனுமதிக்குமாறு பணித்துள்ளார்.

இதேபோல சென்னை - தாம்பரம் பாரத் பொறியியற் கல்லூரியும், சேலம் - வாரியாரின் விநாயகா மிஷன் கல்லூரியும் ரிட் மனுத்தாக்கல் செய்தன. உயர்மட்டக் குழு சுட்டிக்காட்டிய குறைபாடுகளை பூர்த்தி செய்துவிட்டதாக அவை தெரிவித்தன. அவ்வளவு சீக்கிரத்தில் எப்படி நிறைவேற்றினார்கள் என்பது நீதிபதிக்கே வெளிச்சம்! இதை ஏற்றுக் கொண்டு இக்கல்லூரிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை உடனே நீக்குமாறு நீதிபதி உத்திரவு போட்டுள்ளார். இதேபோல, ஈரோடு நாராயணசாமி டிரஸ்ட் நடத்தும் ரசாயன தொழில் நுட்பக் கல்லூரி இன்னும இரண்டு மாதங்களுக்குள் குறைபாடுகளை சீர் செய்வதாக உறுதியளித்ததை ஏற்று, கல்லூரியில் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கு விதித்த தடையை நீதிபதியே நீக்கிவிட்டார். அது சரி, இக்கல்லூரி இத்தனை ஆண்டுகளாக குறைபாடுகளுடன் செயல்பட்டதற்கு என்ன தண்டனை? இப்படி கருப்புப் பட்டியலில் உள்ள பல கல்லூரிகள் உயர்நீதி மன்றம் மூலம் இடைக்கால அனுமதி பெற்று மீண்டும் வழக்கம் போல் செயல்படுகின்றன.

இச்சுயநிதிக் கல்லூரிகள் மோசடியானவை என்று அறிந்தேதான் - பணம் கொடுத்தால் 'சீட்' கிடைக்கும், பட்டமும் கிடைக்கும் என்று தெரிந்தேதான் பல பணக்கார வீட்டு குலக் கொழுந்துகள் இக் கல்லூரிகளில் சேர்கின்றனர். ஆனால் விபரமறியாத நடுத்தர வர்க்க - ஏழை மக்கள் தமது மகனோ, மகளோ குறைவான மதிப்பெண் பெற்ற நிலையில், இக்கல்லூரிகளில் சேர்த்து விட்டு வேதனையில் விம்முகின்றனர்.

சுயநிதிக் கல்லூரிகளின் யோக்கியதையை குழந்தைசாமி கமிட்டியின் அறிக்கை அம்பலப்படுத்தியதும், "மோசடிக் கல்லூரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சவடால் அடித்தார் கருணாநிதி. அதன் பிறகு அவர் வாயே திறக்கவில்லை. அவரது பிழைப்புவாத அரசியல் பங்காளிகள் தானே இக்கல்லூரிகளை நடத்துகின்றனர். அதிலும் அவர்கள் திராவிடர்கள் - தமிழர்களாயிற்றே! எனவேதான் 'தளபதி' வீரமணியின் மணியம்மை பொறியியல் கல்லூரி கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட பிறகும் கூட அக் கல்லூரி நிர்வாகம் நடத்தவுள்ள விழாவில் பங்கேற்க கூச்ச நாச்சமின்றி ஒப்புக் கொண்டுள்ளார். தந்தை பெரியாரின் 111வது பிறந்த நாள் விழாவையொட்டி இக்கல்லூரியில் நடைபெறவுள்ள விழாவில் கலந்து கொண்டு, புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கவும் கருணாநிதி இசைந்துள்ளார். 'நன்கொடை என்ற பெயரில் மாணவர்களிடம் பணத்தை உறிஞ்சிக் கொழுக்கும் திமிங்கிலங்களை கல்விக் கடலில் நீந்த விடமாட்டேன்" என்று முழங்கிய கருணாநிதி விழுப்புரத்தில் தெய்வானை மகளிர் கல்லூரி என்ற சுயநிதிக் கல்லூரிக்கு புதிதாக அனுமதி வழங்கியுள்ளார். இதுதான் 'சொல்வதைச் செய்யும்' கருணாநிதி ஆட்சியின் யோக்கியதை!

சுயநிதி கல்லூரிகளின் லட்சணமே இப்படி என்றால் சந்துக்கு சந்து முளைத்துள்ள சுயநிதி பாலிடெக்னிக் பற்றி சொல்ல வேண்டியதில்லை. அடிப்படைக் கல்வியை எட்டாக் கனியாக்கிவிட்ட பாசிச ராஜீவ் கும்பலின் புதிய கல்விக் கொள்கையும் சரி, அதை எதிர்ப்பதாக நாடகமாடும் பிழைப்புவாத திராவிட வாரிசுகளின் ஆட்சியும் சரி, ஒருவழியாக கல்வியையும், விபச்சாரத்தையும் ஒன்றாக்கி புதிய 'சாதனை' படைத்து விட்டன.

● மனோகரன்


கருணாநிதியின் கருணையோடு மோசடிக் கல்லூரி நடத்தும் 'தளபதி' வீரமணி.



படிப்பகம்

☆ கல்லை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தும் கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. தோழர் கண்ணன் தலைமையேற்க தோழர்கள் பாலு, நாகராசன், கதிர்வேலன் ஆகியோர் காந்தி - காங்கிரசின் தேசத்துரோகத்தையும், ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக இந்தியா மாற்றப்பட்டிருப்பதையும், தனிமனித சுதந்திரமும் நாட்டின் சுதந்திரமும் எவ்வாறு போலியாக உள்ளது என்பதையும் தெளிவாக விளக்கினர். இந்நிகழ்ச்சியின் இடையிடையே போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தும் பாடல்களை தோழர்கள் பாடினர். முன்னணியாளர்களும் ஆதரவாளர்களும் பங்கேற்ற இக்கருத்தரங்கம் தோழர்களுக்கு உற்சாகமும் உத்வேகமும் அளிப்பதாக அமைந்தது.

☆ போலிச்சுதந்திரத்தைத் திரைகிழித்து ஆகஸ்ட் 18 அன்று தேவாரத்தில் உள்ள கீரைக் கடை முக்கு என்ற இடத்தில் உத்தமபாளையம் வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி பொதுக் கூட்டத்தை நடத்தியது. தோழர் மோகன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் கம்பம் நகர புதிய ஜனநாயகம் வாசகர் வட்டத் தோழர் வசந்தன், உசிலை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் ராமசாமி மற்றும் தோழர்கள் ராஜ்குமார், மகாலிங்கம் ஆகியோர் எழுச்சியுடன் உரையாற்றினர். இடையிடையே தோழர்கள் இசை நிகழ்ச்சி நடத்தி மக்களின் உள்ளங்களில் புரட்சி விதையை விதைத்தனர். பல்வேறு கிராமங்களிலிருந்தும் ஆதரவாளர்கள் திரண்டுவந்து கூட்டத்தில் பங்கேற்றனர். பகுதிவாழ் மக்கள் இந்நிகழ்ச்சிக்கு ஆதரவளித்து ஊக்குவித்தனர்.




☆ போலிச்சுதந்திரத்தின் பொய் முகங்களை தோலுரித்து பகத்சிங் இளைஞர் முன்னணியின் பொதுக்கூட்டம் திருச்சி பாலக்கரை எடத்தெருவில் 15.8.89 அன்று மாலை 7 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் ஜெகதீசன் தலைமை தாங்க தோழர் ராஜகுரு சிறப்புரையாற்றினார். காங்கிரசின் துரோகத்தனத்தை அன்றைய சுதந்திரப் போராட்ட வரலாற்றிலிருந்தும் இன்றைய அதன் செயல்பாடுகளிலிருந்தும் உதாரணங்களுடன் தோழர்கள் பேசியது மக்கள் மத்தியில் வித்தியாசமான கூட்டம் என்ற வரவேற்பைப் பெற்றது. பின்னர் நடைபெற்ற மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் புரட்சிகர கலைநிகழ்ச்சி மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. அதன்பின்னர் ப.இ. முன்னணியின் 'கோமாளிக்கூத்து' என்ற கதைநாடகம் நடைபெற்றது. நகைச்சுவை பாணியில் இன்றைய இளைஞர் மத்தியில் நிலவும் சீரழிவுகளை அம்பலப்படுத்தி, அவர்களை புரட்சிப் பாதைக்கு வரும்படிஅறைகூவல் விடுக்கும் வகையில் அமைந்த இந்நிகழ்ச்சியை 800க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு தொடர்ந்து கரவொலி எழுப்பி வரவேற்று ஆதரித்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் ஏராளமான பகுதிவாழ் இளைஞர்கள் தாங்களே முன்வந்து புரட்சிகர அமைப்பில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்தது, குறிப்பிடத்தக்கதாகும்.

☆ போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தி உசிலை வட்ட விவசாயிகளை விடுதலை முன்னணியின் பொதுக்கூட்டம் முண்டுவேலம்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது. அமைப்பாளர் தோழர் கே.பி.இராமசாமி, வி.வி.மு.யின் கொடியேற்றிய பின் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்திற்கு தோழர் பாண்டி தலைமை தாங்கினார். கூட்டத்தில் தோழர் இராமசாமி, உத்தமபாளையம் வட்ட வி.வி.மு. தோழர் மோகன், ம.க.இ.க. இணை செயலர் தோழர் கதிரவன் ஆகியோர் போலிச் சுதந்திரத்தையும், காந்தி - காங்கிரசின் துரோகத்தையும் அம்பலப்படுத்தி சிறப்புரையாற்றினர். இடையிடையே தோழர்கள் நடத்திய இசை நிகழ்ச்சி புரட்சிகர உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சுவதாக அமைந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிவாழ் மக்கள் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியை வரவேற்று ஆதரித்தனர்.

☆ போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தி திருப்பத்தூர் புதிய கலாச்சாரம் வாசகர் வட்டமும், ஊற்றங்கரை புதிய ஜனநாயகம் வாசகர் வட்டமும் இணைந்து ஆகஸ்ட் 15 அன்று தெருமுனைப் பிரச்சாரத்தை நடத்தியது. பாடல்கள் மற்றும் சிறு சொற்பொழிவு மூலம் காலையில் திருப்பத்தூரிலும் மாலையில் ஊற்றங்கரையிலும் பிரச்சாரம் நடைபெற்றது. திரளான மக்கள் ஆர்வமுடன் பிரச்சாரத்தைக் கேட்டு பாராட்டி ஊக்குவித்தனர்.

## கருணாநிதிக்கு பீர் - பிராந்திக் கடை!

## கட்சிக்காரர்களுக்கு கள்ளச் சாராயக் கடை!

அரசே நடத்தும் பிராந்திக் கடைகளை மூடக்கோரியும், தொலைக்காட்சியில் இராமாயணம், மகாபாரதம் ஒளிபரப்புவதைத் தடைசெய்யக் கோரியும் மத்திய - மாநில அரசுகளை நிர்பந்தித்து எழுச்சிமிகு ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தை மக்கள் கலை இலக்கியக் கழகம், கடலூர் கிளை 26.8.89 அன்று நடத்தியது. அன்று மாலை 5 மணியளவில் கடலூர், மஞ்சைநகர் தண்ணீர் தொட்டி அருகிலிருந்து தோழர் அருள்மணி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது. "தமிழக அரசே! குடிப்பழக்கத்தை வளர்க்காதே! பிராந்திக் கடைகளை உடனே மூடு!"; "மத்திய அரசே! இந்து மதவெறியைத் தூண்டும் இராமாயணம், மகாபாரதத்தை தொலைக்காட்சியில் ஒளிபரப்பி, பழைமைவாதக் கருத்துக்களைப் புகுத்தி மக்களை மடமையில் ஆழ்த்தாதே!" முதலான மைய முழக்கங்களுடன் சென்ற ஊர்வலத்தில் பெரிய அளவில் கேலிச் சித்திரங்கள் வரையப்பட்டு தள்ளுவண்டிகளின் மீது வைத்து எடுத்துச் செல்லப்பட்டன. மக்கள் குடிநீர் கேட்டுப் போராடுவதாகவும் முதல்வர் கருணாநிதி 'குடி'நீர் வழங்குவது போலவும் வடிக்கப்பட்ட கேலிச்சித்திரமும், ராஜீவின் துதிபாடிக்கொண்டு அஞ்ஞானத்தை தொலைக்காட்சி பரப்புவதுபோல் அமைந்த கேலிச் சித்திரமும் மக்களிடம் வரவேற்பைப் பெற்றது. ஊர்வலம் திருப்பாப்புலியூர் ஆர்.எம்.எஸ். அலுவலகத்தைச் சென்றடைந்ததும் அங்கு விண்ணதிர முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் உரையாற்றிய தோழர் கலாநிதி, எம்.ஜி.ஆரின் ஆட்சியை சாராய சாம்ராஜ்ஜியமாக வர்ணித்த கருணாநிதி தன்து ஆட்சியை பிராந்தி சாம்ராஜ்ஜியமாக மாற்றியுள்ளதை அம்பலப்படுத்தினார். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் தொடங்குவதற்கு அரைமணி நேரம் முன்னர், ஊர்வலத்தில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்றும் மீறினால் கைது செய்வோம் என்றும் போலீசார் மிரட்டினர். ஆனாலும் தோழர்கள் இந்த மிரட்டல்களுக்கு அஞ்சாமல் வெற்றிகரமாக ஊர்வலத்தை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத் தோழர்களும் பங்கேற்று சிறப்பித்தனர்.

**தகவல்:**
**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**கடலூர் கிளை**



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



கள்ளச் சாராயத்தை ஒழிப்பேன் என்று உதார்விட்ட தேவாரத்தின் தலைமையிலுள்ள போலீசார் மாமூல் வாங்கிக் கொண்டு வீதியெங்கும் சாராயத்தைப் பெருகவிட்டு திருவாசகம் படிக்கின்றனர். சந்துக்கு சந்து சாராயக் கடைகள் பெருகிவிட்டன. இந்நிலையில், உழைக்கும் மக்களைப் பெரிதும் பாதிக்கும் சாராயத்தை மாமூல் வாங்கிக் கொண்டு சட்டவிரோதமாக பெருக்கெடுத்து ஓடவைக்கும் அரசு-போலீசு ஆகியவற்றை எதிர்த்து கல்லை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. கிராமம் கிராமமாக இது தொடர்பான பிரசுரத்தை வினியோகித்து தெருமுனை பிரச்சாரங்கள் மூலம் இவ்வியக்கம் மேற்கொள்ளப்பட்டது.

தெருமுனைப் பிரச்சாரங்களில் குறிப்பாக பெண்கள் பெருமளவில் திரண்டனர். முழக்கங்கள், பிரசுரம், குடிகாரக் கணவனிடம் வாழ்க்கைப்பட்ட பெண் பாடுவதாக அமைந்த் "அடுப்பு அணைஞ்சு போச்சு" என்ற சோகப் பாடலுடன் குடிகாரக் கணவன் போதையில் பேசுவது போலவும் நமது தோழர்கள் நடித்துக் காட்டியது ஆகியவற்றுடன் குடியினால் ஏற்படும் தீமை, அதனை அனுமதிக்கும் ஆட்சியாளர்களின் - போலீசின் திட்டங்கள், ஊழல்கள் ஆகியவற்றை விளக்கி இதனை எவ்வாறு ஒழிக்க முடியும் என்பதற்கான தீர்வையும் சுட்டிக்காட்டிய போது கூடியிருந்த மக்கள் ஆமோதித்து வரவேற்றனர்.

இதன் தொடர்ச்சியாக ஆகஸ்ட் 22ந் தேதியன்று மாலை சங்கராபுரத்தில் எழுச்சிமிகு ஊர்வலம் நடத்தப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்த ஊர்வலத்தில், கள்ளச் சாராயத்துக்கு உடந்தையாய் இருக்கும் சட்டம் - போலீஸ்; சாராயத்தை ஒழிப்பதாக சவடால் அடித்துக் கொண்டே லட்சம் லட்சமாக சுருட்டும் கருணாநிதி - தேவாரம் கும்பல்; கிராமங்களில் பகிரங்கமாக சாராயக் கடைகள் ஏலம் விடப்படும் அவலம்; போலீஸ் நிலையங்களில் பேரம் நடக்கும் அயோக்கியத்தனம்; ஓட்டுக்கட்சிகளின் கூட்டுக்கொள்ளை முதலான விஷயங்களை தோழர்கள் முழக்கமிட்ட போது மக்கள் வெகுவாக வரவேற்றனர். இந்த பிரச்சார இயக்கம் மக்கள் மத்தியில் சிறந்ததொரு தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**கல்லை வட்டம்.**

# அமெரிக்க கிறுக்கு உதயமூர்த்தியின் திமிர்!

உலக மகா மேதை என்று முதலாளித்துவ கைக்கூலிகளால் உச்சி முகர்ந்து பாராட்டப்படும் அமெரிக்காவின் தத்துப்பிள்ளையும், எடுபிடியுமான திருவாளர் எம்.எஸ்.உதயமூர்த்தி, "தொழிற்சங்கங்களும் அவற்றின் கடமைகளும்" என்ற தலைப்பில் உரையாற்ற நெய்வேலிக்கு வந்திருந்தார். தொழிலாளர், தொழிற்சங்கம் - இவற்றுக்கும் அண்ணன் உதயமூர்த்திக்கும் என்ன தொடர்பு என்பது நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துக்கே வெளிச்சம்.

நிறுவனத்தின் ஏற்பாட்டின்படி 10.8.89 அன்று காலை, பயிற்சி வளாகத்தில் நடந்த இக்கூட்டத்திற்கு பல்வேறு தொழிற்சங்க முன்னோடிகளும், தொழிலாளர்களும் வந்திருந்தனர். கூட்டம் துவங்கியதும் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் எழுந்து, "இப்போது திரு.உதயமூர்த்தி பேசுவார்" என்று அவரை அழைத்தபோது, அண்ணன் உ.மு. அவரைத் தம்மருகே கூப்பிட்டு, "என்னைப் பற்றி விளக்கமாக கூறுங்களேன்" என்று தம்பட்டம் அடித்து விளம்பரப்படுத்த வேண்டினார். அதன்படியே அந்த அதிகாரியும் அவரை பிறவி மேதாவியாக வர்ணித்து தாது புஷ்டி லேகியக்காரனைப் போல அவரை விளம்பரப்படுத்தி விட்டு ஒருவழியாக அமர்ந்தார்.

பின்னர் தனது உரையைத் தொடங்கிய உதயமூர்த்தி தான் மாயவரத்தில் பிறந்து, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று, பின்னர் பல்வேறு நிறுவனங்களில் தலைமை நிர்வாகியாக பணியாற்றியதைப் பற்றி சுயபுராணம் பாடினார்.

பிறகு, தாமே ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமெரிக்காவில் நடத்திக் கொண்டிருப்பதாகவும், தான் கற்று, கேட்டு அறிந்த "உண்மை"களை இந்திய மக்களுக்கு எடுத்துரைத்து சேவை செய்ய வந்துள்ளதாகவும் தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டார்.

தனது உரையில் "இந்திய நாடு வறுமையிலும் பஞ்சத்திலும் இருப்பதற்குக் காரணம் இந்தியர்களின் ஏமாற்றும் மனோபாவம் தான். ஆனால் அமெரிக்காவில், ஜப்பானில் அப்படியில்லை" என்று தனது 'மேதாவித்தனமான' கண்டுபிடிப்புகளை அடுக்கினார். "பொதுத்துறை நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதால் அவற்றை தனியாருக்கு விற்பதுதான் சரியானது; 5000 தொழிலாளிகளையாவது வேலை நீக்கம் செய்தால்தான் அவை லாபகரமாக இயங்கும். வேலைப்பளுவை உயர்த்தினால் உற்பத்தி பெருகி நாடு முன்னேறும்" என்று அப்பட்டமாக முதலாளித்துவ சுரண்டல் வாதங்களைக் கக்கினார்.

"மனிதனுடைய தேவைகளில் சமூக, உளவியல் தேவைகளே முதன்மையானது; போராட்டங்கள் மூலம் அல்லாமல், முதலாளியை உயர்த்தி, தொழிலாளர்கள் தாமும் உயர்வதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதே சரியான வழி" என்று காந்தியப் பாதையை விளக்கினார்.

பின்னர் தனக்கு போதிய நேரமில்லாததால் விரைவில் கேள்விகளைக் கேட்டு முடிக்குமாறு கோரினார். கேள்வி நேரத்தில், "மக்கள் சேவை என்று கூறும் தாங்கள் இந்தியாவில் படித்து விட்டு அமெரிக்காவில் ஏன் தொழில் தொடங்கினீர்கள்?" என்று கேட்டபோது "அங்குதான் என் ஆலைக்கு வியாபாரம் அதிகமாக ஆகிறது" என்று கந்து வட்டிக்காரன் பாணியில் பதில் அளித்தார். "இந்திய மனப்பான்மையைக் குறை கூறும் தாங்கள், அமெரிக்க யூனியன் கார்பைடு நிறுவனம் போபால் விஷக்கொலையின் போது நடந்துகொண்ட மனோபாவத்திற்கு எதிராக என்ன செய்தீர்கள்?" என்று கேட்டபோது, "ஹி... ஹி... நான் அதை ஆதரிக்கவில்லை; எதிர்த்து மக்கள் இயக்கம் நடத்தினேன்" என்று வாய்கூசாமல் புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டார். "இலாபத்தில் இயங்கிய 'ஸ்கூட்டர் இந்தியா' என்ற அரசுத்துறை நிறுவனத்தை தனியார் முதலாளிக்கு விற்றதற்கு காரணம் தொழிலாளிகளின் சோம்பேறித்தனமா?" என்று கேட்டதற்கு "எனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது" என்று மழுப்பினார்.

அடிப்படைத் தேவைகளே இன்னும் நிறைவேறாத போது, சமூக உளவியல் தேவைகள் என்றால் என்ன? என்று கேட்டபோது, "மனைவியின் சமையலை - சாம்பாரைப் பாராட்டுங்கள்" என்று எம்.ஜி.ஆர். தனமாக பதிலளித்தார். இதற்கிடையே "நாட்டில் வேலையற்றோர் கோடிக்கணக்கில் இருக்கும் போது, ஆட்குறைப்பைப் பற்றி பேசும் நீ ஒரு தேசத்துரோகி" என்று முழக்கமிட்டார் ஒரு தொழிலாளி. உதறல் எடுத்த உ.மு. உடனே அமெரிக்கக் கடவுளை வேண்டிக் கொண்டு, "இத்துடன் என் உரை முடிந்தது" என்று அவசர அவசரமாக மூட்டையைக் கட்டினார்.

அண்ணன் உ.மு. உரையாற்றிக் கொண்டிருந்த போது "வெளிநடப்பு" செய்வதாக நடித்த போலிக்கம்யூனிஸ்டுகள், உரையை முடித்து உதயமூர்த்தி வெளியே வந்தவுடன் "நாங்கள் கம்யூனிஸ்டுகள்; அதனால்தான் இப்படி... ஹி... ஹி..." என்று அசடுவழிந்து கைகுலுக்கி, பிரியாவிடை பெற்றனர். சில தொழிலாளர்கள் உதயமூர்த்தியின் அருகே சென்று, "இந்தக் கேவலமான பிழைப்பிற்குப் பதில் நீங்கள் வேறு ஏதாவது செய்யலாம்" என்று கூறியபோது அதை அவர் காதில் வாங்காதது போல் வீரநடை போட்டு வேகமாக வெளியேறினார்.

உழைக்கும் வர்க்க உணர்வுகளை மழுங்கடிக்க நிர்வாகமும் உ.மு. போன்ற கைக்கூலிகளும் எல்லா தொழிலகங்களிலும் இவ்வாறு திட்டமிட்டு பிரச்சாரம் செய்து மூளைச்சலவை செய்து வருகின்றனர். உழைக்கும் மக்கள் மீது வெறுப்பு கொண்ட இத்தகைய அமெரிக்க கிறுக்குகளை இந்திய செருப்பால் அடித்து விரட்டினால்தான் அவர்களின் கொட்டம் அடங்கும்.

**— தொழிலாளர் பிரச்சாரக்குழு,**
**நெய்வேலி - வடலூர்.**

படிப்பகம்

www.padippakam.com

# பத்திரிக்கைசுதந்திரம் ஒரு பிரமை - மீண்டும் நிரூபணம்!

"பத்திரிக்கை சுதந்திரம் - இது முதலாளித்துவப் பத்திரிக்கையாளர்களே உருவாக்கிக் கொண்ட பிரமை" என்று 16-31 அக்டோபர் '86 புதிய ஜனநாயகத்தில், எழுதியிருந்தோம். "இந்தப் பிரமையில் கொஞ்சம் சுதந்திரமாகச் சுவாசிக்க முயன்றபோது பாசிசத்தின் நெடி அவர்களுக்குத் தெரிகிறது" என்று "இதுவா பத்திரிகைச் சுதந்திரம்?" என்ற அட்டைப்பட கட்டுரையில் பத்திரிக்கை, பத்திரிக்கையாளர்களின் மீதான பாசிச தாக்குதலையும் தொகுத்தளித்திருந்தோம்.

ஏறக்குறைய இந்த மூன்றாண்டு கால இடைவெளியில், "பாசிசத்தின் நெடி" குறையவில்லை. பத்திரிக்கையாளர்கள் மூச்சுத் திணறுமளவுக்கு இன்னும் கூடுதலாகி இருக்கிறது.

வாய்பூட்டு சட்டமான பத்திரிக்கை அவதூறு தடுப்புச் சட்டத்தை தற்காலிகமாக பின்வாங்கிக் கொண்டாலும், புறக்கடை வழியே அது பாய்கிறது. பத்திரிக்கை காகித விலையை தாறுமாறாக ஏற்றியும், அம்பானி போன்ற தனது தரகு முதலாளித்துவ எஜமானர்களை ஏவி பெரும்பாலான பத்திரிக்கைகளை விலை பேசிவிட்டது. பத்திரிக்கை முதலாளிகளை நிர்ப்பந்தப்படுத்தி, தனக்கு எதிரான ஆசிரியர்களை அதிலிருந்து வெளியேற்றுகிறது. கணிசமான விலை கொடுத்து அடிமைகளாக மாற்றுகிறது. இதே உத்தியைத்தான், பல மாநிலங்களில் ஆளும் காங்கிரசு கும்பலும் பின்பற்றுகிறது.

பம்பாயிலுள்ள ஜெயின் குடும்பத்தைச் சேர்ந்த பென்னட் காலமென் அண்டு கம்பெனி, இந்தியப் பத்திரிக்கையில் ஏகபோக ஆதிக்கம் வகிப்பது. 5 மிகப்பெரும் பத்திரிக்கை முதலாளிகளுக்குள் முதலிடம் வகிப்பது. எக்ஸ்பிரஸ் சங்கிலித் தொடர் நிறுவனத்தைப் போன்று, 'டைம்ஸ் ஆப் இந்தியா' - விற்பனையில் முதன்மை வகிக்கும் ஆங்கில நாளிதழ் மற்றும் இந்தி தினசரிகள், நடத்துகிறது. அதன் வாராந்திர ஆங்கில இதழ்களில் ஒன்று "இல்லஸ்ட்ரேடட் வீக்லி". பிரதீஷ் நந்தி என்பவரை ஆசிரியராகக் கொண்டு இயங்குகிறது.

இப்பத்திரிக்கை, காங்கிரசு ஒரிசா முதல்வர் ஜே.பி.பட்நாயக், ஒரின உறவு, கொண்டு பல இளைஞர்களை பலியாக்கியவர், பல அபலைப் பெண்களை அரசு விடுதிக்கு தூக்கிச் சென்று கற்பழித்தவர் என்பதை பல ஆதாரங்களுடன் வெளியிட்டது. மூன்றாண்டுகளுக்கு முன் '86 ஆம் ஆண்டு மே மாதம் 18-24, மற்றும், அதே ஆண்டு ஆகஸ்ட்டு 3-9, இதழ்களிலும் இந்த உண்மைகளை பல ஆதாரங்கள் மூலம் நிரூபித்தார், அப்பத்திரிக்கையின் சிறப்பு செய்தியாளர் அப்தி

இந்த இதழ்களை பல 10,000 கணக்கில் ஒரிசா முழுவதும் தீ வைத்துக் கொளுத்தியது, காங்கிரசுக் கும்பல். அம்மாநிலத்தில், பல மாதங்கள் இப்பத்திரிக்கை சட்டவிரோதமாக தடை செய்யப்பட்டது. பத்திரிக்கையாளர்கள் மட்டுமல்ல, விற்பனையாளர்களும் மிரட்டப்பட்டனர். வேறு வழியில்லாமல், இப்பத்திரிக்கையை 'ஜெராக்ஸ்' நகல் எடுத்து விற்பனையாளர்கள் அரசுக்குத் தெரியாமல் விற்றனர். வாரந்தோறும் 2,500 பத்திரிக்கை மட்டும் விற்றிருந்த இப்பத்திரிக்கை, திடீரென 10,000க்கு உயர்ந்தது. நகல் எடுக்கப்பட்ட தனிக்கட்டுரைகள் ரூ.5 வரை கள்ளச்சந்தையில் விற்கப்பட்டது. கட்டுரை எழுதிய அப்திக்கு பகிரங்கமாக கொலை மிரட்டல் விட்டது, பட்நாயக் கும்பல்.

செய்தி கொடுத்த பெண்கள், இளைஞர்கள் அனைவரும் தாளாத தொல்லைகளுக்கு நிரந்தரமாக ஆளானார்கள். பட்நாயக் நேரடியாக பொதுக்கூட்ட மேடைகளில், 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' ஆசிரியர் பிரத்தீஷ் நந்தியையும், செய்தியாளர் அப்தியையும் கீழ்தரமாக ஏசினார். கடைசியில் ஒரு கோடி ரூபாய்க்கு பத்திரிக்கையின் மீது மான்நட்ட ஈடு வழக்கு தொடுத்தார், பட்நாயக்.

'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' தனது செய்திகள் அனைத்தும் உண்மை என்பதை நிரூபித்தது. மாற்றுப் பெயர்களில் செய்திகள் கொடுத்தவர்களை, நேரடியாக புகைப்படத்துடன் பிரசுரித்தது. ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்ட அவர்களது செய்திகள் உண்மைதான் என்பதை 'ஸ்டாம்பு' பத்திரங்கள் மூலம் எழுதிக் கையெழுத்திட்டு, பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டில் சமர்ப்பித்தனர்.

'வீக்லி' இப்போது திடீரென, பட்நாயக் காலில் விழுந்து விட்டது. அதற்கான காரணத்தைக்கூட நேரடியாக வாசகர்களுக்கு தெரிவிக்காமல் நழுவிக்கொண்டது. செய்திக்கு பகிரங்கமாக மன்னிப்புக்கோரும் பட்சத்தில், ஒரு கோடி ரூபாய் மான நஷ்டஈடு வழக்கு விலக்கிக் கொள்ளப்படும், என்ற நிபந்தனையின் பேரில் இப்போது பேரம் முடிந்திருக்கிறது. அதனடிப்படையில்,

"இல்லஸ்ட்ரேடட் வீக்லியின் ஆசிரியர் பிரிதிஷ் நந்தி, சிறப்புச் செய்தியாளர் அப்தி மற்றும் பென்னட் காலமன் கம்பெனி ஆகிய நாங்கள் 18-24 மே '86, 3-9 ஆகஸ்ட் '86 ஆகிய தேதியிட்ட எமது இரு இதழ்களில், எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் முதல்வர் பட்நாயக்கைப் பற்றி இரு கட்டுரைகள் வெளியிட்டிருந்தோம். இக்கட்டுரைக்கு ஆதாரமான தகவல்கள் பொய்யானது; அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டது என்பதை பின்னர் நாங்கள் அறிந்தோம். இதனால் பட்நாயக்கின் கௌரவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கு வருத்தம் தெரிவிப்பதுடன், அவரிடம் மன்னிப்பு கோருகிறோம்" என்று ஆகஸ்ட் 27 தேதியிட்ட வீக்லி இதழில் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளனர்.

மூன்றாண்டுக்கு முன், ஒரிசா முதல்வர் பட்நாயக்குக்கு எதிராக 'வீக்லி'யில் வந்த செய்தி இதுதான்;

பாகிரதி பேக்ரா 22 வயது இளைஞர். பூரி மாவட்டம் பானி சத்திரா கிராமத்தைச் சேர்ந்த ஏழை. 3 சகோதரிகளும் இரண்டு சகோதரர்களும் அடங்கிய குடும்பம். '82 ஆம் ஆண்டு மே மாதம் அவரது கிராமத்தில் பல குடிசைகள் தீப்பிடித்து அழிந்தது. இவரது கிராமத்தை ஒட்டியது முதல்வர் பட்நாயக்கின் கிராமம். பாதிக்கப்பட்டவர்கள் உள்ளூர் காங்கிரசு எம்.எல்.ஏ.வுடன் முதல்வரைச் சந்தித்து நிவாரணம் கோரினர். "சில நாட்கள் கழித்து வாருங்கள்" என்று முதல்வர் பட்நாயக் சொல்லவே, கிராமத்தின் சார்பாக இந்த இளைஞர், அடுத்த முறை தனியாக சென்றிருக்கிறார். மாலை 5 மணி அளவில் முதல்வர் வீட்டு அலுவலகத்திற்கு சென்ற இவரை, முதல்வர் இல்லையென்று இரவு 10.30 வரை உட்கார வைத்திருந்தனர். அப்போது ஒருவர், முதல்வர் அழைப்பதாக ஒரு அறைக்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு திரும்பிவிட்டார்.

"கீழ்மாடி இடது பக்க அறையில், முதல்வர் உட்கார்ந்து இருந்தார். அவரைச் சுற்றி 2, 3 இளைஞர்களும், பெண்களும் இருந்தனர். அவர்களுக்கு வயது 16 அல்லது 17 இருக்கும். நான் நிவாரண உதவி கோரி நினைவுப்படுத்தினேன். அவர் அருகில் இருந்த அனைவரையும் வெளியே அனுப்பி விட்டு கதவை மூடினார். பிறகு என்னை அணைத்துக்கொண்டு 'பேண்ட்'டை கழட்டுமாறு கூறினார். நான் மறுத்தேன். நீ, ஆணா, பெண்ணா என்று கேட்டு மிரட்டினார். என்னுடைய பேண்ட்டையும், ஜட்டியையும் என் விருப்பத்துக்கு மாறாக கழட்டினேன். முதல்வர் என்னுடைய... (மீதி ஆசிரியரால் வெட்டப்பட்டது) ...பிறகு, "நீ உடனே செல்ல வேண்டுமா? மேலும் சிலநாள் இங்கு தங்கிவிட்டுச் செல்கிறாயா?" என்றார். "நான் போகிறேன்" என்றேன். "கிராமத்தில் வேலைநடக்க வேண்டுமென்றால் அடிக்கடி வந்துபோ" என்றார். அதன்பிறகு நான் போகவே இல்லை".

— இந்த சோகக்கதையை, 'ஸ்டாம்பு' பேப்பரில் எழுதி மாஜிஸ்ட்ரேட்டிடம் சமர்பித்து, 'வீக்லி' பத்திரிக்கையில் தான் கொடுத்த செய்திகளை நிரூபித்தார், அவர்.

இன்னொருவர், விசுவநாத் மொகபத்ரா; வயது 24. பூரி, நீர்குண்டி சவுக் பகுதியில் இனிப்பு கடை நடத்திய சிறு வியாபாரி. கோபால் ஹரிசந்த் என்ற பூரி பஸ் 'கண்டக்டர்' மூலமாக முதல்வர் பட்நாயக்கிடம், மில்லில் வேலைக்கேட்கப் போனவர்.

இளைஞருக்கு நேர்ந்த கொடுமை அச்சாக இவருக்கும் நேர்ந்திருக்கிறது. பட்நா


படிப்பகம்

www.padippakam.com

யக்கின் வலையில் விழுந்த இவர், வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் திரும்பத்திரும்ப சென்றிருக்கிறார். ரங்கா பேக்ரா என்ற 32 வயது பெண்ணையும், பட்நாயக்குக்காக அழைத்துச் சென்றிருக்கிறார். அழைத்துச் சென்ற பெண்களுடன் பட்நாயக் உல்லாசமாக இருந்ததுடன், விசுவநாத் உள்பட அங்கிருந்த இளைஞர்களையும், அவர்களுடன் உடலுறவு கொள்ள வைத்து, பார்த்து ரசித்திருக்கிறார். இவ்வாறு வக்கிரமான ஓரின உடலுறவும் நடந்திருந்திருக்கிறது. ''என்ன செய்வது? ஒரு மாநிலத்தின் முதல்வர் கட்டளையிட்டார். நான் கீழ்படிந்தேன். இதற்காக பெண்களுக்கு 500 ரூபாயும், ஆண்களுக்கு 200 ரூபாயும் கிடைத்தது'' என்கிறார் மொக பத்ரா.

இவரும், இந்த உண்மைகளை எல்லாம் 'ஸ்டாம்பு'பத்திரத்தில் எழுதி, 'வீக்லி'க்கு தான் கொடுத்த செய்திகள் உண்மை தான் என்று 'மாஜிஸ்ட்ரேட்'டிடம் சமர்பித்தார்.

விலாசனி மிஸ்ரா; தகப்பனை இழந்த, திருமணமாகாத 25 வயது ஏழைப்பெண். முறைசாரா கல்வித் திட்டத்தின் கீழ் இயங்கும் ஆரம்பப்பள்ளியில் 105 ரூபாய் சம்பளத்தில் பணி புரியும் ஆசிரியை. 70 வயது தாயையும், ஊனமுற்ற சகோதரனையும் காப்பாற்றி வருபவர். பட்நாயக் வெற்றி பெற்ற சட்டமன்ற தொகுதியிலுள்ள கோபி நாத்பூர்சாசன் கிராமத்திலிருந்து பணிபுரிந்த இவருக்கு கலகாந்தி மாவட்டத்திற்கு மாற்றல் வந்தது. குடும்ப உறுப்பினர்களை, குறைந்த சம்பளத்தில் இடமாற்றம் செய்வது சங்கடம் என்பதால், அதை ரத்து செய்வதற்கு உள்ளூர் காங்கிரசுக்காரர்களை அணுகினார். அதன்பிறகு அவர்கள் மூலம் பட்நாயக்கிடம் சென்றபோது மேற்கூறிய இளைஞர்கள் மாதிரியே அனைத்து சித்திரவதைகளையும் அனுபவித்தார். அவருக்கு நேர்ந்த கொடுமைகளை எதிர்த்து இவருக்கு ஆதரவளித்த பிஷ்வநாத் சாகு என்ற உறவினரும், அவரது குடும்பமும் பட்நாயக் கும்பலால் வேட்டையாடப்பட்டது. ''உள்ளூர் காங்கிரசுக்காரர்கள் எங்களைத் தாக்கியதை புகார் எடுக்கக்கூட மறுத்தது போலீசு'' என்று, இவர்களும் மாஜிஸ்ட்ரேட்டிடம் வாக்குமூலமளித்தனர். 'வீக்லி'க்கு தாங்கள் கொடுத்த செய்திகளை உண்மைதான் என்று நிரூபித்தனர்.

விமானப் பணிப்பெண்ணாக வேலை வாங்கி தருவதாக ஏமாற்றப்பட்டு கற்பழிக்கப்பட்ட 24 வயது பஞ்சாபி பெண், ஒரிசா மாநில மின்சார வாரியத்தின் விருந்தினர் மாளிகையில் தங்கி பட்நாயக்கால் ஏமாற்றப்பட்ட சாப்ராணி தாஸ் முதலானோரின் சோகக் கதைகளையும் அடுக்கான ஆதாரங்கள் அனைத்தையும் தனது செய்திக்கு ஆதாரமாக கோர்ட்டில் சமர்ப்பித்தது, 'வீக்லி' பத்திரிக்கைக் குழு. மறுபுறம், இதே செய்திகளை வெளியிட்ட புவனேஸ்வரின் 'நியூஸ் டைம்' பத்திரிக்கை நிருபர் மிருகத்தனமாக தாக்கப்பட்டு, அரசு குடியிருப்பிலிருந்து விரட்டப்பட்ட ஆதாரங்களையும் கோர்ட்டில் சமர்ப்பித்தது 'வீக்லி' பத்திரிக்கை குழு.

பத்திரிக்கை செய்தி மட்டுமல்ல, இதை விட ஏராளமான ஆதாரங்களை சுட்டிக் காட்டி, எதிர்க்கட்சிகளால் ஒரிசா சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. ஒரிசா மாநிலத்தின் ஜனதா கட்சியால் ஆதாரங்கள், நேரடி விவரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட பட்நாயக்கின் கீழ்த்தரமான நடத்தைகள் அடங்கிய குறிப்பு ஆகியன ''ரகசிய'' கடிதமாக, மாநில கவர்னருக்கு அனுப்பி, நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டது. ''ஆதரவற்றவர்கள்'', ''சிறந்த மாணவர்கள்'' என்று ''கீழ்தரமான இச்சை''களுக்கு முதல்வர் 'நிவாரண நிதி'யை கேடாக பயன்படுத்தியிருக்கிறார். இவ்வாறு. அந்நிதியிலிருந்து 58,0424.43 ரூபாய் விரயமாக்கப்பட்டிருக்கிறது. ''கல்லூரியிலிருந்தும், பள்ளியிலிருந்தும் எப்போதோ விலகிச் சென்ற பிறகும் அழகானவர்களுக்கும் இளைஞர்களுக்கும் அத்தொகை தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கிறது''

''சொல்ல முடியாத வறுமையில் உழன்றுக்கொண்டு நம்பிக்கையிழந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும் படிப்பை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சேர வேண்டிய தொகையெல்லாம், இப்படி அசிங்கமான விளையாட்டுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது 1980 ஆண்டு முதலே இது தொடர்கிறது. தயவு செய்து நீங்கள் இதில் நேரடியாக தலையிட்டு விசாரித்து நடவடிக்கை எடுக்கவும்'' என்று '86 ஆம் ஆண்டு ஏப்ரல் 26ந் தேதி கடிதத்தில் கவர்னரிடம் கோரியிருக்கிறது, ஒரிசா ஜனதா கட்சி.



ஓரின உறவு; பெண் பித்தன் - ஒரிசா முதல்வர் ஜெ.பி.பட்நாயக் (உள்படம்) எதுபொய்? செய்தியா அல்லது பத்திரிக்கைச் சுதந்திரமா? 'வீக்லி' பத்திரிக்கை ஆசிரியர் பிரிதீஷ் நந்தி

இவ்வளவு ஆதாரங்கள் இருந்தும் தன்னுடைய வாதங்களை கோர்ட்டில் நிரூபிக்க சாத்தியமில்லை என்று பின்வாங்கிவிட்டார், 'வீக்லி' பத்திரிக்கை ஆசிரியர் பிரதீஷ் நந்தி. காரணம், இந்த 3 ஆண்டு காலத்தில் அனைத்தும் தலைகீழாக திரும்பிவிட்டது. செய்திகள் கொடுத்த அனைவரும் உயிர்வாழவே முடியாது என்ற அளவு பட்நாயக் கும்பலால் பழிவாங்கப்படுகின்றனர். அவர்களது வீடுகளும் உடமைகளும் சூறையாடப்படுகின்றன. பலமுறை அவர்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். பல்வேறு பொய்வழக்குகள் புனைந்து போலீசு மிரட்டுகிறது. பாதிக்கப்பட்டவர்களின் தரப்பிலிருந்து எந்த ஒரு புகார் மனுவையும் போலீசு வாங்க மறுக்கிறது. சாட்சியங்களிடமிருந்து வாக்குமூல பத்திரங்களை வாங்க நீதிமன்றம் பல முறை மறைமுகமாக மறுத்திருக்கிறது. ஒரிசா மாநிலத்திலிருந்து இவ்வழக்கை வேறு மாநில கோர்ட்டுக்கோ, உச்ச நீதி மன்றத்துக்கோ மாற்ற வேண்டும் என்ற ஆசிரியரின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

இதுவரை இவ்வழக்கிற்காக பென்னட் காலமென் அண்டு கம்பெனி 30 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறது. இந்த 3 ஆண்டுகாலத்தில் ஆசிரியர் தொழில் பலமுறை பாதிக்கப்பட்டுள்ளது. சாட்சியங்களை சந்திப்பது, அவர்களை கோர்ட்டுக்கு அழைத்து வருவது என்று பல டஜன் முறை, ஒரிசாவுக்கும் பம்பாய்க்கும் பறந்திருக்கிறார்கள் பிரதீஷ் நந்தியும் அப்தியும். அனைத்தும் இப்போது விழலுக்கு இறைத்த நீராகி விட்டது. இனிமேலும் தாக்குப்பிடிக்க முடியாது என்று பென்னட் காலமென் அண்டு கம்பெனி வழக்கை கைகழுவி விட்டது. பென்னட் காலமென் அண்டு கம்பெனியின்; 'டைம்ஸ் ஆப் இந்தியா' குரூப் பத்திரிக்கை ஆசிரியர்களும் நிருபர்களுமே, பிரதீஷ் நந்திக்கும், அப்திக்கும் எதிராகத் திரும்பிவிட்டனர். ஒரிசா மாநில பத்திரிக்கையாளர்கள் சங்கம், ஒட்டு மொத்தமாக இவர்களுக்கு உதவ மறுக்கிறது. பணம் கொடுத்தால்கூட வாதாடுவதற்கு வழக்கறிஞர்கள் கிடைக்கவில்லை. விளைவு, நிபந்தனையற்ற சரணடைவு!

இதில் வேடிக்கை என்னவென்றால், இன்னமும் இவர்கள் பத்திரிக்கை சுதந்திரத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருப்பதாக கூறுகின்றனர். வாசகர்களுக்கும் அந்த பொய்யான நம்பிக்கையை காட்டுகின்றனர்.

''நாட்டில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்துக் கொள்வதில் பிரதமர் அக்கறை உடையவராய் இருக்க வேண்டும். இல்லையேல் பத்திரிக்கை சுதந்திரம் உயிர்வாழவே முடியாது'' என்கிறார் பிரதீஷ்நந்தி.

உண்மையிலேயே இவர்கள் பத்திரிக்கை சுதந்திரத்திற்கு நிற்பதாய் இருந்தால், செய்திகளின் உண்மைகளை நிலை நாட்டுவதால் இருந்தால், குறைந்தபட்சம் தங்கள் வேலையை 'ராஜினாமா' செய்திருக்கலாம். பணம், பதவி, 'புகழ்' இதை துறப்பதற்கு அவர்கள் தயாரில்லை. போராட்டத்தை தொடராமலேயே அறுவடைக்காக ஏங்குகிறார்கள். இந்த உளுத்த உத்தரங்கள்தான் ஜனநாயகத்தின் நான்காவது தூண்களாம்!

O பச்சையப்பன்.

படிப்பகம்

www.padippakam.com

## நோய்க்குறிகள்

# கிரிமினல் அரசியல்





உ.பி.யை ஆளும் யுத்த பிரபு எம். எல்.ஏ. லல்லுபிரசாத்.

படிப்பகம்

www.padippakam.com

திரா - உ.பி. செய்தித்
ரி. மஃபியாத் தலைவன்
கர் சுக்லாவுடைய மகனு
றந்தநாள் விழாவுக்கு
துகாப்போடு போனவர்.

அம்மர் ரிஜ்வி - உ.பி. மராமத்துத் துறை மந்திரி. 30 கிரிமினல் குற்றங்கள் செய்த முதல் தர கிரிமினல் ராம் கோபால் மிஸ்ராவின் நெருங்கிய கூட்டாளி.





துப்பாக்கி ஆட்கள் புடைசூழத் தமது அன்றாடப் பணியைத் துவங்கியிருக்கிறாரே, இவர் ஒரு மாண்புமிகு மக்கள் பிரதிநிதி! உத்திரப்பிரதேசம், சோனாப்பூர் தொகுதி காங்கிரசு எம்.எல்.ஏ.லல்லு பிரசாத்!

பிரதம மந்திரியைப் போல ஏன் இவ்வளவு பலத்த பாதுகாப்பு. மக்கள் விரோதிகள், பயங்கரவாதிகளின் கொலைப்பட்டியலில் இருக்கிறாரா? இல்லை. இவரே ஒரு மக்கள் விரோதி-கிரிமினல் குற்றவாளி! சமூக விரோத, சட்ட விரோதக் குற்றங்களையே தொழிலாகக் கொண்ட ஒரு கிரிமினல்-மஃபியா ✱ கும்பலின் தலைவர்.

கிரிமினல் குற்றவாளி - எனவே போலீசிடமிருந்து ஆபத்து வந்துவிடும் என்று அஞ்சுகிறாரா? இல்லை. இவரது மெய்க்காப்பாளர்களில் ஒரு போலீசுக்காரனும் இருக்கிறானே! இதே போன்ற வேறு போட்டி கிரிமினல்-மஃபியா கும்பல்கள் இவரது உயிரைப் பறித்து விட எப்போதும் காத்திருக்கின்றன!

சுருக்கமாகச் சொன்னால் சினிமாவிலே வரும் இரகசிய உலக வில்லன்களில் ஒருவர் - அரசுப் பாதுகாப்புடன்! இந்த லல்லு பிரசாத்தைப் போல இன்னும் 31 கிரிமினல்கள் உத்திரப்பிரதேச எம்.எல்.ஏக்களாக இருப்பதாக மாநிலப் போலீசுத்துறையின் இரகசிய அறிக்கை கூறுகிறது. அவர்களிலே 18 பேர் காங்கிரசார், 6 பேர் ஜனதாவினர். 4 மாநில மந்திரிகளும், 2 மத்திய மந்திரிகளுமே கிரிமினல் குற்றவாளிகள் அல்லது கிரிமினல்-மஃபியா கும்பல்களை வைத்து இயக்குபவர்கள்.

ஏராளமான பஞ்சாயத்துக்கள், ஒன்றியங்கள் மட்டுமல்ல; ஆறு மாவட்ட வாரியத் தலைவர்களும், 18 நகரவைத் தலைவர்களும் கிரிமினல்-மஃபியா கும்பல் தலைவர்கள். இவர்கள் தவிர மாவட்டக் கட்சித் தலைவர்களையும் சேர்த்து 400 பேர் உத்திரப்பிரதேசத்தின் தீவிர அரசியல் பிரமுகர்களாக உள்ளனர்.

இந்த வகையிலே முன்னோடியாக விளங்குவது பீகார். கடந்த மூன்று பொதுத்தேர்தல்களில் 40க்கும் மேற்பட்ட கிரிமினல்-மஃபியாத் தலைவர்கள் போட்டியிட்டு எம்.எல்.ஏ, எம்.பி.க்கள், மந்திரிகளாகவும் ஆகியுள்ளனர். சிலர் கிரிமினல் குற்றங்களுக்காக

---

✱ வங்கி - வழிப்பறிக் கொள்ளைகள், கூலிக்குக் கொலை, பெண்களைக் கடத்திக் கற்பழித்து விற்பது, போதை மருந்து உற்பத்தி - கடத்தல் - விற்பனை, நகரக் கடை வீதிகள் - நெடுஞ்சாலைகளில் கப்பம் வசூலிப்பது போன்ற கிரிமினல் குற்றங்கள். கள்ளச் சாராயம், விபச்சாரம், கள்ளச்சந்தை ஆகிய தொழில் புரிபவர்களுக்கும் நிலக்கரி, காட்டு மரங்கள் போன்றவற்றை கொள்ளையிடுபவர்களுக்கும் அடியாள் வேலைகள் செய்வது; புறம்போக்குகளைக் கைப்பற்றிக் குடிசைப்பகுதிப் பிரபுக்களாவது; குடித்தனக்காரர்களையும், குத்தகைதாரர்களையும் வெளியேற்றுவது - இப்படி ஏராளமான கிரிமினல் குற்றங்களையே தொழிலாக - அமைப்பு ரீதியாகத் திரண்டு செய்யும் கும்பல் தான் கிரிமினல்-மஃபியா கும்பல் எனப்படுவது.

படிப்பகம்

www.padippakam.com



சைதுஜாமான் - உ.பி. போலீசு துணை மந்திரி. லக்னோ வங்கிக் கொள்ளையைச் செய்த பக்மோத்லாலைக் கைது செய்வதைத் தடுத்தவர். நமீமா என்ற பெண்ணைக் கடத்திக் கற்பழித்துக் கொன்ற வழக்கில் சம்பந்தப்பட்டவர்.



ஷ்யாம் சூரத் உபாத்யாய் - உ.பி. கிராம வளர்ச்சி மந்திரி. 1988 அலகாபாத் இடைத் தேர்தல் வேலைக்காக புக்கால் மகாராஜ் என்ற கிரிமினல் குற்றவாளியை விடுதலை செய்தவர்.

சிறையில் இருந்தபடியே போட்டியிட்டு வென்றனர் என்றால் மஃபியா கும்பலின் பலத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

அரசியலும் இவர்களுக்கு புதிதல்ல. அரசியல் கட்சிகளுக்குக் கட்டாய வசூல், ஆள் சேர்ப்பது, கூட்டங்கள் நடத்துவது; எதிரணியின் முக்கியப் பிரமுகர்களைக் கொலை செய்வது, எதிரணியினரை ஓட்டுப்போட விடாமல் அடித்து விரட்டுவது; ஓட்டுச்சாவடிகளைப் கைப்பற்றி தாமே முத்திரை குத்திப் போடுவது, ஓட்டுச்சீட்டுக்கள் - பெட்டிகளைப் பறித்துக் கொள்வது, ஓட்டு எண்ணுமிடங்களைக் கைப்பற்றுவது போன்ற பல காரியங்களில் அரசியல்வாதிகளுக்கு உதவுபவர்கள் தான்!

இப்படி அரசியல்வாதிகளைப் பதவிக்குக் கொண்டு வந்து தமது கிரிமினல் தொழில்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதை விட தாமே, நேரடியாக அரசியலில் குதித்து, பதவிகளைப் பிடிக்கத் துவங்கினார்கள். சட்டத்தைத் தகர்ப்பவர்களே சட்டத்தை இயற்றுபவர்களாக மாறினார்கள்.

நடிகர், நடிகைகளின் கவர்ச்சியைக் காட்டி, அரசியல்வாதிகள் ஆட்சியைப் பிடிப்பதைப் பார்த்தவர்கள் தாமே அரசியலில் குதித்து ஆட்சியையும் பிடித்தனர் - அது பொறுக்கி அரசியல். இது கிரிமினல் அரசியல்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இறுதியான புகலிடம் பொறுக்கி அரசியல் என்றுதான் எண்ணினோம். இல்லை. இன்னும் ஒரு படி மேலே போய் கிரிமினல் அரசியலில் தஞ்சம் புகுந்துள்ளன நாட்டின் பிரதான ஓட்டுக்கட்சிகள்.

ஆக, கிரிமினல் அரசியல் முன்னணிக்கு வருகிறது. காந்தியம், கம்யூனிசம், திராவிடம், தேசியம், இந்துராஷ்டிராம் - இப்படி கொள்கை, லட்சியம் பேசி ஓட்டுப் பொறுக்குகிற பழம்பெருச்சாளிகளின் காலம் மலையேறி விட்டது.

கவர்ச்சி முழக்கம், இலவசத் திட்டங்களோடு சினிமா நடிகர், நடிகைகளைக் காட்டி, தனிநபர் கவர்ச்சியை வைத்து ஓட்டுப் பொறுக்குவதில் கூட இப்போது அரசியல் கட்சிகளுக்கு முழு நம்பிக்கையில்லை.

அதாவது கதர் சட்டையும் காந்தி குல்லாயும், கரைபோட்ட வேட்டி-துண்டும் போதா. ரூபாய் நோட்டுக்களும் துப்பாக்கிகளும் தான் தேர்தல் வெற்றியை ஈட்டித்தரும் என்றே இப்போது அரசியல் தலைவர்கள் நம்புகின்றனர்

கவர்ச்சி முழக்கங்கள், இலவசத் திட்டங்களை வைத்து அரசியல் பிழைப்புவாதிகளைக் கொண்ட அமைப்புகளைக் கட்டி தேர்தல் வெற்றிகளை ஈட்டுவது பொறுக்கி அரசியல். இது தெற்கே, குறிப்பாக தமிழகத்திலே தோன்றி, வளர்ந்து வடக்கே பரவுகிறது.

கிரிமினல்-மஃபியா கும்பல்களை வைத்து பலாத்காரமான முறையில் எதிரிகளை வீழ்த்தி, தேர்தல் தில்லுமுல்லுகளைச் செய்து வெற்றிகளை ஈட்டுவது கிரிமினல் அரசியல். அது வடக்கே, குறிப்பாக உத்திரப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களிலே தோன்றி, வளர்ந்து தெற்கே பரவுகிறது.

எனவேதான் எதிர்வரும் தேர்தலைக் குறி வைத்து கிரிமினல்-மஃபியா கும்பல் தலைவர்களைத் தம் கட்சிக்கு இழுத்து வர நாட்டின் முக்கியக் கட்சிகள் அனைத்தும் போட்டி போடுகின்றன.

பீகாரின் 13 கிரிமினல் சுயேச்சை எம்.எல்.ஏக்களையும் இரண்டு எம்.பிக்களையும் காங்கிரசு வளைத்துப் போட்டுவிட்டது. மாற்றுக்கட்சி எம்.எல்.ஏ, எம்.பிக்களிலும் கிரிமினல்-மஃபியா தலைவர்களை இழுப்பதில் தான் குறியாக உள்ளது.

நகரவைத் தேர்தல் வெற்றிகளைச் சாதிப்பதற்காக சிறையில் இருந்த பல கிரிமினல் குற்றவாளிகளை விடுதலை செய்து அகமதாபாத், பரோடா, லக்னோ, அலகாபாத், கான்பூர் தேர்தல்களில் நிறுத்தி வெற்றியும் கண்டது. இரு மாவட்ட வாரியத் தலைமைப் பதவிகளையும் கைப்பற்றியது. இதற்காகத் தான் கட்சி ரீதியாகப் போட்டியிடவில்லை.

தன்பாத் மாஃபியாத் தலைவர், எம்.எல்.ஏ. சூர்யதேவ்சிங் — ஜனதாதளத் தலைவர் சந்திரசேகரின் கூட்டாளி.



இதே உத்தியைத்தான் எதிர்க்கட்சிகளும், குறிப்பாக ஜனதாவும் பின்பற்றுகின்றன. சஞ்சய்சிங் மற்றும் முலயம்சிங் யாதவ் ஆகிய இரு ஜனதாத் தலைவர்களும் உ.பி.யின் இரகசிய உலகத் தலைவர்களுடன் நெருங்கிய கூட்டு வைத்துள்ளார்கள். தன்பாத் நிலக்கரி மஃபியா கும்பல் தலைவர் சூர்யதேவ் சிங் ஜனதா தலைவர் சந்திரசேகரின் நெருங்கிய கூட்டாளி

இதே போலத்தான் மகாராஷ்டிரா. மத்தியப்பிரதேசம், வங்காளம் போன்ற பிற மாநிலங்களிலும் கிரிமினல்-மஃபியாக் கும்பல்களை அரசியல் கட்சிகள் நம்பியுள்ளன. ம.பி.யில் 20 அம்சத் திட்ட அமலாக்கக் கமிட்டி முழுவதும் கிரிமினல்கள். பம்பாயின் சிவசேனா கிரிமினல் குண்டர் படைக்கு மாற்றாக முஸ்லீம்-மஃபியா கும்பல்களைப் பயன்படுத்துகின்றனர்.

கல்கத்தாவின் விபச்சாரத்திலும் கடத்திலிலும் ஆதிக்கம் வகிக்கும் மஃபியா கும்பல்களைப் போட்டி போட்டுக்கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகளும் காங்கிரசும் இழுக்கிறார்கள்.

சர்வதேச ரீதியில் போதை மருந்து-மஃபியா, ஆயுத பேரக்கும்பல்களுடன் கூட்டு வைத்துள்ள இந்திய ஆளும் கட்சிகள் இங்கே கிரிமினல்-மஃபியா கும்பல்களை நம்பி தேர்தல்களில் குதிப்பது வியப்புக்குரியது அல்ல.

இதையெல்லாம் கண்டு மரபுவழி அரசியல்வாதிகள் பதறுகிறார்கள். கூட்டுச்சேர்ந்தும் தனியாகவும் கிரிமினல் அரசியலுககு எதிராக அறிக்கை விடுகிறார்கள். கிரிமினல் அரசியலை வளர்க்கும் ராஜீவ், வி.பி.சிங் போன்ற தலைவர்கள் கூட அதை எதிர்ப்பதாகப் பாசாங்கு செய்கிறார்கள்.

கிரிமினல் அரசியல் என்பது நாட்டின் நாடாளுமன்றப் போலி ஜனநாயகத்தின் சாவுக்குரிய நோய்க்குறிகளில் ஒன்றுதான்! இனி இதை யாரும் காப்பாற்றவே முடியாது.

''துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது. ஓட்டுப் பெட்டிகளில் இருந்து அல்ல'' என்பதை அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள். துப்பாக்கி முனையிலேயே நாடாளுமன்ற ஜனநாயகம் நீடிக்க முடியும் என்றாகி விட்டது! எனவே துப்பாக்கி முனையிலே அது வீழும்!

படிப்பகம்

www.padippakam.com

■ இந்திய படை விலக்கம்

அனைத்துக் கட்சி மாநாடு

# இலங்கைப் பிரச்சினைகள் தீருமா?



ரோகண விஜயவீர
ஜே.வி.பி. தலைவர்



பிரபாகரன

செப்டம்பர் 13. இலங்கை - ஈழ விவகாரங்களில் இன்று முக்கியமான நாள். இலங்கையின் நெருக்கடிகளுக்குத் 'தீர்வுகாண' அனைத்துக் கட்சிகள் மாநாடு கொழும்பில் இன்று கூடுகிறது. இந்தியப் படைவிலக்கம் குறித்து இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஒப்பந்தம் இன்று அறிவிக்கப்படும் என்று பரவலாக நம்பப்படுகிறது.

"இந்தியா, இலங்கை ஆகிய இருநாட்டு அரசுகளுமே விட்டுக் கொடுத்து இந்தியப் படை விலக்கம் குறித்து ஒரு நல்ல, சிநேகபூர்வ ஒப்பந்தத்துக்கு வந்திருக்கின்றன. உடனடியான படைவிலக்கம் என்ற கோரிக்கையை பிரேமதாசா கைவிட்டுவிட்டார். இவ்வருட இறுதிக்குள் படைவிலக்கம் என்பதற்கு ஒப்புக் கொண்டு விட்டார். வடகிழக்கு மாகாண அரசுக்கு அதிகாரப்பகிர்வு செய்வது, ஈழத்தமிழர்களுக்குப் பாதுகாப்பு ஆகியன அடிப்படையில் மட்டுமே படைவிலக்கம் என்கிற நிபந்தனைகளை இந்தியாவும் கைவிட்டு விட்டது. வடகிழக்கு மாகாண அமைதிக்கமிட்டியில் புலிகள் பங்கேற்பது மற்றும் ஆயுதக் களைப்பு ஆகிய அடிப்படையில் தான் போர் நிறுத்தம் என்கிற நிபந்தனைகளையும் இந்தியா கைவிட்டு விட்டது. நிபந்தனையற்ற போர்நிறுத்தத்துக்கும், மற்ற விவகாரங்களை இலங்கை அரசின் பொறுப்பில் விடவும் இந்தியா சம்மதித்து விட்டது. இந்த அடிப்படையில் வரும் டிசம்பர் 31ந் தேதிக்குள் படிப்படியாக இந்தியா தனது படைகளை விலக்கிக் கொள்ளும்"

இவ்வாறு ஒப்பந்த உள்ளடக்கங்கள் பற்றி அதிகாரபூர்வ வட்டாரங்கள் செய்திகளை கசிய விட்டுள்ளன. இதன் அர்த்தம் என்ன? இந்தியா தனது பிராந்திய ஆதிக்க, ஆக்கிரமிப்பு - விரிவாக்கத் திட்டங்களைக் கைவிடுமா? ஒருக்காலும் இல்லை.

- தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவத்தினரைக் கொண்ட கூலிப்படையைத் திரட்டி ஈழத்துக்கு அனுப்பியுள்ளது. நேரடியாக ஆள்சேர்ப்பு செய்தால் அம்பலமாகிவிடும் என்பதற்காக, மாஜி இராணுவத்தினர் நடத்தும் தனியார் பாதுகாப்புப் படைக் கம்பெனிகள் மூலம் கூலிக்கு அமர்த்திக் கொண்டுள்ளது. ஈழப் போராளிகளுக்கெதிரான அதிரடித் தாக்குதல் நடத்துவது; சிங்கள-முஸ்லீம் மக்களைப் படுகொலை செய்து இனக்கலவரத்தைத் தூண்டி போராளிகள் மீது பழிபோடுவது; இலங்கை அரசுக்கு எதிராக சதி - நாச வேலைகள் செய்வது; ஈழ துரோகப் படைகளுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பது ஆகியன இந்தக் கூலிப்படைக்கான வேலைகள். - **இது அப்படி அனுப்பப்பட்ட கூலிப்படையினரே நம்மிடம் நேரடியாகச் சொன்ன தகவல்.**

- 'குடிமக்கள் தொண்டர்படை' என்கிற பெயரில் பகிரங்கமாகவும், ஈழ துரோகக் குழுக்களுக்கு மறைமுகமாகவும் இந்திய இராணுவம் பயிற்சியளிக்கும் முகாம்களை கிழக்கு ஈழப்பகுதியில் நடத்துகிறது. இலங்கை சுற்றுலா விடுதி உடமையாளர்களின் சங்கமே இது குறித்துப் புகார் கொடுத்துள்ளது. ஏராளமான நவீன ஆயுதங்கள் அங்கே குவிக்கப்படுகிறது.

- படைவிலக்கம் - போர்நிறுத்தத்துக்கு முன்பாக சாத்தியமான அளவு புலிகளின் ஆயுதபலத்தை நிர்மூலமாக்கி முடக்கி விடுவது; குறிப்பாக புலிகளுக்கு மிகுதியான பின்பலம் உள்ள யாழ் வளைகுடாப் பகுதியில் கிராமம் கிராமமாக மக்கள் திரள் படுகொலைகளை நடத்தி - அழித்து, பீதியை உருவாக்கி மக்கள் ஆதரவைத் தகர்ப்பது - இந்த நோக்கத்துக்காக முன்னிலும் வெறிகொண்டு இந்திய இராணுவத் தாக்குதல் நடத்தப்படுகின்றன. பருத்தித்துறை - வல்வெட்டித்துறைப் படுகொலைகளும், மீண்டும் அகதிகள் ஓடிவரத் துவங்கியிருப்பதும் இதற்கான சான்றுகள்.

ஆக, இந்தியாவின் நேரடியான ஆக்கிரமிப்புப் போர்தான் நிறுத்தப்படுமே தவிர ஈழத் துரோகிகளும் கூலிப்படையினரும் நடத்தும் பதிலிப்போர் (PROXY WAR) தொடரும்; கூடவே இலங்கை அரசுடனான அரசுதந்திரப் பனிப்போரும் தொடரும் என்பதில் சந்தேகமே கிடையாது. அதற்கான எல்லா தயாரிப்புகளையும் இந்திய அரசு செய்து வருகிறது. இந்தியப் படைவிலக்கத்துக்குப் பிறகு ஈழத்தில் ரத்தக்களறி ஏற்படும் என்று பாசிச ராஜீவ் கும்பலும் அதன் அடிவருடிகளும் எச்சரித்து வருவது தாம் நடத்தத் திட்டமிட்டுள்ள சதியைத்தான் குறிக்கிறது!

சில துரோகிகள் தவிர இலங்கையின் அனைத்துப்பிரிவு மக்களும் ஏகோபித்த குரலில் வெளியேறும்படி முழங்கியது; வெல்ல முடியாத ஆக்கிரமிப்புப் போரில் சிக்கிக்கொண்டு பெருமளவு பொருள் மற்றும் உயிர்பலியிடுவதற்கு எதிராக இந்தியாவிலேயே நிலவும் எதிர்ப்பு; தேர்தல் ஆண்டில் ஆக்கிரமிப்புப் போர் ஏற்படுத்தும் எதிர்விளைவு; சர்வதேச ரீதியில் நியாயப்படுத்த முடியாமல் தனிமைப்பட்டுப் போனது - ஆகிய காரணங்களால் நேரடிப்போரை முடித்துக் கொண்டு மறைமுகப் போருக்குப் போகும்படி பாசிச ராஜீவ் கும்பல் நிர்பந்திக்கப்பட்டுள்ளது.

அவமானத்துக்கும் அருவெறுப்புக்கும் உரிய ஓர் ஆக்கிரமிப்புப் போரை நடத்திவிட்டு நாடு திரும்பும் இந்திய இராணுவத்தை மாபெரும் தியாகம் புரிந்து அமைதிப் பணியாற்றித் திரும்பும் வெற்றிப்படையாக சித்தரித்து பொய்ப் பிரச்சாரமும் தேசியவெறியும் இங்கே பெரிய அளவிலே நடக்கும். வரவேற்பு விழாக்களும் வாழ்த்துக்களும், பரிசுகளும் மாலைகளும் குவியும். ஓட்டுப்பொறுக்குவதைக் குறியாக வைத்து பாசிச ராஜீவ் கும்பல் திட்டமிட்டே இவற்றை செய்யும். திராவிட, இனமான சிங்கங்களோ அந்தத் தேசிய வெறியுடன் சமரசம் செய்து கொண்டு விடுவார்கள்.

ஆனால் இந்திய இராணுவத்தின் ஈழத்து அக்கிரமங்கள் - அட்டூழியங்களை மேலும் ஆதாரத்துடன் அம்பலப்படுத்துவது புரட்சியாளர்களின் சர்வதேசியக் கடமையாகும்.

ஜனாதிபதி ஆட்சி முறைக்குப் பதிலாக பிரதமர்-நாடாளுமன்ற ஆட்சி முறை, மீண்டும் பொதுத்தேர்தல்கள் நடத்துவது, அதுவரை ஒரு இடைக்கால அரசு அமைப்பது ஆகியன கொழும்புவில் நடக்கும் அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் எதிர்க்கட்சிகள் கோருகின்றன. அரசியல் அமைப்பு சட்டத்திருத்தங்கள் குறித்துப் பரிசீலிப்பதாக பிரேமதாசா ஒப்புக்கொண்ட போதும் அதிகாரத்தைக் கைவிட சம்மதிக்க மாட்டார். அதைவிட முக்கியமானது ஆயுதபலம் பொருந்திய மிகப்பெரும் சக்தியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இந்த மாநாட்டைப் புறக்கணித்து விட்டது. எனவே பாரிய விளைவு எதையும் மாநாடு சாதித்து விட முடியாது.

இந்தியப் படைவிலக்கத்தை சாதித்து விட்டால் ஜே.வி.பி.யிடமிருந்து அரசியல் முன்முயற்சியைப் பறித்து, அதை ஒடுக்கிவிடலாம் என்று பிரேமதாசா கும்பல் நம்புகிறது. அது ஜே.வி.பி.யைக் குறைத்து எடைபோடுவதாகும். படைவிலக்கம் மட்டுமல்ல; கடந்த ஜனாதிபதி, நாடாளுமன்ற தேர்தல்கள் மோசடியானவை, ரத்து செய்ய வேண்டும் என்பது உட்பட பல அரசியல் கோரிக்கையையும் வைத்து ஜே.வி.பி. இயக்கம் காட்டியுள்ளது. மாணவர் - இளைஞர்கள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் ஆகிய பலபிரிவினரையும் திரட்டியுள்ளது. பல அரசியல் வேலைநிறுத்தங்களை பல நாட்களாக வெற்றிகரமாக நடத்தியும், ஆயுதபலம் பெற்றும் உள்ளது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குக் குறைவான எந்த கோரிக்கைக்கும் ஜே.வி.பி. இறங்கி விடாது.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான இயக்கம் - போரை நடத்துவதினால் ஜே.வி.பி. புலிகள் உட்பட எல்லா தேசபக்த சக்திகளையும் நாம் ஆதரிக்கிறோம். ஆனால் படைவிலக்கத்துக்குப் பிறகு உள்நாட்டுப் போரில் அவர்களின் செயல்பாடுகளை அப்படியே ஆதரிக்க முடியாது. தேச துரோகிகளை அவர்கள் தண்டிப்பதைக் குறை கூறமுடியாது. துரோகத்துக்குரிய 'பரிசை' அளிப்பது சரியானதே! ஆனால் இந்திய ஆக்கிரமிப்பு போரை எதிர்த்து வந்த தேசபக்த, ஜனநாயக சக்திகளான வேறு பிற போராளிக் குழுக்களுக்கு எதிராக தடைவிதிப்பது, ஒடுக்குவது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவதையோ, சிங்கள இனவாத, சமூக பாசிச, தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஜே.வி.பி.யினர் ஈடுபடுவதையோ நாம் ஆதரிக்க முடியாது!

படிப்பகம்

www.padippakam.com

**கொலம்பியா:**

# போதை மருந்து மாஃபியாக்கள் நடத்தும் உள்நாட்டுப் போர்!

அமெரிக்காவின் நவீன காலனி நாடுகளில் ஒன்றான, தென்னமெரிக்கா கண்டத்தின் உச்சியில் உள்ள சிறிய நாடுதான் கொலம்பியா. கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் அந்நாட்டின் ராணுவமும் போலீசும் எந்திரத் துப்பாக்கிகளுடனும் பீரங்கிகளுடனும் எதிரியை நோக்கிப் புறப்பட்டது. இந்த எதிரிகள் உள்நாட்டுக் கலகக்காரர்களோ அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களோ அல்ல. இவர்கள் கொலம்பியாவை ஆட்டிப் படைக்கும் போதை மருந்து கடத்தல்காரர்கள். இவர்களைப் பிடிக்கத்தான் பெரும் படையாக கொலம்பிய ராணுவம் புறப்பட்டது.

கொலம்பியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் போட்டியிட இருந்தார், எதிர்க்கட்சியான லிபரல் கட்சித்தலைவர் லூயிஸ் கார்லோஸ்கலன். போதை மருந்து கடத்தும் மாஃபியா கும்பலுக்கு எதிராக மக்களைத் திரட்டி அவர் போராட்டங்களை நடத்திவந்தார். அவர் தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடும் என்றஞ்சிய போதை மருந்து மாஃபியா கும்பல், அண்மையில் அவரைச் சுட்டுக் கொன்றது. எதிர்க்கட்சித் தலைவர் கார்லோஸ் மட்டுமின்றி, இந்த மாஃபியா கும்பலுக்கு எதிராக நின்ற ஒரு மாஜிஸ்ட்ரேட், ஒரு போலீஸ் உயரதிகாரி ஆகியோரும் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சியான இப்படுகொலைக் கண்டு ஆத்திரமடைந்த கொலம்பிய மக்கள் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களைத் தொடங்கினர். பொதுமக்களின் எதிர்ப்பும் நிர்ப்பந்தமும் காரணமாக வேறுவழியின்றி போதை மருந்து கடத்தல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கையில் அரசு இறங்கியது. இதற்காகத்தான் இராணுவம் குவிக்கப்பட்டது.

முன்பெல்லாம் கொலம்பியா என்றாலே அதன் மணமிக்க காபியும், இசைத்தட்டுக்களும்தான் நினைவுக்கு வரும். இப்போது கொலம்பியா என்றாலே கோகைன் போதை மருந்து கடத்தல் கும்பல் என்றாகிவிட்டது. கொலம்பியாவின் தலைநகர் பொகோடோவை விட, போதை மருந்து கடத்தல்காரர்களின் கோட்டையான மெடலின் நகரம்தான் இன்று சர்வதேச ரீதியில் பிரசித்தி பெற்றதாக உள்ளது. மெடலின் மாஃபியாக்கள் கொலம்பிய அரசையே கவிழ்க்கக் கூடிய அளவுக்கு, அரசியல் - ராணுவத் தலைவர்களை விலைக்கு வாங்கக் கூடிய அளவுக்கு, அவசியமானால் அவர்களை கொலை செய்து தண்டிக்குமளவுக்கு மிருக பலம் மிக்கவர்கள். ஆயுதந்தாங்கிய குண்டர் படை, நவீன எந்திரத்துப்பாக்கிகள், குண்டுகள், ஹெலிக்காப்டர்கள், விமானங்கள், கார்கள் என்று கிட்டத்தட்ட போட்டி அரசாங்கத்தையே அவர்கள் நடத்திவருகின்றனர்.

கொலம்பிய அரசு இவர்களுக்கு எதிரான மேலோட்டமான நடவடிக்கை எடுத்த முதல் மூன்று நாட்களிலேயே கடத்தல் கும்பலுடன் தொடர்புடைய 10,000 பேர் கைதாயினர். ஹெலிகாப்டர்கள், கார்கள், ஏறத்தாழ 10 கோடி ரூபாய் மதிப்புடைய கோகைன் முதலானவை போலீசாரால் கைப்பற்றப்பட்டன.

தங்களைச் சீண்டிய ஆத்திரத்தில் போதை மருந்து கடத்தல் மாஃபியாக்கள் மெடலின் நாரில் அரசுக் கட்டிடங்களைக் குண்டு வீசித்தாக்கினர். ஆகஸ்ட் 27 அன்று மெடலின், பர்ரான் குவில்லா முதலான நகரங்களில் 9 வங்கிகள் குண்டு வீசித் தாக்கி அழிக்கப்பட்டன. நீதித்துறை பெண் மந்திரி மோனிகாவுக்கு தொடர்ச்சியாக கொலை மிரட்டல் வந்ததால், அவர் குடும்பத்துடன் அமெரிக்காவுக்கு தப்பியோடினார். போதை மருந்து கடத்தல் கும்பலின் முக்கிய புள்ளிகளில் ஒருவனும், புரவலனுமாகிய அப்ரஹாம் மஜாத் என்பவன் நாலரை டன் கோகைனுடன் கைது செய்யப்பட்டான். அவன் நாடு கடத்தப்பட்டு, அமெரிக்க கோர்ட்டில் விசாரணை செய்து தண்டிக்கப்படுவான் என்று அரசு அறிவித்தது. "எங்களை அழிக்க முயன்றால், அமெரிக்க கோர்ட்டுக்கு கொண்டு செல்லப்படும் ஒவ்வொரு கைதிக்கும் விலையாக 10 கொலம்பிய நீதிபதிகள் கொல்லப்படுவார்கள்" என்று போதை மருந்து கடத்தல் மாஃபியாக்கள் பகிரங்கமாக மிரட்டினர். மெடலின் மற்றும் பிற நகரங்களில் தொடர்ச்சியாக குண்டு வீசி அச்சுறுத்தினர். கொலம்பிய நீதிபதிகளும் நீதித்துறையினரும் பீதியில் உறைந்து போய் அரசிடம் கூடுதல் பாதுகாப்பு கோரினர். சிலர் அமெரிக்காவுக்கு குடும்பத்துடன் தப்பியோடினர்.

போதை மருந்து கடத்தல் மாஃபியாக்களின் தொடர்ச்சியான இந்த எதிர்த்தாக்குதலையடுத்து, அமெரிக்க 'மாமா' புஷ் ஆத்திரமடைந்தார். கொலம்பியா போதை மருந்து கடத்தல் கும்பலை ஒழிக்க 100 ராணுவ ஆலோசகர்களுடன், ஹெலிகாப்டர்கள், போர்விமானங்கள், ராணுவத் தளவாடங்களை உள்ளடக்கிய 100 கோடி ரூபாய் உதவியை அமெரிக்கா அளிப்பதாக அறிவித்தார். அதையடுத்து அமெரிக்க போர் விமானங்கள் கொலம்பியாவில் வட்டமிடத் தொடங்கிய அடுத்த சில மணி நேரங்களிலேயே மெடலின் நகரில் குண்டு வெடித்து, போதை மருந்து மாஃபியாக்கள் எச்சரிக்கை விடுத்தனர். "எங்கள் மீது கைவைத்தால் தலைநகர் பொகோடோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை குண்டு வைத்து தகர்த்து விடுவோம்" என்று பகிரங்கமாக மிரட்டினர். போதை மருந்து கடத்தல் மாஃபியாக்கள் எதையும் செய்யத் தயங்காதவர்கள் என்பதை நன்கறிந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் அவசர அவசரமாக தனது தூதரக ஊழியர்களைத் திருப்பியழைத்துக்கொண்டு, தூதரகத்தை தற்காலிகமாக மூடிவிட்டது.

போதை மருந்து கடத்தல்காரர்களுக்கு எதிராக கொலம்பிய - அமெரிக்க அரசுகள் கூட்டாக தாக்குதல் தொடுத்து வருவதைக் கண்ட இந்திய முதலாளித்துவப் பத்திரிக்கைகள் "போதை மருந்துக் கும்பலுக்கு எதிரான முடிவான போர், இறுதித் தாக்குதல்" என்று பெருமையாக சித்தரிக்கின்றன. நடப்பது முதல் போரோ முடிவான போரோ அல்ல. எப்போதெல்லாம் கொலம்பிய மக்கள் போதை மருந்து மாஃபியாக்களுக்கு எதி



கொலம்பிய காடுகளில் உள்ள போதை மருந்து சுத்திகரிப்புக் கூடம்.

படிப்பகம்

ராக நடவடிக்கை எடுக்கக் கோரி அரசை நிர்பந்தித்துப் போராடுகிறார்களோ அப்போதெல்லாம் கொலம்பிய அரசு கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுப்பது வழக்கம்.

சில ஆண்டுகளுக்கு முன் தங்களது எதிரியாகக் கருதிய கொலம்பிய நீதி மந்திரி ரோட்ரிகோ வாராவை போதை மருந்து கடத்தல் மாஃபியாக்கள் சுட்டுக்கொன்றனர். இக்கொலையைத் தொடர்ந்து கொலம்பிய மக்களின் எழுச்சியின் காரணமாக அன்றைய அதிபர் பெடான்கூர், போதை பிரபுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயன்றார். கொலம்பியாவின் முன்னாள் அதிபர் அல்போன்சா மூலம் அந்த மாஃபியா கும்பல் ஒரு சமரசத்துக்கு வந்தது. அதன்படி அரசு உயர் வக்கீலான கார்லோஸ் பேரங்கள் நடத்தினார். தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்திவிடவும், அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், வெளிநாடுகளில் தாம் குவித்துள்ள சொத்துக்களை கொலம்பியாவில் கொண்டு வந்து முதலீடு செய்யவும் மாஃபியா கும்பல் சலுகைகளைக் கோரியது. இவற்றை ஏற்கும் பட்சத்தில் கடத்தல் தொழிலையே தாம் கைவிட்டு விடுவதாகவும், கொலம்பியாவின் அந்நியக் கடன் முழுவதையும் தாமே அடைத்து விடுவதாகவும் உறுதி அளித்தனர். இப்படியொரு ரகசிய பேரம் நடப்பதை அறிந்து கொலம்பிய மக்கள் கொதித்தெழுந்ததால், அது முறிந்து போனது.

இந்த கொலம்பிய போதை மாஃபியாக்கள் மட்டும் ஆண்டொன்றுக்கு 50000 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்வதாக அமெரிக்க பத்திரிக்கைகள் கூறுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளுக்குள் கொலம்பியாவில் ஏறத்தாழ 100000 கோடி ரூபாய் மதிப்புள்ள மனைகள், மாளிகைகளை இக்கும்பல் வாங்கியுள்ளதாக அரசே கணக்கு காட்டுகிறது. ஹாங்காங், சிங்கப்பூர், சுவிஸ், பனாமா முதலான நாடுகளில் உள்ள வங்கிகளில் - வாடிக்கையாளர் தவிர வேறு எவரும் ரகசியங்களைப் பெறமுடியாத வங்கிகளில் இந்த மாஃபியாக்கள் கோடி கோடியாய் கருப்புப் பணத்தைக் குவித்து வைத்துள்ளனர்.

இந்த கடத்தல்காரர்களின் அடியாட்களுக்கு சில பயங்கரவாத அமைப்புகளும் அரசுகளும் கூட ஆயுத உதவியும் பயிற்சியும் அளிக்கின்றன. குறிப்பாக, கொலம்பியா மாஃபியா கும்பலுக்கு இஸ்ரேலிய கூலிப்படையினர் ரகசிய ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்ததாக அம்பலமாகியுள்ளது. இஸ்ரேலிய அரசும் தமது முன்னாள் ராணுவத் தளபதிகள் மீது இப்போது விசாரணையைத் துவக்கியுள்ளது.

''உலகில் இதுவரை கண்டிராத மிகக் கொடூரமான கிரிமினல் கும்பல்தான் போதை மருந்து மாஃபியா'' என்கிறார் கொலம்பிய அதிபர். அது உண்மைதான்!

போதை மருந்து கடத்தல்காரர்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கை எடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியமே பலமுறை பின்வாங்க நேரிட்டது. மெக்சிகோவுக்கு தனது அதிரடிப்படையை அனுப்பி போதை மருந்து கடத்தல்காரர்களை அமெரிக்கா ஒழிக்க முயன்றது. ஆனால் போதை மருந்து மாஃபியாக்கள் அப்படையின் பெரும்பகுதியினரைக் கடத்திச் சென்று கொன்றொழித்தனர். பெரு நாட்டு மாஃபியாக்கள் ஒரே நாளில் 19 ராணுவ அதிகாரிகளைக் கொன்றனர். ஹோண்டுராசில் ஒரு மாஃபியா தலைவனைக் கைது செய்ததும் அமெரிக்கத் தூதரகத்தைத் தாக்கி தீ வைத்துக் கொளுத்தினர்.

இத்தகைய மிருக பலமிக்க போதை மருந்து கடத்தல்காரர்களுக்கு எதிராகவும், அமெரிக்காவைச் சீரழித்துவரும் மிகப்பெரிய அபாயமான போதை மருந்து பழக்கத்துக்கு எதிராகவும் மிகத்தீவிரமான போரில் ஈடுபட்டிருப்பதாக ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் எடுபிடிகளும் நாடகமாடுகின்றனர். ஆனால் அமெரிக்க சி.ஐ.ஏ. நிறுவனத்தின் நடவடிக்கைகள் போதை மருந்து கடத்தலுக்கு உடந்தையாகவே உள்ளன. நிகரகுவா புரட்சி அரசுக்கு எதிராகக் கலகம் செய்யும் ''காண்ட்ராஸ்'' கூலிப்படைகளுக்கு ரகசியமாக ஆயுத உதவி செய்துவரும் சி.ஐ.ஏ., அவர்களிடமிருந்து போதை மருந்துகளை அமெரிக்காவுக்கு கடத்தி வந்து உதவி செய்கிறது. ரீகனின் 'ஈரான்-காண்ட்ரா' ஊழலில் இந்த ரகசியம் அம்பலமானது. பனாமாவின் ராணுவ சர்வாதிகாரி நோரிகாவிடமிருந்து ரஷிய சார்பு நாடான கியூபாவைப் பற்றி ரகசியங்களைப் பெற்றுக் கொண்டு அதற்கீடாக அவன் போதைமருந்து கடத்த சி.ஐ.ஏ. உதவி செய்துள்ளது. இது ஒருபுறமிருக்க, மத்திய-தென் அமெரிக்க நாடுகளது ஆட்சியாளர்களே போதை மருந்து கடத்தல் மாஃபியாக்களின் கூட்டாளிகளாக - பங்காளிகளாக உள்ளனர். பொலிவியா, பகாமாஸ், மெக்சிகோ, பனாமா ஆகிய நாடுகளின் முன்னாள் ஆட்சியாளர்கள் போதை மருந்து கடத்தல் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடித்துள்ளனர் என்று அமெரிக்காவின் கமிஷன் அறிக்கையொன்று குற்றம் சாட்டுகிறது. இந்த லட்சணத்தில் போதை மாஃபியாக்களுக்கு எதிராக அமெரிக்கா தீரமாகப் போராடுவதாகக் கூறுவது, நல்ல வேடிக்கை.

உலகை அச்சுறுத்தி வரும் போதை மருந்து வியாபாரத்தை ஏகாதிபத்தியங்களாலும் அவர்களின் அடிவருடிகளாலும் ஒருக்காலும் ஒழிக்க முடியாது. அன்று சீனத்தை அபினியின் மூலம் அடிமைப்படுத்திய ஏகாதிபத்தியங்களுக்கும் அவர்களின் எடுபிடிகளுக்கும் எதிராக தோழர் மாவோ தலைமையில் கம்யூனிஸ்டுகளும் உழைக்கும் மக்களும் விடாப்பிடியாகப் போராடி வென்று நாட்டை விடுதலை செய்தனர். இன்று கம்யூனிசப் புரட்சியாளர்களும், ஜனநாயகவாதிகளும், உழைக்கும் மக்களும் அணிதிரண்டு அத்தகையதொரு புரட்சியைச் சாதித்தால்தான், போதை மருந்து மாஃபியா கும்பலையும் அவர்களின் கூட்டாளிகளாக உள்ள பிற்போக்கு ஆட்சியாளர்களையும் வீழ்த்த முடியும் என்பதை கொலம்பிய விவகாரம் மீண்டும் உணர்த்துகிறது.

O குமார்.

## போதை மருந்து மகாராஜாக்கள்!

போதைமருந்து உற்பத்தி செய்யும் மஃபியாக்களுக்குக் கடத்தல் வேலை செய்துவரும் ஒரு கும்பலின் தலைவன் எஸ்கோபார். கொலம்பியாவில் பெரிய அளவு பணக்காரனான இவனுக்கு ''கறுவா வளர்ச்சி'' முக்கியத் தொழில் என்கிறான். பல ஆடம்பரக் கட்டிடங்கள், பண்ணைகள், கால்பந்தாட்ட வளாகம், 10 நீர் யானைகள், 2 இந்திய யானைகள் மற்றும் பல மிருகங்களைக் கொண்ட தனியார் மிருகக்காட்சிசாலை ஆகியன வைத்திருக்கிறான். கொலம்பியா நாடாளுமன்றத்தில் அடுத்தடுத்து உறுப்பினராக ஆனவன். கொலம்பியாவின் லிபரல் மற்றும் கன்சர்வேட்டிவ் ஆகிய இரு முக்கிய கட்சிகளுக்குக் கோடிகோடியாக நிதிவாரி வழங்குபவன். போதைமருந்து மாஃபியாக்கள் சேர்ந்து ''மெடல்லின்'' என்கிற கூட்டமைப்பை நிறுவி உள்ளனர். அதன் மற்றொரு முக்கிய உறுப்பினர் ஜோர்கே ஒச்சாவோ குடும்பம். மத்திய அமெரிக்கக் கடற்கரையில் ஒரு விமானத்தளம், நீச்சல் குளங்கள், மோட்டார் படகுகள், திறந்தவெளி மிருகக்காட்சிச் சாலை மற்றும் காளைச் சண்டை வளையம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு போதைமருந்து கடத்தலில் ஈடுபட்டுள்ளான். ஒச்சாவோவின் தந்தை சண்டைபோடும் காளைகளை வளர்த்து ஸ்பெயினுக்குக் கடத்துகிறான்.

கொலம்பியாவை மையமாகக் கொண்ட இன்னொரு போதை மஃபியா கும்பல் ஜிப்பார்டோ ரோட்ரிக்கெஜ் தலைமையிலானது. ஜோன்ஜாவோ ரோட்ரிக்கெஜ் மற்றும் போடெரோ ஆகியோர் அவன் பங்காளிகள். தலைவன் ஜிப்பார்டோவுக்கு ஒரு கால்பந்தாட்டக் குழுவே உடைமையாக உள்ளது. தலைநகர் பொகோடாவில் பல லட்சம் மதிப்புடைய ஒரு பெரிய பண்ணையும், தனியார் விமானத்தளமும் உள்ளன. பங்காளி போடெரோவுக்கு மெடல்லின் நகரில் பிரபல கால்பந்தாட்டக் குழு உடைமையாக உள்ளது. இவற்றை வைத்துக்கொண்டு சூதாட்டம், பந்தயம் கட்டி விளையாடுவது இவர்களின் பொழுதுபோக்கு. ஏராளமான லட்சம் ஏக்கர் தோட்டப்பயிர் பண்ணைகளும் இவனுக்கு சொந்தம்.

போதைமருந்து கடத்தலில் ஈடுபட்டுள்ள இந்த மஃபியா கும்பல்கள் அந்நாட்டு கிராம மக்களுக்கு பல தானங்கள் வழங்கி கொடைவள்ளல் ''ராபின்குட்'' என்று பெயரெடுத்துள்ளனர். ஒரு ஆண்டு இவர்கள் கடத்தும் போதை மருந்தின் லாபம் மட்டும் 30,000 கோடி ரூபாய். மிகப்பெரிய அளவு மஃபியா கும்பலின் ஆதிக்கத்தை நிறுவுவதற்காக போட்டியாளர்களை விலைபேசி வாங்கினர் அல்லது படுகொலை செய்தனர். ''மிகப்பிரபலமான மெடல்லின் என்ற கூட்டமைப்பு மஃபியா, கொலம்பியாவின் பல அதிகாரிகள், நீதிபதிகள் மற்றும் போலீசாரை விலைக்கு வாங்கிவிட்டன. இவர்கள் அவ்வமைப்பின் கொத்தடிமைகளாக சம்பளப்பட்டியலில் இருக்கிறார்கள்'' என்று ஆட்சியாளர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளைப்பாழடிக்கும் பால் பெருக்குத் திட்டம்!

அமெரிக்காவில் ஒரு பக்கம் மக்கள் பட்டினியால் பரிதவிக்கும் அதேசமயம் அதிகமாக உற்பத்தியாகிவிட்ட கோதுமைசந்தைப் போட்டிக்காக கடலிலே கொட்டப்படுகிறது. பிரேசில் நாட்டிலோ காப்பிக் கொட்டை கடலிலே கொட்டப்படுகிறது. ஈராண்டுகளுக்கு முன்னர் மராட்டிய மாநிலம் வொர்லி பால் பண்ணையிலிருந்து தினமும் பல லட்சம் லிட்டர் பால் கடலில் கொட்டப்பட்டு வந்தது. இப்போது தமிழகத்திலும் பாலாறு பெருக்கெடுத்து ஓடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் 5000 டன் பால் பவுடரும், 3000 டன் வெண்ணெயும், 1000 டன் நெய்யும் குளிர் பதனக் கிடங்குகளில் நிரம்பி வழிகின்றன. இதுதவிர அரசின் பல்வேறு பால்நிறுவனங்களில் தினமும் 25 லிருந்து 30 டன் பால் பவுடர் உற்பத்தியாகி சேமிப்பு குவிகிறது. ஆனால் வாங்குவதற்குத்தான் ஆளில்லை. இது ஒருபுறமிருக்க, இப்போது புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அக்டோபரிலிருந்து ஜனவரி வரை பால் பெருகும் மாதங்கள். இம்மாதங்களில் உற்பத்தியும் சேமிப்பும் பெருகும். இப்போதைய சேமிப்பே கெட்டமுகி வரும்போது, அடுத்துவரும் மாதங்களில் நிலைமை என்னவாகுமோ என்று கையைப் பிசைகிறது, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் குழுமம் (TNCMPFஅரசின் கூற்றுப்படியே, ஏறத்தாழ 30 கோடி ருபாய் மதிப்புள்ள பால் பவுடர் மற்றும் வெண்ணெயை உடனடியாக கிடங்குகளிலிருந்து வெளியேற்றாவிட்டால் அத்தனையும் நாசமாகிப் போகும். அதாவது, அவையனைத்தும் சாக்கடையில் கொட்டப்படும்.

''தேங்கியுள்ள பால் பவுடரை விரைவாக விற்பனை செய்ய உரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளோம் தற்போது கிலோ 45 ருபாய்க்கு விற்கப்படும் ''ஆவின்'' பால் பவுடரை கிலோ ரூ 30லிருந்து 32க்குள் மொத்தமாக விற்க ஏற்பாடு செய்துள்ளோம். வெளிமாநிலங்களுக்கு பாலை ரயில் மூலம் ஏற்றுமதி செய்ய முயற்சித்து வருகிறோம்'' என்கிறது 'ஆவின்' நிறுவனம்.

''மே.வங்கத்துக்கு மாதம் ஒன்றுக்கு 50 டன் பால் பவுடர் வீதம் ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் போட்டுள்ளோம். கேரள அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். 8 மாநிலங்களில் 'ஆவின்' கடைகளைத் திறந்து விற்பனை செய்ய முயன்று வருகிறோம்'' என்று நம்பிக்கையூட்டுகிறார் பால்வளஅமைச்சர் மந்திரி கே.என்.நேரு. இதுதவிர இப்போது சென்னை நகரில் மாதாந்திர பால்கார்டு வாங்கும் வாடிக்கையாளர்கள் கட்டாயமாக ஒரு 'ஆவின் சுவையூட்டிய பால்' பாக்கெட் வாங்க வேண்டும் என நிர்பந்திக்கப்பட்டுள்ளார்கள்

இந்தக் கோமாளித்தனமாக முயற்சிகளால் தேங்கிக் கிடக்கும் பால் பொருட்களை முழுவதுமாக விற்பனை செய்ய முடியாது என்பதை அறிந்துதான் இப்போது பால் உற்பத்தியாளர்களான விவசாயிகளின் வயிற்றலடிக்க இறங்கியுள்ளன அரசும், 'ஆவின்' நிறுவனமும். அதிகார பூர்வ அறிவிப்பு இல்லாமலேயே கிராமப்புற கூட்டுறவு பால் சொசைட்டிகளிடமிருந்து பால் வாங்குவதை இப்போது அரசு நிறுத்திவிட்டது.

வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி அருகிலுள்ள கிராமத்தில் ஒரு பட்டதாரி குடும்பப்பெண், வங்கியில் ரூ.50,000 கடன் வாங்கி சொசைட்டிக்கு பால் கொடுத்து வந்தார். கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் வழக்கமாக பால் ''கேன்''களை ஏற்றிச் செல்ல வரும் லாரி, அவரது பால் கேன்களை ஏற்ற மறுத்துவிட்டது. மாவட்ட யூனியன் இயக்குனர் புதிய உத்தரவு போட்டுள்ளதால் ஏற்ற மாட்டோம் என்று ஊழியர்கள் கூறினர். அந்த கிராமத்திலேயே சொசைட்டிக்கு அதிகமாக பால் கொடுக்கும் அவருக்கே இந்த நிலைமை என்றால் மற்றவர்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. வழக்கமாக பாலின் கொழுப்பு விகிதம் குறைந்தால் அது மறுக்கப்படும். ஆனால் எந்த விகிதம் இருந்தாலும் மாவட்ட யூனியன் ஏற்க மறுத்து விட்டது.

அப்பெண்ணின் கணவர், மாவட்ட யூனியனின் நிர்வாக இயக்குனராக உள்ள சிவகுரு என்ற அதிகாரியைச் சந்தித்து, தயவுசெய்து ஒரு மாதகாலத்திற்கு பாலை ஏற்றுக் கொள்ளுமாறும் அதற்குள் மாற்று ஏற்பாடு செய்வதாகவும் கெஞ்சிப் பார்த்தார். ஆனால் அவரது கோரிக்கை ஏற்கப்படவில்லை. அப்படியானால் உங்களது உத்திரவை எழுத்து பூர்வமாகக் கொடுங்கள் என்று அவர் கேட்டார். அதிகாரி சிவகுரு அதற்கும் மறுத்துவிட்டார். வாணியம்பாடி மட்டுமல்ல; கிட்டத்தட்ட வடாற்காடு மாவட்டம் முழுவதும் இந்த அறிவிக்கப்படாத உத்திரவுதான் இப்போது திடலடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது தினசரி வழக்கமாக கொள்முதல் செய்யப்படும் 2.35 லட்சம் லிட்டரிலிருந்து 2 லட்சம் லிட்டராக குறைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. வடாற்காடு மாவட்டம் தவிர இன்னும் 7 மாவட்டங்களிலும் இதே போன்ற அறிவிக்கப்படாத உத்திரவு நடைமுறைப்படுத்தப்பட்டு, மொத்தத்தில் தமிழகம் முழுவதும் தினசரி வழக்கமாக கொள்முதல் செய்யப்படும் 13 லட்சம் லிட்டருக்குப் பதிலாக 11 லட்சம் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்த அறிவிக்கப்படாத அதிரடி நடவடிக்கை ஒருபுறமிருக்க, கொள்முதல் செய்யப்படும் பாலின் கொழுப்பு விகிதமும் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு முன் பாலின் கொழுப்பு விகிதம் 4.2லிருந்து 8.3ஆக இருந்தது. தற்போது 4.5லிருந்து 8.5ஆகவும் சில இடங்களில் இதைவிட அதிகமாகவும் கொழுப்பு விகிதம் கோரப்படுகிறது. இந்த தரத்திற்குக் குறைவான பால் ஏற்க மறுக்கப்படுகிறது.

அதிகார பூர்வ உத்திரவு இல்லாமலேயே கொள்முதலை திடீரெனக் குறைப்பது, கொழுப்பு விகிதத்தை உயர்த்துவது ஆகிய அடாவடித்தனமான நடவடிக்கைகளின் விளைவாக தமிழகத்தில் ஏறத்தாழ 5 லட்சம் பேராக உள்ள பால் உற்பத்தியாளர்களில் 30 சதவிகிதத்தினர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கிராமப் புறங்களில் குறிப்பாக ஏழை, நடுத்தர விவசாயிகளில் பலர் தங்கள் வாழ்வுக்கான உதவித் தொழிலாக பால் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயம் பொய்த்த காலங்களில் இத்தொழில் ஓரளவுக்கு அவர்களுக்குக் கைகொடுத்து வந்தது. ஆனால் அரசின் தற்போதைய நடவடிக்கையால் அவர்களது வாழ்வே பாழாகிவிட்டது.

கிராமப்புறங்களில் பாலுக்கு சந்தை கிடையாது. விவசாயிகள் நம்பியிருப்பது பால் சொசைட்டிகளைத்தான். ஆனால் அங்கேயும் கொள்முதல் செய்ய மறுத்தால், பாலை குறைந்த விலைக்கு தனியார் வியாபாரிகளுக்கு விற்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். இதனால் விவசாயிகள் பெரிதும் நட்டமடைவர். அல்லது தாக்குபிடிக்க முடியாமல் நல்ல கறவை மாட்டை அடிமாட்டு விலைக்கு விற்க நேரிடும். இதனால் வங்கியிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல், ஜப்தி நடவடிக்கைக்கு ஆளாகி போண்டியாக நேரிடும். அக்டோபரிலிருந்து தொடங்கும் பால் பெருகும் மாதங்களில்தான் விவசாயிகளுக்கு ஓரளவுக்கு வருவாய் கிடைக்கும். ஆனால் அதற்கு முன்னரே அரசு கொள்முதலைக் குறைத்துவிட்டது. இனி பால் பெருகும் மாதங்களில் என்ன செய்வது என்று புரியாமல் விவசாயிகள் பீதியில் உறைந்து போயுள்ளனர். சுருக்கமாகச் சொன்னால், அற்ப சொற்பவருவாயும் கிடைக்காததோடு நட்டப்படவேண்டிய அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அரசின் புதிய உத்திரவினால், குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்திலுள்ள பல விவசாயிகள் வேறுவழியின்றி டீக்கடைகளுக்கு ஒரு லிட்டர் பாலை ரூ.2க்கு விற்று நட்டப்பட்டு தவிக்கின்றனர்.

இவ்வளவுக்கும் பிறகும் எந்த மாவட்டத்திலும் பால் கொள்முதலைக் குறைக்கச் சொல்லி உத்திரவு வழங்கப்படவில்லை என்று கூசாமல் புளுகுகிறார் மந்திரி நேரு.

பாலும் தெளித்தேனும் பாகும் பருப்பும் கலந்து நக்கும் ஊழல் அதிகாரிகள் கூட்டமோ கோமாளித்தனமான ஆலோசனைகளை முன்வைத்து, விவசாயிகளை நோகடித்து குரூர இன்பம் காண்கிறது. வடாற்காடு மாவட்டத்திலுள்ள பல சொசைட்டி உறுப்பி



படிப்பகம்


ளர்கள் குழுவாகச் சென்று, மாவட்ட யூனிய னின் நிர்வாக இயக்குனரைச் சந்தித்து, உத்தி ரவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரிய போது, அவர் கொழுப்பு தரம் குறைந்த பால் தரும் மாடுகளை விற்றுவிடுங்கள் என்று 'புத் திசாலித்தனமாக' ஆலோசனை கூறினா ராம். அவரது ஆலோசனைப்படி மாடுகளை விற்றாலும், அவை அருகிலுள்ள ஏதாவது ஒரு கிராமத்தில் விற்கப்பட்டு, மீண்டும் அதே மாட்டின் பால்தான் சொசைட்டி மூலம் அனுப்பப்படும். மீண்டும் சிக்கல் தொடரும். இந்த சாதாரண விபரம் கூட தெரியாத அடி முட்டாள்கள்தான் இயக்குனர்களாகவும் அதிகாரிகளாகவும் இருந்து விவசாயிகளை ஆட்டிப்படைக்கின்றனர்.

சொசைட்டிகள் ஒருபுறமிருக்க, மறுபு றம், தரகு முதலாளிகள் விவசாயிகளை மறைமுகமாக ஒட்டச் சுரண்டிக் கொழுக் கின்றனர். மாட்டுத் தீவனம், செயற்கை புல், கால்நடை மருந்துகள் முதலான வற்றை உற்பத்தி செய்வதில் தரகு முதலா ளிகளே ஏகபோகமாக உள்ளனர். லாப வெறி கொண்டலையும் முதலாளிகள் இவற்றின் விலையை தொடர்ந்து உயர்த் திக் கொண்டே போகிறார்கள். இதனால் பால் உற்பத்தியாளர்களான விவசாயிகள் மேலும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்ற னர்.

விவசாயிகளைப் பொருத்தவரை கூட் டுறவு சொசைட்டிகளே மோசடியானவை. சாதாரண காலங்களிலேயே கொள்முதல் செய்யப்படும் பாலில் கொழுப்பு விகிதம் குறைவாக உள்ளது என்று ஏய்ப்பதும், கொழுப்பு தரம் குறைந்த ஒரு லிட்டர் பாலை வெறும் 60 பைசாவுக்கு கொள்மு தல் செய்து கொள்ளையடிப்பதும் வழக்க மாக உள்ளது. கிராமப்புறங்களில் பஞ்சா யத்து தலைவரை விட உண்மையில் சொசைட்டி தலைவர்தான் ஆதிக்கம் செலுத்துபவராக உள்ளார். பஞ்சாயத்து தலைவர் அதிகபட்சம் வட்டார வளர்ச்சி அதிகாரி மட்டம் வரைதான் செல்வாக்கு செலுத்த முடியும். ஆனால் சொசைட்டி தலைவர் வங்கி அதிகாரிகள் மட்டம் வரை செல்ல முடியும். அன்றாடம் புரளும் சொசைட்டி பணத்திலிருந்து விவசாயிக ளின் அவசரத்தேவைக்கு கடன் கொடுப் பது, வங்கி மூலம் கடன் வாங்கித்தருவது என்று கிராமப்புற ஒட்டு வங்கிகளைக் கைப்பற்றும் தளபதியாக, ஓட்டுக்கட்சி பிர முகராக மாறிவிடுகிறார். கிராமப்புற ஓட்டு வங்கிகளை இழக்க நேரிடும் என்பதா லேயே கூட்டுறவு சொசைட்டித் தலைவர்க ளாக இருந்த தமது கட்சிக்காரர்களின் ஊழ லைக்கூட எம்.ஜி.ஆர் கண்டுகொள்ளாமல் இருந்தார். கிராமப்புற ஓட்டு வங்கிகளைக் கைப்பற்றும் அதே நோக்கத்தோடுதான் ஆட்சிக்கு வந்த கருணாநிதியும் சொசைட்டி தலைவர்கள் அனைவரையும் பதவி நீக்கம் செய்தார்.

பால் உற்பத்தியாளர்களான விவசாயி களை ஓட்டாண்டிகளாக்கும் இன்றைய நெருக்கடிக்கு மூலகாரணமே ஏகாதிபத்தி யங்கள்தான். என்றைக்கு ஏகாதிபத்தியங்க ளின் ஆலோசனைப்படி இந்தியாவில் ''பால் வெள்ளம் பாய்ச்சும் திட்டம்'' (Operation Flood) புகுத்தப்பட்டதோ அன்றிலி ருந்தே பால் உற்பத்தி உள்நாட்டு விவகார மாக இருந்த பால் ஏகாதிபத்தியங்களுடன் பிணைக்கப்பட்டு விட்டது. நெருக்கடிகளும் தோன்றிவிட்டன.

ஐரோப்பிய நாடுகளில் ஏகாதிபத்திய அராஜக சந்தைப் போட்டியின் விளைவாக பால் மற்றும் பால் பொருட்களின் உற்பத்தி மலைபோல் குவிந்தது. ஆனால் உழைக்கும் மக்களிடம் வாங்கும் சக்தியில்லாததால் அவை விற்பனையாகாமல் தேங்கி கெட்ட முகத் தொடங்கியது. எனவே ஏகாதிபத்திய அரக்கர்கள் பாலையும் வெண்ணெயையும் ஆற்றிலே கொட்டினார்கள். கறவை மாடு களை வெட்டிப் புதைத்தார்கள். ஆனாலும் நெருக்கடி தீரவில்லை. எனவே ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் கூட்டமைப்பான,



ஐரோப்பிய பொருளாதாரக் குழுமத்தின் (இஇசி) திட்டப்படி தேங்கிக்கிடக்கும் பால் பொருட்களை இந்தியா போன்ற மூன்றாம் உலக ஏழை நாடுகளின் தலையில் கட்டி தமது நெருக்கடியின் சுமையைக் குறைக்க முயன்றன. மறுபுறம், மேற்கத்திய நாடுகள் பால் பவுடர் கொடுத்து உதவுகின்றன என்ற மலிவான பிரச்சாரத்தின் பின்னே, தனது கொடிய சுரண்டலை மூடி மறைக்கவும் பயன்படுத்திக் கொண்டன. இந்த வகையில் 70களில் இஇசியின் 'உதவி'யுடன் இந்தியா வில் 'பால் வெள்ளம் பாய்ச்சும் திட்டம்' கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் ''வெண்மைப்புரட்சி'' என்று ஆட்சியாளர் கள் விளம்பரப்படுத்தினர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து பால் பவுடரையும் வெண்ணெயையும் இறக் குமதி செய்வது; இதன் மூலம் நகர்ப்புற தேவைக்கான பால் உற்பத்தியைப் பெருக்கு வது; இதில் கிடைக்கும் தொகையைக் கொண்டு கிராமங்களில் பால் பெருக்குத் திட்டத்திற்கு தேவையான அடிக்கட்டுமான தேவைகளை நிறைவேற்றுவது - அதாவது கலப்பின மாடுகள் வழங்கல், பால் சேமிப்பு குளிர்பதன நிலையங்கள், நவீன புல்வகை கள், தீவன உற்பத்தியைப் பெருக்குவது, பின்னர் படிப்படியாக மேற்கத்திய நாடுகளி லிருந்து இறக்குமதியைக் குறைப்பது: இதன் மூலம் பால் துறையில் சுய சார்புடன் சுதேசித் தொழிலை வளர்த்து முன்னேறுவது என்று மயக்கு மொழிகளால் திட்டத்தை அளந்தார் கள். ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத தாம்! அதைப்போல இந்தியாவில் பால்வ ளம் பெருக ஏகாதிபத்தியங்கள் திடீர் கரி சனை காட்டின. இதன் மூலம் கிராமப்புற வறுமையும் வேலையின்மையும் ஒழியும் என்று அடிவருடிகள் பக்கமேளம் வாசித் தார்கள்.

இத்திட்டத்தின் முதல் கட்டம் 10 மாநி லங்களில் செயல்படுத்தப்பட்டது. ஐந்தாண் டுகள் முடிந்து விளைவைக் கண்டறியும் முன் னரே திட்டத்தின் இரண்டாவது கட்டம் துவங்கப்பட்டது. இரண்டாவது கட்டம் நாடு முழுவதும் விரிவடைந்தது. ஆனால் என்ன எதிர் பார்க்கப்பட்டதோ அதற்கு நேர் எதிரான விளைவுகளே ஏற்பட்டன.

ஒருபக்கம் ஏகாதிபத்தியங்களிடமிருந்து பால்பவுடர் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்பந்தம். மறுபக்கம் உள்ளூர் அளவில் பால் உற்பத்தியையும் பெருக்க வேண்டும். இரண்டு குதிரை மீதேறிக் கொண்டு பயணம் போக முடியுமா? இறக்குமதியாகும் பால் பவுடரிலிருந்து தயாரிக்கப்படும் பாலும், உள்ளூரில் உற்பத்தியாகும் பாலும் கிடங்குக ளில் நிரம்பி வழியத் தொடங்கின. எதிர் பார்த்த அளவுக்கு நகர்ப்புறங்களில் சந்தை இல்லை. வறுமை காரணமாக கிராமங்களி லும் பால் விற்பனையாகவில்லை. குறைந்த விலைக்கு விற்கவும் அதிகாரிகள் முன்வர வில்லை. அப்புறம் என்ன? தேங்கிய பாலை சாக்கடையில் கொட்டினார்கள். இப்படி 86-87ம் ஆண்டுகளில் வோர்லி பால் பண் ணையிலிருந்து தினமும் பல லட்சம் லிட்டர் பால் கடலில் கொட்டப்பட்டது.

கிராமப்புறங்களில் பால் உற்பத்திக்குத் தேவையான நவீன செயற்கை புல், புண் ணாக்கு உற்பத்தியும் வெட்டிச் சுருக்கப் பட்டு, படிப்படியாக கிராமப் புறங்களே புறக்கணிக்கப்பட்டன. கடைசியில் நகரங்க

www.padippakam.com
படிப்பகம்

ளில் பால் பொருட்களை குளிர்பதனம் செய்யும் வேலையில் நிதி அனைத்தும் குவிக்கப்பட்டது. ஏகாதிபத்தியங்களிடமிருந்து வண்டி வண்டியாய் பால் பவுடரும், பால் பண்டங்கள் தயாரிக்கும் இயந்திரங்களும் தொடர்ந்து இறக்குமதி செய்வதில் போய் திட்டம் முடிந்தது. நகரங்களில் ஐஸ்கிரீம், சுவையூட்டிய பால், பாலாடைக் கட்டி, பால் சாக்லெட்டுகள், பால் கோவா, லஸ்ஸி என்று உற்பத்தி செய்து குவித்தார்கள். அதுவும் அதிகார வர்க்கத்தின் கொள்ளைக்காக அநியாய விலை வைத்து விற்கப்பட்டதால் நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தினரால் கூட வாங்க முடியவில்லை. கடைசியில், காரிலே பவனிவரும் மேட்டுக்குடியினர் மட்டும் வாங்குவதாகச் சுருங்கி, அதற்கும் சந்தையில்லாமல் தேங்கி அழுகத் தொடங்கியது.

இப்படி ஒரு சுற்று நெருக்கடி முற்றத் தொடங்கியதும் அதற்குத் தீர்வாக 'வெள்ளம் பாய்ச்சும்' இரண்டாவது கட்டம் புகுத்தப்பட்டது. மீண்டும் ஏகாதிபத்தியங்களிடமிருந்து பால் பவுடர் இறக்குமதி செய்யப்பட்டது. 'வெள்ளம் பாய்ச்சும்' முதல் கட்டத்தை ஒப்பிடும்போது இரண்டாவது கட்டத்தின் துவக்க ஆண்டுகளிலேயே பால்பவுடர் 30 சதவீதமும், வெண்ணெய் 18 சதவீதமுமாக இறக்குமதி அதிகரித்தது. சுருக்கமாகக் கூறினால் பாலுக்காக மேலை நாடுகளிடம் நிரந்தரமாக கையேந்தவைக்கும் ஏகாதிபத்தியங்களின் சதித்திட்டம் வெற்றிபெற்றது. இந்த லட்சணத்தில் 87-ம் ஆண்டு முதலாக 'வெள்ளம் பாய்ச்சும்' மூன்றாவது கட்டம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பால் 'வெள்ளம் பாய்ச்சும்' முதலிரண்டு திட்டங்களின் விளைவாக, பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் திவாலாகிவிட்ட நிலையில், இப்போது மூன்றாவது கட்டத்திற்கென 68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு திட்டம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. மீண்டும் தமிழக விவசாயிகளின் வாழ்வைச் சூறையாடி போண்டியாக்க ஏகாதிபத்திய வாதிகளும் அதன் அடிவருடி ஆட்சியாளர்களும் கிளம்பிவிட்டார்கள்.

பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் சத்துணவின்றி இங்கே ஆண்டுதோறும் மாண்டு போகின்றன. பல லட்சக்கணக்கான இந்தியக் குழந்தைகள் ஊட்டச்சத்தின்றி ஒட்டிய வயிறும் கும்பிய கைகளுமாக உள்ளன. குழந்தைகள் தினமும் 200 மி.லி. பால் குடித்து வந்தாலே மிக எளிதில் தாக்கும் நோய்களிலிருந்து அவர்கள் தப்ப முடியும் என்று மருத்துவ அறிக்கையொன்று கூறுகிறது. ஆனால் இங்கே தினமும் பல லட்சம் லிட்டர் பால் சாக்கடையில் கொட்டப்படும் அயோக்கியத்தனம் தொடர்கிறது. மறுபுறம், சாதாரண உழைப்பாளி மக்களால் பால் வாங்க முடியாத அளவுக்கு, ஏறத்தாழ ரூ.4.50 லிருந்து ரூ.5 வரை அநியாய விலைக்கு விற்கப்படுகிறது. இனிமேலும் தமிழக விவசாயிகள் முடங்கிக் கிடக்காமல் ஏகாதிபத்தியம் மற்றும் அதன் இந்திய அருவடிகளுக்கு எதிராகப் போராட அணிதிரள வேண்டும். ஏகாதிபத்தியங்களின் வெண்மைப் புரட்சிக்கு எதிராக ஒரு சிவப்புப் புரட்சியைத் தொடுக்க கிளர்ந்தெழ வேண்டும்.

○ பாலன்

www.padippakam.com

## வடலூர் - நெய்வேலி செராமிக்ஸ் ஆலை:

# நிர்வாகத்தின் சதி! சங்கங்களின் துரோகம்!

நெய்வேலி அருகே வடலூரில் உள்ளது "நெய்வேலி செராமிக்ஸ் - ரி·்ப்ரேக்டரிஸ்" என்கிற தொழிற்சாலை. கழிப்பறை, குளியலறைகளுக்குத் தேவையான 'பீங்கான் - களிமண்' சாதனங்கள் மற்றும் அதிஉயர் வெப்பக்கொதிகலன்களுக்குத் தேவையான 'உருகா பீங்கான் - களிமண்கற்கள்' ஆகியன இந்த ஆலையின் முக்கிய உற்பத்தி.

கடந்த 25 ஆண்டுகளாகக் கடுமையாகப் பாடுபட்டு இந்த ஆலையை உருவாக்கிய நூற்றுக்கணக்கான நிரந்தர, தினக்கூலி மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் எதிர்கால வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்டது.

இந்த ஆலையிலேயே உழைத்து உருக்குலைந்துபோன 350 ஒப்பந்தத் தொழிலாளர்களும், 170 தினக்கூலித் தொழிலாளர்களும், 14 பயிற்சி ஊழியர்களும் ஏற்கனவே வேலையிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். 81 நிரந்தரத் தொழிலாளர்களைப் பணிமுடக்கம் செய்துவிட்டு மீண்டும் வேலையளித்துள்ளனர். மீண்டும் 117 நிரந்தரத் தொழிலாளர்களையும் 8 ஊழியர்களையும் பணிமுடக்கம் செய்துவிட்டனர்.

ஊதிய உயர்வோ, போனசோ, வேறு உரிமையோ கோரித் தொழிலாளர்கள் போராடியதால் இந்த நிலைமை உருவாகவில்லை. அப்படித் தொழிலாளர்கள் போராடி பத்தாண்டுகளுக்கு மேலாகிறது. இருந்தாலும் பீங்கான் - களிமண்ணோடு சேர்ந்து உலையிலே வெந்து கருகிப்போன மூத்ததொழிலாளர்களும், புதிய நம்பிக்கையோடு உழைத்த இளம் தொழிலாளர்களும் வேலையிழக்கும் அபாயம். எஞ்சியவர்கள் மீதோ மனித சக்திக்கும் மிதமிஞ்சிய அளவு வேலைச்சுமை ஏற்றப்படும் நிலை.

★ ஆலை நிர்வாகத்தின் லாபவெறி - தொழிலாளர் விரோத நடவடிக்கைகள்.

★ தொழிற்சங்கத் தலைமையின் பிழைப்புவாதம் - துரோகத்தனங்கள்.

★ ஓட்டுப் பொறுக்கிகளின் துணையோடு அரசு மேற்கொள்ளும் தொழிலாளர் விரோதக் கொள்கைகள்.

—இவைதான், மற்ற எல்லாத் தொழிற்சாலைகளைப் போலவே நெய்வேலி செராமிக்ஸ் - ரி·்ப்ரேக்டரிஸ் ஆலைத் தொழிலாளர்களின் இன்றைய அவல நிலைக்குக் காரணம். இந்த உண்மையைச் சொல்லும் தொழிலாளர்களை ஆலை நிர்வாகமும் துரோகத் தொழிற்சங்கத் தலைமையும் பழிவாங்குகின்றனர்.

### ஆலைக்குச் சொந்தக்காரன் யார்? அறியவேண்டிய சில உண்மைகள்

"மூலதனம் போட்டுள்ளான் முதலாளி! லாபமோ, நட்டமோ அவனுக்குத் தானே! தொழிலை நடத்துவதும், தொழிலாளியை வேலைக்கு வைப்பதும், நீக்குவதும் அவனுக்குள்ள உரிமை. தொழிலாளர்கள் ஏதோ கூலிக்கு வேலை செய்பவர்கள் தானே!" என்று பாமரத்தனமாக பல தொழிலாளர்கள் நம்புகின்றனர்.

"ஏதோ முதலாளியின் தயவிலே தொழிலாளிக்கு வேலை கிடைத்திருக்கிறது. முடிந்தவரை நயந்துபோய் சலுகைகளைப் பெறுவதுதான் தொழிலாளிக்கு நல்லது. இல்லையானால் ஆலையை மூடிவிட்டுப்போய் விடுவான்" என்றுதான் தொழிலாளர்களை மிரட்டி வைத்திருக்கிறார்கள் துரோகத் தொழிற்சங்கத் தலைவர்கள்.

இது எந்த அளவு உண்மை - நியாயம்? நெய்வேலி செராமிக்ஸ் - ரி·்ப்ரேக்டரிஸ் நிர்வாகத்தின் முகவிலாசத்தை - பூர்வீகத்தைப் பார்த்தாலே புரிந்துவிடும்!


அமெரிக்க வங்கி, அமெரிக்காவில் வாழும் இந்தியர் மூலதனத்துக்குத் தரகரான ஆந்திராவைச் சேர்ந்த டி.கிருஷ்ண பிரசாத் 1983 ஆம் ஆண்டு ஸ்பார்டெக் செராமிக்ஸ் இந்தியா என்ற கம்பெனியை ஆந்திரா - சித்தூரில் துவங்கினார். பீங்கான் களிமண் தரை ஓடுகளை உற்பத்தி செய்து வந்த இவர்கள் செராமிக்ஸ் தொழிலில் ஏகபோகத்தை நிறுவதற்குப் பேராசை கொண்டனர். வடலூர் - நெய்வேலி செராமிக்ஸ் - ரி·்ப்ரெக்டரிஸ் கம்பெனியின் மொத்தம் 21 லட்சம் பங்குகளில் 5 லட்சத்தை விலைக்கு வாங்கி டிசம்பரில் நிர்வாகத்தைக் கைப்பற்றினர். மேலும் ஒரு 21/2 லட்சம் பங்குகள் வாங்கிக் கொள்வதாக உறுதியளித்துள்ளனர்.

ஆனால் இதற்கான மூலதனமும்கூட புதிய நிர்வாகத்தினருடையது அல்ல. ஸ்பார்டெக் மற்றும் வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டது. இதே போலத்தான் பெரும் பங்கு சொந்த முதலீடு செய்யாமலேயே ஸ்பார்டெக்கம்பெனியின் நிர்வாக உரிமையை கிருஷ்ணபிரசாத் - வெங்கடேஸ்வரராவ் கும்பல் வைத்துக் கொண்டுள்ளது. இதேபோலத்தான் வடலூர் கம்பெனியின் தொழிலாளர்களை இதுவரை



படிப்பகம்

www.padippakam.com




சுரண்டி வந்த விசுவநாதன், மெஹ்ரா, சர்க்கார் முதலியவர்களும் ஆலையில் பெரும் பங்கு முதலீடு போட்டவர்கள் அல்ல. பொது மக்களிடமிருந்து பங்குகளாகவும் ஆயுள் காப்பீட்டுக்கழகம் (LIC) முதலிய அரசு நிதி நிறுவனங்களிடம் இருந்து நிதியாகவும் பெற்று முதலீடு செய்துவிட்டு நிர்வாக அதிகாரத்தை வைத்து பலவகைகளில் சுரண்டிக் கொழுத்தார்கள். கள்ளக்கணக்கு எழுதி பங்குதாரர்களை மோசடி செய்யும் கொழுக்கிறார்கள்.

அதைவைத்து வடலூர் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து ஈட்டிய லாபத்தைக் கொண்டுதான், அரசு சலுகைகளைப் பெறும் ஆசையினால் பாண்டிச்சேரியில் பீங்கான் களிமண் தரை ஓடு தொழிற்சாலையை பழைய நிர்வாகம் நிறுவியது. இத்தொழிற்சாலைகள் ஏற்கனவே நல்ல லாபத்தில் இயங்குவதனால்தான் இரண்டு மடங்கு விலை கொடுத்து பங்குகளை ஸ்பார்டெக் வாங்கியது.

ஆகவே, மொத்த முதலீட்டில் மிகச் சொற்ப அளவும், மொத்த பங்குகளில் கால் பகுதியும்தான் நிர்வாகத்தினர் போட்டுள்ளார்கள். ஆனால் தொழிலாளர்களோ, வெறும் கழிவுப் பொருளான களிமண்ணோடு சேர்ந்து வெந்து தினந்தோறும் 'உழைப்பு' என்ற மூலதனத்தை வேர்வையாகக் கொட்டி ஆலையை உருவாக்கியிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஒரு சிறுகும்பல் நிர்வாக அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு 'முதலாளி'யாகி தொழிலாளர் வயிற்றிலடிப்பது எந்தவகையில் நியாயமாகும்?

### நிர்வாகத்தின் நவீன - விரிவாக்கத் திட்டங்கள்; லாபவெறிக்குத் தொழிலாளர்களைப் பலியிடுவது

புதிய நிர்வாகம் பொறுப்பேற்றவுடன், "நமது பொருட்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி உள்ளது. எவ்வளவு வேண்டுமானாலும் உற்பத்தி செய்யுங்கள்" என்று கூறி ஊக்க ஊதியம் கொடுத்துப் பன்மடங்கு உற்பத்தியைப் பெருக்கியது. ஆனால் சில மாதங்களிலேயே "விற்பனை சரியில்லை; தேக்கம் ஏற்படுகிறது" என்று கூறி 170 தினக்கூலி மற்றும் 350 ஒப்பந்தத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தது. "கில்லன் II" என்ற உலையைப் பழுதுபார்த்துவிட்டு அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதாக ஏய்த்தது. ஆனால் சொன்னபடி பழுது பார்க்கவில்லை. அதுமட்டுமல்ல உற்பத்தித் திறனுக்கு அதிகமாக "லோடு" செய்யவைத்து 'புஷ்டேட்' உலையையும் பழுதடையவே 81 நிரந்தரத் தொழிலாளர்களைப் பணி முடக்கம் செய்தது.

இதெல்லாம் உண்மையில் தொழிலாளர்களின் போராட்ட உணர்வை நாடிபிடித்துப் பார்க்கவும் நிர்வாகத்துக்கு உதவியது. தனது லாபவெறி நோக்கத்துக்காக உற்பத்தி மற்றும் நிர்வாகத்தை நவீனப் படுத்துவது - மனிதவள மேம்பாட்டுத் திட்டம் என்கிற பெயரில் பாதிக்கும் மேலான தொழிலாளர்களை வேலையில் இருந்து விரட்டுவது; மீதம் உள்ள தொழிலாளர்களை வேலைப் பளுவை இருமடங்கு அதிகமாக்கி அவர்களைக் கசக்கிப் பழிவாங்குவது - என்கிற சதியின் ஒரு பகுதிதான்! நிர்வாகத்தின் இந்தச் சதிக்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் துணை போகவே இரட்டிப்பு லாபவெறியுடன் தொழிலாளர் விரோதத் திட்டத்தை நிர்வாகம் அமுலாக்குகிறது.

"சானிடரிவேர் தயாரிக்கும் பிற தொழிற்சாலைகள், உற்பத்தி முறைகளை நவீனப்படுத்தி எரிபொருள் சிக்கனப்படுத்தும் அடுப்பு/உலை, சிறந்த தொழில் முறைகளைம் கையாள்வதைப்போல நம் தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்களையும் நவீனப்படுத்த வேண்டும். தற்போதுள்ள அடுப்பு/ உலையில் ஏற்பட்டுள்ள குறைகளை நீக்கி உடனடியாக தொழிற்சாலையை மேம்படுத்த வேண்டும்"

அதாவது தற்போது பயன்படும் எரிபொருளுக்குப் பதிலாக இயற்கை வாயுவைப் பயன்படுத்தும் சிக்கனமுறை அடுப்பு/உலையை நிறுவப்போகிறார்கள்.

இந்த நவீனப்படுத்தும் திட்டங்களை ஏற்று நிதி உதவி அளிப்பதற்கு மூன்று நிபந்தனைகளை நிதி நிறுவனங்கள் விதித்துள்ளனவாம். விற்பனையை சீரமைப்பதோடு பின்வரும் இரு நிபந்தனைகள்:

- தொழிற்சாலையில் தேவைக்கேற்ப தொழிலாளர்களின் திறமையை மற்ற தொழிற்சாலைகளில் பின்பற்றுவதைப் போல பயன்படுத்த வேண்டும்.
- திறமையான உழைப்பின் மூலம் உற்பத்தியை பெருக்கி கடன்களை செலுத்தி, செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்கு என்ன அர்த்தம்? நிலக்கரி அடுப்பு/உலையை மாற்றிவிட்டு கியாஸ் - இயற்கை வாயு அடுப்பு/உலையை நிறுவுவது. 'வால்வை'த் திருகியதும் நொடியில் பற்றவைத்துவிட முடியும். மேலும் பீங்கான் களிமண் சாதனங்களை அச்சு வார்க்கவும், 'பாலீஷ்' செய்யவும் இன்ன பிறவற்றுக்கும் தானியங்கி இயந்திரங்கள் வந்திறங்கி துறைமுகத்திலே காத்துக்கிடக்கின்றன. இதனால் பாதிக்கும் மேலான தொழிலாளர்கள் வேலையிழப்பர். மீதிப்பேரின் வேலைச் சுமை இரட்டிப்பாகும். இவைதான் உற்பத்தியை நவீனப்படுத்துவது; தொழிலாளியின் உழைப்புத்திறனை உயர்த்துவது என்று நிர்வாகம் பசப்புகிறது.

இதெல்லாம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், லாபத்துக்காகவும் செய்யும் நடவடிக்கைகள்; தொழிலாளர் நலன்களில் அக்கறை கொண்டு ஸ்பார்டெக் நிர்வாகம் செய்பவை என்று புளுகுகிறார்கள். அதற்காகத்தான் ஸ்பார்டெக் கம்பெனி நெய்வேலி செராமிக்ஸின் பங்குகளில் முதலீடு செய்தும் நீண்டகால கடன்கள் கொடுத்தும் உதவியதாம்! தொழிலாளர்களை ஒட்டச் சுரண்டுவதற்கான தொழிலாளர் விரோத நவீன மற்றும் விரிவாக்கத் திட்டங்களையே தொழிலாளர்களின் வளர்ச்சிக்கான, நல்ல எதிர்காலத்துக்கான உத்திரவாதமென்று ஏய்க்கிறது நிர்வாகம்.

### துரத்தியடிக்கப்பட வேண்டிய துரோகத் தலைவர்கள்

தொழிற்சங்கத் துரோகிகள், கருங்காலிகளின் ஒத்துழைப்பின்றி எங்கேயும் எந்த வித தொழிலாளர் விரோத நடவடிக்கைகளையும் நிர்வாகம் நிறைவேற்றவே முடியாது. வடலூரிலும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் துரோகம், கருங்காலித்தனத்தை நம்பித்தான் அடுத்தடுத்துப் பல தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் நிர்வாகம் இறங்கியுள்ளது.

**சி.ஐ.டி.யு:** கோவைக்கு ரமணி, மதுரைக்கு குமார், திருச்சிக்கு உமாநாத் என்று தொழிற்சங்க வசூல் 'ராஜ்ஜியங்களை' ஒதுக்கியிருப்பதைப்போல தென்ஆற்காடு தொழிற்சங்க சுல்தானாக கோவிந்தராஜனை ஒதுக்கியுள்ளார்கள். நெல்லிக்குப்பம் தொகுதி எம்.எல்.ஏ.வான இந்த கோவிந்தராஜன் தான் வடலூர் ஆலை சி.ஐ.டி.யு தலைவர். இதுவரை தனது விசுவாசிகளைக் கொண்டு இயக்கி வந்தார். இப்போது தி.மு.

படிப்பகம்

www.padippakam.com

கவைச் சேர்ந்த அருமைநாதனை பொதுச் செயலாளர் ஆக்கியுள்ளனர். கோவிந்தராஜனும் அருமைநாதனும் ஒருவர் மீது ஒருவர் பழிபோட்டுக்கொண்டு தொழிலாளருக்குத் துரோகம் செய்கின்றனர். நிர்வாகத்தினருடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு ஒப்பந்தத் தொழிலாளர் முறையை உருவாக்கி, தமது பினாமிகளைக் கொண்டே ஒப்பந்தங்கள் (காண்டிராக்ட்) எடுத்து தொழிலாளர்களைச் சுரண்டுகிறார்கள்.

கேண்டீன் உணவு முதற்கொண்டு பாதுகாப்பு சாதனங்கள் வரை தொழிலாளர் உரிமைகளுக்கானவை எதையும் சி.ஐ.டி.யு பெற்றுத்தரவில்லை. ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம் உருவாக்கியுள்ள போதும் அவர்களை நிரந்தரமாக்கவோ வேலை நீக்கம் செய்வதைக்கூட எதிர்த்தோ எந்த நடவடிக்கையும் இல்லை. விரிவாக்கத் திட்டங்களைக் கொண்டுவந்து ஆட்குறைப்பு மற்றும் வேலைப்பளு ஏற்றுவதைக்கூட எதிர்க்கவில்லை. உயிராதாரமான இந்த பிரச்சினையை விட்டுவிட்டு, ''போனசு, இராமமூர்த்தி நினைவக நிதி வசூல்'' ஆகிய மாமூல் வேலைகளில் இறங்கித் தொழிலாளர்களைத் திசை திருப்பி விடுகின்றனர்.

**தொ.மு.ச:** கருங்காலித்தனம் செய்வதற்காகவே கருணாநிதி உருவாக்கியது தொழிலாளர் முன்னேற்றப் பேரவை. தலைவர் செ.குப்புசாமியின் பினாமியாக உள்ள தண்டபாணி தான் நிர்வாகத்துக்கு வலதுகரமாக இருந்து வடலூரில் ஆதிக்கம் வகிக்கிறார். ரௌடிக் கும்பலைவைத்து தொழிலாளர்களை மிரட்டுவார்; நிர்வாகத்தினருக்குப் பல கருங்காலித்தனம் செய்து சில சலுகைகளை வாங்கித் தருவார்.

பயிற்சிக்கும் வேலைக்கும் ஆள் சேர்ப்பதில் லஞ்சம்; நிறுவனத்தின் கழிவுப்பொருளை அகற்றுவது, நிறுவனத்துக்கு நிலம் வாங்குவது ஆகியவற்றில் கூட்டுப்பங்கு, நிறுவனத்துக்காக நடத்தப்படும் அரவிந்தோ பள்ளி வாடகையில் கமிஷன், இப்படிப் பல வகைகளிலும் சம்பாதித்துள்ளார் தண்டபாணி. தொழிலாளர்களின் வேலைப்பளுவை ஏற்றிக்கொண்டே போகும் அதே சமயம் தண்டபாணி போன்ற சங்கத்தலைவர்கள் வேலை நேரத்தில் வெளியே சுற்றித் திரியவும் அனுமதிக்கிறது. இந்தக் காரணங்களால் நிர்வாகத்தின் எல்லாத் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கும் துணை நிற்கிறது தொ.மு.ச.

**மற்றசங்கங்கள்:** ஒரு காலத்தில் பெரிய சங்கமாக இருந்த அண்ணா தொ.மு.ச பதவி வெறி, சாதி வெறி, அதிகார முறைகேடுகளினால் சரிந்து போய் பெயர் பலகை சங்கமாகவே உள்ளது. அகில இந்திய கருங்காலிகள் காங்கிரசான ஐ.என்.டி.யு.சியும் பலவீனமானது தான். சி.ஐ.டி.யு நடத்திய 6 மாத போராட்டத்தைக் கருங்காலித்தனம் செய்து உடைத்த கலையரசன் உருவாக்கியது நெய்சர் ஊழியர் யூனியன்; இப்போது 15 தொழிலாளர்களோடு ஐ.என்.டி.யு.சியுடன் சங்கமித்து விட்டது.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் டிப்ளமா என்ஜினியர் சங்கத் தலைவர் பண்டரிநாதன் தலைமையில் வடலூர் ஆலை ஊழியர்களுக்கான சங்கம் தனியே உள்ளது. வேலையை விட்டு நமது கழகம் சார்பாக 1984 தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுப் போன பண்டரிநாதனை சட்டவிரோதமாக மத்திய அரசு நிறுவனமே எடுத்துக் கொண்டுள்ளது. தனது உறுப்பினர்களையே வேலை நீக்கம் செய்தபோதும் எதிர்க்கத் துணியாத துரோகத் தலைமைதான் இவர்கள்.

★ ☆ ★

1980 வரை ஒரே சங்கமாக இருந்த தொழிலாளர்களை இந்தத் துரோகிகள் மேற்கண்டவாறு கூறுபோட்டுக் கொண்டு தலைவர்களாகி விட்டனர். அவர்கள் அனைவரும் தொழிற்சங்கம் என்கிற பெயரில் நடத்துவது தரகு வேலைதான் - பிழைப்புத்தான். தொழிலாளர்களின் எதிர்காலம் எக்கேடு கெட்டாலும் தங்களுக்குத் தேவை சந்தா தான் என்று வசூல் வேட்டையைத் தொடர்கிறார்கள். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் போதும் கூட ''போராடினால் ஆலையை மூடிவிடுவான்; எதுவும் பேச வேண்டாம், இப்போதைக்குத் தற்காப்பு நிலைதான் சாத்தியம்'' என்று தொழிலாளர்களை மிரட்டிக் காயடித்து வருகிறது சி.ஐ.டி.யு.

''வேலை கொடு! இல்லையேல் நிவாரணம் கொடு!'' ''வேலை வாய்ப்பை அடிப்படை உரிமையாக்கு!'' என்று கோரி ஜனநாயக வாலிபர் முன்னணியில் இளைஞர்களை உறுப்பினராக்கி, மாநாடு கூட்டி, ஊர்வலம் நடத்துகிறார்கள், போலிக் கம்யூனிஸ்டுகள். இங்கே தொழிலாளர்கள் வேலையிழக்கவும், வேலைப்பளுவை ஏற்றவும் உடந்தையாக இருக்கிறார்கள்.

**போலி சங்கங்களை நிராகரியுங்கள்!**
**புதிய, புரட்சிகர சங்கத்தை உருவாக்குங்கள்**

நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளையும், சங்கத் தலைமையினரின் துரோகம் - கருங்காலித்தனத்தையும் எதிர்ப்பது என்று சில தொழிலாளர்கள் இப்போது துணிந்து விட்டார்கள்.

✱ சில தொழிலாளர்கள் மூலமாக ஆலையின் பொருட்களைத் திருடிக் கொள்ளையிட்டு வந்த ஆலை அதிகாரிகள் மட்டும் தண்டனையின்றி தப்பித்துக் கொள்வது. இந்த நிறுவனத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு வேறு நிறுவனத்திற்கு வேலை செய்து அதிகாரிகள் சம்பாதிப்பது. வேலைக்கு ஆளெடுப்பதில் லஞ்சம் வாங்குவது - ஆகிய முறைகேடுகளை புதிய கலாச்சாரம் வாசகர் வட்டம், நெய்வேலி சிராமிக்ஸ் ஆலை தொழிலாளர் நலக்குழு, நெய்வேலி - வடலூர் தொழிலாளர் பிரச்சாரக்குழு ஆகியவை சார்பாக அம்பலப்படுத்தப்பட்டது.

✱ ஊக்க ஊதியத்துக்காக உபரி உற்பத்தி செய்வதை நிறுத்தி ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்தும், வேலைப்பளுவைக் குறைத்தும் தொழிலாளர் வேலை நீக்கம்

## அதிகாரிகள் - காண்டிராக்டர்களின் கூட்டுக் கொள்ளைக்கு எதிராக...

**தி**ருச்சி - பொன்மலை இரயில்வே பணிமனையில் நடந்துள்ள அதிகாரிகள் - காண்ட்ராக்டர்களின் கூட்டுக்கொள்ளையை தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வரும் தொழிலாளர் பிரச்சாரக் குழு, 14.8.89 அன்று பொன்மலை ஆர்மரிகேட் எதிரில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்திற்கு தொ.பி.குழு அமைப்பாளர் தோழர் முருகானந்தம் தலைமையேற்று, தொழிற்சங்கத் தலைவர்கள் அதிகாரிகளிடம் எப்படி அடிமைகளாக உள்ளார்கள், துரோகமிழைக்கிறார்கள் என்பதை விளக்கியும், புதிய புரட்சிகர தொழிற்சங்கத்தைக் கட்டியமைக்க வேண்டிய அவசியம் பற்றியும் பேசினார். கூட்டத்தில் தொ.பி.குழுவைச் சேர்ந்த தோழர் இராசேந்திரன், திருச்சி ம.க.இ.க. தோழர் தமிழ்மணி, தஞ்சை ம.க.இ.க. செயவர் தோழர் காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்ட முடிவிலும் இடையிடையேயும் ம.க.இ.க. கலைக்குழுவினரின் புரட்சிகர இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

ஏறத்தாழ மூன்று மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தை ஊழலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆர்மரிகேட்டிலுள்ள சரஸ்வதி மஹாலில் மறைந்திருந்து கேட்டனர். ஆளும்வர்க்க எடுபிடி தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சி.யின் தலைமையின் கீழான சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர்களும், போலிக் கம்யூனிஸ்டு தொழிற்சங்கத்தைச் சேர்ந்த முன்னணியாளர்கள் சிலரும் தொ.பி.குழுவின் வளர்ச்சியைக் கண்டு நிலைகுலைந்து தாறுமாறாகப் பேசித் திரிகின்றனர்.



ஆனால் அதேசமயம் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் தொ.பி.குழுவை ஆதரித்து நிதி தருவதும், ஊழல் பற்றிய புதிய விபரங்கள் தொடர்ந்து வெளிவருவதும் ஊழல் அதிகாரிகள் மற்றும் துரோகத் தொழிற் சங்கத் தலைவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

**தகவல்:**
**தொழிலாளர் பிரச்சாரக்குழு, பொன்மலை கிளை.**



படிப்பகம்

www.padippakam.com

செய்வதையும். பணி முடக்கத்தையும் தடுக்க முடியும். ''திறமையான உழைப்பின் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது, நவீனப்படுத்துவது. மனிதவள மேம்பாடு'' போன்றவை தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் - என்று வாயிற்கூட்டங்கள், பிரசுரங்கள் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இதனால் தொழிலாளர்கள் விழிப்புற்று ஆதரவு பெருகியது கண்டு அஞ்சிய நிர்வாகமும், தொ.மு.ச - சி.ஐ.டி.யு துரோகத் தலைமையும் சேர்ந்து அடக்குமுறை நடவடிக்கைகளில் இறங்கினார். இந்த இயக்கங்களை நடத்திய தொழிலாளர்களை, ''விஷமிகள், வதந்தியைப் பரப்புபவர்கள், பிட் நோட்டீஸ்காரார்கள்'' என்ற அவதூறுப் பிரச்சாரம் செய்தார்கள். ''நக்சலைட்டுகள், தீவிரவாதிகள்'' என்று தொழிலாளர்களிடையே பீதியை உருவாக்கித் தனிமைப்படுத்த முயன்றார்கள்.



தொழிலாளர்களை விழிப்படையச் செய்யும் முன்னணித் தோழரான அ.மு. கலைச்சித்தனை தனிப்பட்ட முறையிலும், நிர்வாகத்தின் மூலமாகவும் பழிவாங்கப் போவதாக பகிரங்கமாகவே மிரட்டினார், தொ.ச.மு. தண்டபாணி. வாயிற்கூட்டத்தின் மீது குண்டர்களை ஏவி கலைக்கவும், தாக்கவும் முயன்றார். முடியாமல் போகவே தொழிலாளர்களை ஏசிவிட்டுப் போயினர். போலிக் கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. கோவிந்தராஜன், ''கலைச்சித்தனை ஏன் வளர விடுகிறீர்கள். நம்மையே இல்லாமல் ஆக்கிவிடுவார்களே. அவன்களெல்லாம் எம்.எல். பார்ட்டியாச்சே!'' என்று பீதியில் உளறியிருக்கிறார்.

பீதியடைந்த நிர்வாகமும் தோழர் கலைச்சித்தனை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது. ''ஆலையின் பிரதான வாயிலருகே பெருந்திரளான தொழிலாளர்களைத் திரட்டி கம்பெனியின் கொள்கை நடைமுறைக்கு எதிராக பொறுப்பற்ற முறையில் பேசி, நிர்வாகத்துக்கெதிராக அதிருப்தியைத் தூண்டி, தொழிலாளர் வழமையான பணியாற்றுவதற்கு எதிராக உற்பத்தியைக் குறைக்கும்படி தூண்டியதாக'' குற்றஞ் சாட்டினர்.

ஏற்கனவே விழிப்படைந்து ஒருநாள் திடீர் வேலை நிறுத்தம் செய்திருந்த தொழிலாளர் கலைச்சித்தனைத் தற்காலிக வேலை நீக்கம் செய்ததற்கு எதிராக தன்னெழுச்சியான வேலை நிறுத்தம் செய்தனர். சி.ஐ.டி.யு - தொ.மு.ச.வின் குட்டித் தலைவர்கள் உருட்டி மிரட்டியும் கூட அவர்களோடு ஒரு சில கருங்காலிகள், பயந்தவர்கள் தவிர 90% தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். ஐ.என்.டி.யு.சி, அ.தொ.மு.ச வினர் சமரசம் செய்து தற்காலிக வேலை நீக்கம் பற்றி ''நல்ல முடிவு'' சொல்வதாக நிர்வாகம் உறுதியளித்த பின் வேலையைத் துவங்கினார்கள்.

கலைச்சித்தனின் விளக்கத்தை நிராகரித்துவிட்டு அவருடைய உறவினர்கள் மூலமும் அதிகாரிகள் மூலமும் மன்னிப்பு எழுதிக்கொடுக்கும் படி நிர்வாகம் நிர்பந்தித்து தூது விடுகிறது. ஏற்கனவே நூற்றுக்கணக்கான தொழிலாளர் வேலை நீக்கத்தைத் தட்டிக் கேட்காத சி.ஐ.டி.யு, கலைச்சித்தன் விவகாரத்தைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சியடைந்திருந்தது. தொழிலாளர்கள் இடித்துக் காட்டிய போது, தன்னிடம் அவர் முறையிடவில்லை என்றும், தங்கள் சங்கமில்லை என்றும் கூறித்தட்டிக் கழித்தனர். உண்மையில் கலைச்சித்தனிடம் சந்தாத் தொகை - நன்கொடை பெற்றுக்கொள்ள மறுத்து சங்க உறுப்பினர் தகுதியை புதுப்பிக்க மறுத்து வந்தது. கூட்டத்திலேயே தொழிலாளர்கள் கேள்வி எழுப்பி, காங்கிரசுக்காரர்களை விட மோசமானவர்கள் என்று காறி உமிழ்ந்தபோது, திடீரென்று பேச்சை முடித்துக் கொண்டு சி.ஐ.டி.யு.வினர் ஓடிவிட்டனர்.

''சி.ஐ.டி.யு.தான் நாட்டிலேயே பெரிய, புரட்சிகரத் தொழிற்சங்கம்; அதனால்தான் தொழிலாளர்களைப் பாதுகாக்க முடியும்!'' என்பது அண்டப்புளுகு - ஆகாசப் புளுகு! சி.ஐ.டி.யு.தான் பெரிய தரகுக்கம்பெனி - வசூல் சக்கரவர்த்திகள் நிறைந்தது என்பதுதான் உண்மை! கொடிக்கம்பம், தலைவனுக்கு வாடகைக்கார், தேர்தல் நிதி, அலங்கார வளைவு முதல் குட்டித்தலைவர்களின் வீட்டு விழா வரை அனைத்துக்கும் நிர்வாகத்திடம் நேரடியாகவே மடிப்பிச்சை எடுப்பார்கள்.

சி.ஐ.டி.யு. தலைமையிலான போராட்டங்கள் பெரும்பாலும் தோல்வியும் - தொழிலாளர்களைப் பழிவாங்குவதாகவுமே முடிந்துள்ளன. 1979-80 டி.வி.எஸ், திருச்சி சிம்கோ மீட்டர்ஸ், நெய்வேலி சிராமிக்ஸ் போன்ற போராட்டங்கள் தோல்வியில் முடிந்த பிறகு அது இதுவரை எந்தப் போராட்டமும் நடத்தத் துணியவில்லை. டி.வி.எஸ், சிம்கோ மீட்டர் தொழிலாளர்கள் நூற்றுக்கணக்கில் பழிவாங்கப்பட்டும் சி.ஐ.டி.யு. ஒன்றும் செய்ய முடியவில்லை. சி.ஐ.டி.யு தலைமைக்குப் போராட்டமே நடத்தவும் தெரியாது. ஏதாவது கோரிக்கை போராட்டமென்றால் ஆலைக்கு வெளியே கொட்டகை போட்டுக்கொண்டு கொடி பிடித்து மாதக்கணக்கில் கோஷம் போடுவது தவிர எதுவும் செய்யத் துணிந்ததில்லை. தொழிலாளர்களை நிர்வாகத்தின் அடியாட்களும் - கருங்காலிகளும் தாக்கும்போது தற்காப்புத் தரவும் முடியாது.

மாதக்கணக்கில் பட்டினி கிடக்கும் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தி, ஐவர் குழு - போட்டி சங்கம் அமைத்து, மன்னிப்பு எழுதி வாங்கிக்கொண்டு வேலைக்கு வரும்படி நிர்வாகம் அழைக்கும். வேறுவழியின்றி தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவர், முன்னணித் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டு - சட்டபூர்வ வழிகளில் சங்கம் இழுத்தடிக்கும். இத்தனைக்கும் பொதுக்கூட்டம், ஊர்வலம் உண்டியல் வசூல் தவிர, ஏற்கனவே பட்டினி கிடக்கும் தொழிலாளியை உண்ணாவிரதம் உட்கார வைப்பார்கள். நிர்வாகத்துக்கு நிர்பந்தம் கொடுக்கும் ''கெரோ-முற்றுகை'' போன்ற போராட்டங்களை நடத்த மாட்டார்கள்; மற்ற ஆலைத் தொழிலாளர்கள், மற்ற பிரிவு மக்களோடு இணைய மாட்டார்கள். நிர்வாகத்தினரின் தாக்குதலை முறியடிக்க தற்காப்பு ஆயுதமேந்த விடமாட்டார்கள்; தொழிலாளர்களுக்கு அரசியல் பயிற்சி அளிக்க மாட்டார்கள். இதையெல்லாம் சொன்னால் தீவிரவாதிகள், நக்சலைட்டுகள் என்று பீதியூட்டுவார்கள். தொழிலாளர்கள் தாமே எந்த நடவடிக்கைக்குப் போனாலும் நிர்வாகத்தின் பலத்தைக்காட்டி, சட்டத்தைக்காட்டி மிரட்டி காந்தீய போதனையளிப்பார்கள். அதையும் மீறிப்போனால் நிர்வாகத்துக்கே சகத்தொழிலாளர்களைக் காட்டிக் கொடுப்பார்கள்.

ஆகவே, சி.ஐ.டி.யு. உட்பட எல்லா துரோகத் தொழிற்சங்கங்களையும் நிராகரித்து விட்டு புதிய புரட்சிகர தொழிற்சங்கத்தில் தொழிலாளர்கள் திரளுவதுதான் ஒரே வழி! நிர்வாகத்துக்கு நிர்பந்தமளிக்கும் வகையிலான போராட்டங்கள், தற்காப்பு மற்றும் அரசியல் பயிற்சி, மற்ற ஆலைத்தொழிலாளர்கள், விவசாயிகளோடு கூட்டு ஆகியன அடங்கிய புதிய வழிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்கள் தம்மையும் தம் வேலையையும் காத்துக்கொள்ள முடியும்.

தற்போது வடலூர்-நெய்வேலி செரமிக்ஸ் ஆலை நிர்வாகம் கொண்டு வரும் நவீனப்படுத்துவது, உற்பத்தித்திறனை அதிகரிப்பது போன்ற திட்டங்கள் மத்தியில் ஆளும் பாசிச ராஜீவின் புதிய பொருளாதாரக் கொள்கையில் விளைவுதான்! எம்.ஜி.ஆர் - கருணாநிதி கட்சிகள் தமது பதவியைப் பாதுகாத்துக் கொள்ள அதை அப்படியே ஆதரிக்கின்றன. 'புதிய பொருளாதாரக் கொள்கை'யை எதிர்ப்பதாகப் போலிக் கம்யூனிஸ்டுகள் கூறினாலும் மேற்கு வங்கம் கேரள மாநிலங்களில் இவர்களே அதை அமுலாக்குகின்றனர். வங்கிகள், தபால் தந்தித் துறை, எல்.ஐ.சி. போன்ற அரசு நிறுவனங்களில் அமுலாக்குவதை ஆதரிக்கிறார்கள். எனவே அனைத்து ஓட்டுக்கட்சிகளுக்கும் எதிராக போராடுவதன் மூலமே அவர்களின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை முறியடிக்க முடியும்.

● கரீம்

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

www.padippakam.com



சிகிச்சை பெற்றனர். அதில் முத்து என்ற வயது முதிர்ந்த பணியாளர் இறந்து போனார். அப்போதுதான் வெளியில் வந்தது. அங்கு கலக்கப்பட்டிருந்தவை 'சயனைட்' விஷம் என்று.

ஏறக்குறைய, 700 டன்கள், 'சயனைட்' விஷம் அங்கு கள்ளத்தனமாக கொட்டப்பட்டிருக்கிறது. அச்சுற்று வட்டாரத்தில் இருக்கும் தொழிற்சாலைகளிலிருந்து ஆலை கழிவுகள் அங்கு கொட்டப்படுவது வழக்கமான ஒன்று. இந்த முறை 'சயனைட்' விஷத்தையே கொட்டிவிட்டுச் சென்று விட்டனர்.

போலீசும் அதிகாரவர்க்கமும். கண்துடைப்புக்காக, கழிவைக் கொட்டிய பழனி என்ற லாரி டிரைவரை குற்றவாளியாக்கி இருக்கிறது 'சயனைட்' விஷத்தால் இறந்த முத்து என்ற துப்புரவாளர், தற்கொலை செய்து கொண்டு இறந்து விட்டதாக ஜோடித்துவிட்டது, போலீசு.

சுத்தம், சுகாதாரத்தை மக்கள்தான் கெடுப்பதாக அரசு பிரச்சார சாதனங்கள் மூலம், மக்களை அவமானப்படுத்துவது ஒரு புறம். சமூக சேவை, எதிர்ப்பு நடவடிக்கை என்று, அரசாங்க பெருச்சாளிகளே துடப்பத்தை கையில் வைத்துக் கொண்டு 'காமிரா' வுக்கு 'போஸ்' கொடுப்பது ஒருபுறம். நச்சுக் கழிவுகளைக் கொட்டும், சுற்றுசூழலைக் கெடுக்கும், குற்றவாளிகளிடம் கையூட்டு பெறுவது மறுபுறம். இந்த பம்மாத்துக்காரர்களை, நச்சுக்கழிவுகளுடன் சேர்த்து நாம் புதைப்பது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா

இவர்கள் யார்? 21 ஆம் நூற்றாண்டு இளைய பிரதமர் ராஜீவ் காந்தியின் 'பொற்கால' ஆட்சியின், தோட்டிகளா?

'சபாரி - கோட்டு-சூட்டு - டை'யுடன் குப்பையே இல்லாத இடத்தைக் கூட்டுவதற்கு இவ்வளவு போட்டியா? ஆந்திர அரசு, காங்கிரசு வீற்றிருக்கும் ஹைதராபாத் - மாநகராட்சிக்குப் போதுமான நிதி, பணியாளர்களை ஒதுக்கவில்லையென்பதால், இப்படித் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கிறார்கள், காங்கிரசு 'மேயர்'கள். மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தை வெட்டிக் குறைக்கும் ராஜீவ் காந்தியின் 'நகர்பாலிகா' - புதிய நகராட்சிக் கொள்கையை வானளாவப் புகழ்ந்தனர்.

என்.டி.ஆர். அரசுக்குப் பாடம் புகட்டுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டனர்.



சென்னை - கொடுங்கையூர், எழில்நகர் அருகே கால்வாயில் வழக்கம்போல் தம் மாடுகளைத் தண்ணீர் காட்டினார், மூதாட்டி ஜெகதாம்மாள். சில நிமிடங்களில் வாயில் நுரைத்தள்ளி இழுப்புக்கண்டு தண்ணீரில் மிதந்தன எருமைகள். கை-கால் கழுவியவர்கள், மாட்டைக் குளிப்பாட்டியவர்களுக்கு உடலெல்லாம் அரிப்பு, கண் எரிச்சல்

7 நாட்கள் கழித்து சென்னை மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும், மாநகராட்சியும் வந்தன. என்ன கழிவு என்றுகூட சொல்லாமல், பெயருக்கு சில கண்துடைப்பு வேலைகளைச் செய்துவிட்டு சென்றன. கழிவுகளை அகற்றும் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட 7 ஊழியர்களுக்கும் வாந்தி, அரிப்பு, கண் எரிச்சல்; மருத்துவமனையில் ஒரு வாரம்

படிப்பகம்